புத்தார்வச் சிறுகதைகள்

ஆசிரியர்
பன்மொழிப் புலவர்,
திரு. கா. அப்பாத்துரை அவர்கள்,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
லிமிடெட், திருநெல்வேலி :: சென்னை-1

1953

...க வெளியீடு: கூஎஎ

புத்தார்வச் சிறுகதைகள்

ஆசிரியர்:
பன்மொழிப் புலவர்,
திரு. கா. அப்பாத்துரை அவர்கள், எம். ஏ., எல். டி..

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Nov., 1953.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

கற்பனை, படிப்பினை, கருத்தாழம், இனியநடை முதலிய அனைத்தும் ஒருங்கு சேர்ந்து விளங்கும் கதைநூல்களைச் சிறுவர் சிறுமியர் உவகையுடன் விரும்பிக் கற்று மகிழ்வர். அஃதுடன் புத்தார்வம் தரத்தக்க உணர்ச்சிமிக்க கதைக் கோப்பும் அமைந்திருப்பின் இளமாணவர் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

இத்தகு சுவைமலிந்த கதைநூல்களை அவ்வக் கதை நயத்திலீடுபட்டுக் கற்கக்கற்க மாணவர் மொழியாற்றலும், கற்பனைத் திறமும் பெற்றுச் சிறந்து விளங்குவதுடன், கல்விகற்பதில் பேரார்வம் கொள்வர் என்பது எம் துணிபு.

எனவே, இந்நூலில் புத்தார்வமூட்டும் நான்கு கதைகளை இணைத்துப் 'புத்தார்வச் சிறுகதைகள்' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளோம். பன்மொழிப் புலவர், திரு. கா. அப்பாத்துரை அவர்கள், எம். ஏ., எல். டி. எளிய இனிய செந்தமிழ் நடையில் இந்நூலை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

தமிழகம் எம் பிறவெளியீடுகளைப்போல இந்நூலையும் விரும்பி வரவேற்று, விழுமிய பயன் எய்துமென நம்புகின்றோம். ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் நற்பயன் எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை



கீவ் கோக்குவாவைச் சந்தித்தல்

புத்தார்வச் சிறுகதைகள்

க. புட்டிச்சாத்தன்

ஹவாய்த்[1] தீவில் ஓர் ஊரில் ஓர் ஏழை இருந்தான். அவன் பெயர் கீவ். அவன் ஓர் இளைஞன். அவனுக்குத் திடமான உடல் இருந்தது; அழகிய தோற்றம் இருந்தது; அந்தத் தீவிலுள்ள மக்கள் பேசிய மூன்று நான்கு மொழிகளையும் அவனால் திருத்தமாகப் பேசவும் எழுதவும் முடியும். அத்துடன் அவன் சுறுசுறுப்பானவன். ஆனால், இத்தனையும் இருந்தும், அவன் எப்படியோ ஏழையாகவே காலங்கழித்து வந்தான்.

அயல் நாடுகளுக்குச் சென்றால், தன்னைப் பிடித்த ஏழ்மை தன்னைவிட்டுப் போகக்கூடும் என்று அவன் எண்ணினான். தன் வீடு வாசல் எல்லாவற்றையும் விற்று இருநூறு வெள்ளிகளுடன் அவன் புறப்பட்டான். கொழும்பு, சென்னை, சிங்கப்பூர், ஷாங்ஹாய்[2] முதலிய நகரங்களை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, அவன் சான்ஃபிரான்சிஸ்கோ[3] நகரத்துக்குச் சென்றான்.

சான்ஃவிரான்சிஸ்கோவின் அழகு கீவின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. வீடுகளும் தெருக்களும்

1. Hawaii Islands. 2. Shanghai. 3. San Francisco.

வாழ்வதற்காக மட்டுமல்ல, அழகு பார்ப்பதற்காகவும் கட்டமைக்கப்பட்டன என்று தோன்றிற்று. பகலெல்லாம் நகரைச் சுற்றிப்பார்த்தபின், மாலையில் அவன் நகர்ப்புறத்தில் உள்ள அழகிய துறைமுகத்தையும், அதையடுத்துள்ள குன்றையும் சுற்றி உலாவினான்.

துறைமுகம், சலவைக்கல்லால் செதுக்கி உருவாக்கப்பட்ட தெப்பக்குளம் போலக் கிடந்தது. அதில் தங்கி மிதந்த பெரிய கப்பல்கள், தூங்குகிற பெரு முதலைகளைப்போலவும், அவற்றினிடையே திரிந்த மற்றச் சிறு கப்பல்களும் படகுகளும் அவற்றைச் சுற்றி விளையாடும் குட்டி முதலைகளைப் போலவும் காட்சியளித்தன.

கிவ் துறைமுகத்திலிருந்து குன்றின் பக்கமாகச் சென்றபோது ஞாயிறு செவ்வண்ணமடைந்து கடல் நீரையெல்லாம் பொன்னாகவும், மலைக்குவட்டையெல்லாம் பவளமாகவும் மாற்றியிருந்தது. குன்றின் அடிவாரமெங்கும் பசுஞ் சோலைவனங்களாயிருந்தன. அவற்றினிடையே அழகிய வேலைப்பாடமைந்த சிறு மாடங்களும் பெருங் கூடங்களும் இடமகன்ற அரண்மனைகளும் இருந்தன.

ஹுவாயில் பல கட்டடங்களைப் பார்த்து அவன் பொறாமைப்பட்டதுண்டு. ஆனால், 'அந்தக் கட்டடங்களுக்கு உரிய செல்வர்கள் இங்கே வந்தால், இந்த மாடகூடங்களைப் பார்த்துப் பொறாமைப்படாமலிருக்கமுடியாது,' என்று கிவ் தனக்குள் கூறிக்கொண்டான்.

குன்றில் அவன் நெடுந்தொலை ஏறிவிட்டான். சோலைவனங்கள் முடிவுற்றுக் கடும்பாறை கண்ணுக்கெதிரே தோன்றிற்று. 'இனித் திரும்பவேண்டியது தான்,' என்று தனக்குள் சொல்லியவண்ணம் அவன் தன்

பார்வையைத் திருப்பினான். அச்சமயம் அவன் கண் முன் கண்ட காட்சி அவனை அப்படியே மலைக்கவைத்து விட்டது!

அரண்மனைகளைவிடச் சிறிய ஒரு மாளிகை அது! ஆனால், அதன் ஒவ்வொரு அங்குலத்திலும் அரண்மனைகளின் அழகு குழைத்து வைக்கப்பட்டிருந்தது. மற்ற அரண்மனைகளில் அவன் மணிகளைக் கண்டால் இதில் மணிகளின் மணியாகிய முத்தைக் கண்டான் என்று கூறலாம். அதன் தோட்டங்கள் சித்திரங்கள் போன்றிருந்தன. சித்திர வடிவம் தோன்றச் சிதறிப் பாய்ந்த ஊற்றுக்கள், அவற்றைக் கேலிசெய்யும் கலையின் சிரிப்பொலிகளாகக் காட்சியளித்தன. சுவர்கள் வண்ணப் பளிங்குகளாக ஒளிநிழல் வீசின. கதவுகளும் பலகணிகளும் வளைந்து வளைந்து செல்லும் ஏணிப்படிகளும் அவற்றை வரவேற்கும் வாயில் வளைவுகளும் வண்ணப் பளிக்குமேடையில் ஒசிந்து நெளிந்தாடிய ஆடலணங்கு களாக அவன் கண்களை மயக்கின.

'இந்த வீட்டுக்குரியவன் மண்ணுலகின் அவாக்கள் அத்தனையையும் தாண்டி அவற்றின் உச்சி மகுடத்தில் வீற்றிருப்பவனாகவே இருக்கமுடியும். இதன் அழகின் முன் ஹவாய் ஒரு துரும்பு. அமெரிக்கா முழுதும் இதன் முன் வெறும் இரும்பு. அனைத்துலகும் கனவு கண்டும் உண்டு திளைக்காத செங்கரும்பு இது,' என்று பலவாறு அதை உள்ளுக்குள்ளே புகழ்ந்து வியந்தபடி தன்னை மறந்தவனாய் அண்ணாந்து பார்த்துக்கொண்டு நின்றான், கீவ்!

'வாழ்ந்தால் இதுபோன்ற வீட்டிலல்லவா மனிதன் வாழவேண்டும்!' என்று அவன் கலையுணர்வு அவனை

இடித்துக் கூறிற்று. 'இதன் ஒரு தூணைக் கட்டி முடிக்க எவ்வளவு செலவாகும் என்பதை எண்ணிப் பார்த்தாயா? ஆயிரம் பொன்னைக் கையில் வைத்துக் கொண்டு ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டிய செய்தியில், அத்தனை வெள்ளிகூட இல்லாத நீ அரைக்கணத்தில் திட்டமிடுகிறாயே!' என்று அடித்துப் பேசிற்று அவன் அனுபவ அறிவு.

ஆனாலும், ஆவல் யாரை விட்டது? அவன் தன் சட்டைப்பையில் கையைவிட்டு, அதிலுள்ள பணத்தை எண்ணிப் பார்த்தான். சரியாக ஐம்பது அமெரிக்க வெள்ளிகள்தான் இருந்தன—ஒருகாசு கூடவோ குறையவோ இல்லை. உலகம் சுற்றுவதற்காக அவன் கொண்டு வந்திருந்த இருநூறு வெள்ளிகளில் மீந்திருந்த தொகை அது. திரும்ப ஹவாய்க்குப் போகக்கூட அந்தத் தொகை முழுதும் பற்றாது.

* * * *

அவன் கனவுக் கடலின் எண்ண அலைகளில் மிதந்து தத்தளித்தான். அச்சமயம், "அன்பனே, ஏன் தயங்குகிறாய். அந்த ஐம்பது வெள்ளி கொடுத்தால் போதும். இந்த வீடு வேண்டுமானாலும் கிடைக்கும். இதுபோல் எத்தனை வீடுகள் வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளலாம்," என்றது ஒரு குரல்.

அவன் அருகே வயது சென்ற, கூனிய ஒரு குள்ள உருவம் நின்றிருந்தது. அவன் தன் கண்களை நம்ப முடியவில்லை.

"என்ன? என்ன? இந்த வீட்டையா? ஐம்பது வெள்ளிகளுக்கா? நீ கேலி செய்கிறாய்!" என்றான் அவன்.

குள்ள உருவத்தின் முகத்தில் கேலிக் குறிப்புக் கொஞ்சங்கூட இல்லை. "ஆம், இந்த வீட்டைத்தான். ஏன்? இந்த வீட்டைப்போல ஆயிரம் வீடுகளையோ ஆயிர மடங்கு மற்ற இன்பங்களையோகூட நீ பெறலாம். ஐம்பது வெள்ளியைக் கொடுத்து வாங்க விருப்பமிருந்தால் கூறு," என்றது அக் குள்ள உருவம்.

"என்றால் நம்ப முடியவில்லை. இது என்ன குட்டிச்சாத்தான் கதைபோலல்லவோ இருக்கிறது?" என்றான் கீவ்.

"இது குட்டிச்சாத்தான் கதையல்ல தம்பி, ஆயினும் இதில் ஒரு புட்டிச்சாத்தனின் திருவிளையாடல் உண்டு. நீ இந்த வீட்டை வாங்கினாலும் சரி, வாங்காவிட்டாலும் சரி. இரண்டும் எனக்கு ஒன்றுதான். இதை வாங்க விரும்பும் உனக்கும் ஒன்றுதான். அந்தப் புட்டிச்சாத்தனை நீ ஐம்பது வெள்ளி கொடுத்து வாங்கினால் இந்த வீடே உனக்குத் தேவையில்லை. இதைக் காட்டிலும் உயர்ந்த எத்தகைய வீடோ, தோட்டமோ, பொன்னோ, மணியோ, புனைமகுடமோ எது வேண்டுமானாலும் அந்தப் புட்டிச்சாத்தனிடம் கேட்டமாத்திரத்தில் உனக்குக் கிடைக்கும். நீ அதை வாங்கிக்கொள். ஐம்பது வெள்ளியையும் கொடுத்து வாங்கிக்கொள்," என்றது.

குள்ள உருவம் தன் சட்டைப் பையில் கையை நுழைத்து ஒரு கரிய நிறமுடைய சிறு புட்டியை எடுத்து நீட்டிற்று.

கீவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஆனால், மேற்கு வானொளியில் குள்ள உருவம் புட்டியைக் காட்டியபோது, அதில் பாதரசத்தின் நிறத்தில் தலைகீழாக

ஒரு சிற்றுருவம் தெரிந்தது. அது கிவை நோக்கிக் குறும்புச் சிரிப்புச் சிரிப்பதுபோலக் காட்சியளித்தது.

இப்போதும் கிவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. குள்ள உருவம் புட்டியைத் தலைகீழாகவும் நீட்டாகவும் பல நிலைகளில் திருப்பிக் காட்டிற்று. புட்டி எந்த நிலையி லிருந்தாலும் உள்ளிருந்த பாதரசக்குறளி ஒரே நிலையில் தலைகீழாகத்தான் நின்றது!

குள்ள உருவம் புட்டியை நிலத்தின்மீது ஓங்கி விசிற்று. அது தொய்வகத்தால் செய்த பந்துபோல் துள்ளி அவன் கைக்கே திரும்பி வந்தது! அவ்வுருவம் அதைக் குன்றின் குவட்டை நோக்கி வீசி எறிந்தது. பின் சட்டைப் பையில் கையைவிட்டு அதை எடுத்துக் காட்டிற்று!

கிவ் இவ்வளவையும் வியப்புடன் நோக்கினான்! ஆனால், "ஆயிரம் வெள்ளி கொடுத்தாலும் பெறமுடி யாத இந்த விட்டைத் தர இதனிடம் என்ன ஆற்றல் இருக்கமுடியும்?" என்றான்.

குள்ள உருவம் புட்டிச்சாத்தனை நோக்கி, "இந் நண்பன் காண இந்தக் குன்றின்மீதிருந்து ஓர் அருவியை வரவழைத்துக் காட்டு," என்றது.

குன்றின் முகட்டில் கதிரவனின் கடைசிக் கதிரொளி தயங்கி ஒளி வீசிய இடத்திலிருந்து ஒரு மின்னொளி கிளம்பிற்று. அது முகில் வரைகளைச் சுற்றும் மின்னற்கொடிபோலக் குன்றின் மேடுபள்ளங் களிடையே விரைந்து, நெளிந்து நெளிந்து வந்தது! 'இம்' மென்பதன் முன்னே அவர்கள் பேசிக்கொண்டிருந்த மாளிகையின் அருகாகச் சலசலவென்று ஓர் அருவி வந்து விழுந்தது. அது மாளிகை கடந்து மலைச்சாரலில்

உலவி, துறைமுகத்தை அடுத்த ஒரு சிறு குடாவில் சென்று கலந்தது!

கிவ் புட்டிச்சாத்தனை என்றும் நம்பியதில்லை. ஆனால், இன்று ஒரு புட்டிச்சாத்தனின் திருவிளையாடலைக் கண்முன் கண்டான்!

"என்ன வியத்தகு புட்டிச்சாத்தன்! என்ன வியத்தகு புட்டி! இதற்கு என்ன விலை கொடுத்தாலும் தகும்!" என்று கிவ் வாய்விட்டுக் கூறினான்.

"ஐயமென்ன, தம்பி. கொடுத்த விலையையும் இது உடனே திருப்பிக் கொடுக்கும். அதற்குமேல் விரும்பிய யாவும் கொடுக்குமே!" என்றது குள்ள உருவம். அதன் முகத்தில் முதல்முதலாக மகிழ்ச்சிக் குறிப்புத் தோற்றிற்று. தன் ஆவல் கண்டு எங்கே அது ஐம்பது வெள்ளிக்குமேல் கேட்டுவிடப் போகிறதோ என்று அவன் அஞ்சினான்.

அவன் எண்ணத்தை அறிந்ததுபோல் அவ்வுருவம், "ஐம்பது வெள்ளிக்குமேல் கொடுக்க வேண்டிவரும் என்று நீ அஞ்சவேண்டாம். நீ கொடுத்தால்கூட நான் ஐம்பது வெள்ளிக்குமேல் வாங்க மாட்டேன்," என்றது.

"ஏன் அப்படி, இதில் ஏதேனும் சூது இருக்கக் கூடுமோ?" என்று எண்ணினான் கிவ். அந்த எண்ணத்தையும் ஊடுருவிக் கண்டதுபோலப் புட்டிக்குரிய குள்ள உருவம் பேசிற்று:

"ஆம். இதில் ஒரு சிறிது சூது இல்லாமலில்லை. நான் உன்னை வஞ்சிக்கமாட்டேன். நன்மை தீமைகள் யாவற்றையும்—என் வரலாற்றையும் வாழ்வு தாழ்வை

யும்—கூறிவிடுகிறேன். அதன் பிறகு நீ விரும்பினுல், நீ துணிந்தால், இதை வாங்கிக் கொள்ளலாம்.

"இந்தப் புட்டியில் இருக்கும் புட்டிச்சாத்தனின் ஆற்றலுக்கு அளவே கிடையாது. இதை விலைக்கு வாங்கிய எவரும் அந்த ஆற்றலைப் பெற்றுத் தாம் விரும்பிய செல்வங்கள், உயர்வுகள், புகழ்நிலைகள் எவையானுலும் அட்டியில்லாமல் பெறலாம். இதை வாங்கியவர்கள் பலர் உலகத்தை ஆண்டிருக்கிருர்கள்! பெருஞ் செல்வத்தை மலைபோலக் குவித்து ஆரவாரம் செய்திருக்கிருர்கள்! பெறற்கரிய இன்பவாழ்வு பெற்றிருக்கிருர்கள், செயற்கரிய செயல்கள் செய்திருக்கிருர்கள்!

"ஆனுல், இந்தப் புட்டிச்சாத்தன் தரும் கொடைகளுக்கு ஒரே ஒரு விதிவிலக்கு உண்டு. அது மனித வாழ்வின் மட்டான இயற்கை எல்லையாகிய அறுபது ஆண்டுக்குமேல் ஒருகணநேரம்கூட வாழ்வு அளிக்காது. அத்துடன் இதை வாங்கியபின் அந்த நாளைக்குள் விற்றுவிடாதவர்களுக்கும் ஒரு தண்டனை உண்டு. அந்த நாள் வருவதற்கு முந்தினநாளிலேயே இந்தப் புட்டிச்சாத்தன் அவன் உயிரைத் தன் கையில் பற்றி, என்றும் சாகாத நரகத்துன்பங்களுக்கு ஆளாக்கிவிடும்.

"எனக்கு இப்போது வயது ஐம்பத்தைந்துக்கு மேலாகிவிட்டது. ஐம்பது ஆண்டு வந்தது முதல், இந்த அழகிய இன்பமாளிகையில் எனக்கு இருக்கை கொள்ளவில்லை. இந்த வீட்டின் அழகைக் காண்பவர்கள் யாராவது இதை வாங்கிக்கொள்ள மாட்டார்களா என்றுதான் நான் கவலைகொண்டு வாழ்கிறேன்."

கீவ் இளைஞன். அவன் இன்னும் இருபத்துமூன்ருவது வயது தாண்டவில்லை. பேய், பொன்னுலகம்,

நரகம், கடவுள் ஆகிய எதுபற்றிய கவலேயும் அவனுக்கு இல்லே. ஆகவே, அவன் குள்ள உருவமுடைய கிழவன் சொல்லியது கேட்டு இரக்கப்பட்டான். உடன்தானே புட்டியை விலேக்கு வாங்கிவிட அவன் கையும் ஆகமும் அகமும் படபடத்தன. ஆயினும் ' ஐம்பது வெள்ளிக்கு அதைக் கொடுக்க முன்வருவானேன்? விற்பதில் ஏன் இவ்வளவு துடிப்பு, இவ்வளவு ஏக்கம்? புட்டிச்சாத்தனின் அருஞ்செயல் கண்ட எவரும் எத்தனே வெள்ளி, எத்தனே பொன் கொடுத்தும் இதை வாங்கத் தயங்க மாட்டார்களே!' என்று அவன் எண்ணினுன்.

கிழவன் மேலும் பேசினுன்:

" இவ்வளவு சிறந்த கருவூலத்தை விற்பதில் என்ன கவலே என்று நினேக்கிருய் போலத் தோற்றுகிறது. முதலாவதாக, உன்னேப்போன்ற இளேஞர்களுக்குத்தான் இவ்வளவு ஆர்வமும் துணிச்சலும் இருக்கமுடியும். அத்துடன் இதை விற்பதற்கும் மற்றச் சரக்குகளே விற்பதற்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. பொதுவாக வாங்கிய விலேயைவிடக் கூடுதல் விலேக்கே எவரும் எதையும் விற்க விரும்புவார்கள். இதனுல் பொருள்களின் விலே கைமாறுந்தோறும் ஏறுகிறது. இந்தப் புட்டியின் செய்தி இதற்கு நேர்மாருனது. இதை வாங்கின விலேக்கு ஒரு காசு கூட்டி விற்ருலும், அதே விலேக்கு விற்ருலும், வாங்கியவனிடமிருந்து விற்றவனிடமே இது திரும்பி வந்து விடும். ஆகவே, இதை விற்கும் ஒவ்வொரு தடவையிலும் இதன் விலே குறைந்து கொண்டே போகிறது.

"தொடக்கத்தில் இதன் விலே நூருயிரம் பொன்னுக்கு மேலிருந்ததாகக் கேள்வி. மன்னர்களுக்கும்

இளங்கோக்களுக்குமிடையே இது கைமாறிற்று. ஆனால், விலை குறையக்குறைய இது என் போன்ற ஏழைகளிடமும் வந்து வாழ்வளிக்கத் தொடங்கிற்று. நான் இதை ஐம்பத்தொரு வெள்ளிக்குத்தான் வாங்கினேன். என்னிடங்கூட அவ்வளவு வெள்ளிதான் இருந்தது. வாங்கினபின் நான் ஐந்தாண்டுகளுக்கு முன்வரை கவலைப் பட்டதேயில்லை. எத்தனை ஆயிரமாயிரம் பொன் வேண்டுமானாலும், வேறு என்ன பொருள் வேண்டுமானா லும் புட்டிச்சாத்தன் எனக்குத் தந்தது. ஆனால், இவ் வளவு குறைந்த விலைக்கு வாங்கினதால், இன்னும் குறைந்த விலைக்கு எப்படிக் கொடுப்பது என்றுதான் கவலைப்படுகிறேன்."

இதைக் கேட்டதும் கிவ் முன்னைவிட உரக்க வாய் விட்டுச் சிரித்தான். பிறகு, "எங்கே, முதலில் எனக்கு ஒன்றிரண்டு வெள்ளி கொடு, கூடுதல் கொடுத்து அது உம்மிடமே திரும்புகிறதா, பார்ப்போம்," என்றான்.

கிழவன் கைநிறைய வெள்ளிகள் கொடுத்தான். கிவ் ஐம்பத்திரண்டு வெள்ளிகள் எண்ணிக் கொடுத்து விட்டுப் புட்டியுடன் பத்தடித் தொலை சென்றான். ஆனால் சட்டைப்பையில் கைவிட்டபோது, புட்டி அதில் இல்லை. அது கிழவன் கையில் இருந்தது.

புட்டிச்சாத்தனின்மீது இப்போது கிவுக்குக் கட் டுக்கடங்காத ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. பொழுது சாய்வதற்குக்கூட அவனால் பொறுக்க முடியவில்லை. அதற்குள் புட்டிக்கு விலைகொடுத்து வாங்கி, அதன்மூலம் தான் விரும்பிய செல்வங்களைப் பெற அவன் துடித் தான்.

ஐம்பது வெள்ளிகளும் குள்ளக் கிழவனிடம் சென்றன. புட்டியும் புட்டிச்சாத்தனும் அவன் சட்டைப் பையில் ஒட்டிக்கொண்டன.

*   *   *   *   *

முதலில் புட்டியைப் பயன்படுத்தும் ஆர்வத்தை விட, அதன் அருஞ் செயல்களைக் காணும் ஆர்வமே கீவுக்கு மிகுதியாக இருந்தது. அவன் புட்டிக்காகத் தான் கொடுத்த ஐம்பது வெள்ளியும் திரும்பத் தன்னிடம் வரவேண்டும் என்று கேட்டான், சட்டைப்பை உடனே பளுவாயிற்று. அதனுள்ளிருந்த பணத்தை எடுத்து எண்ணினான். சரியாக ஐம்பது வெள்ளி இருந்தது.

அவன் புட்டியை உடைத்துப் பார்த்தான். அது உடையவில்லை. நெட்டிவாங்கி ஒன்றைக் கொண்டு மூடியைத் திறக்க முயன்றான். நெட்டிவாங்கிதான் வெளி வந்தது; மூடியில் அதன் தடமே காணவில்லை.

புட்டியைத் தெருநடுவில் வைத்துவிட்டுச் சென்றான். முதல்திருப்பம் திரும்புமுன் புட்டியின் தலை கையில் முட்டியது. புட்டி பையில் கிடந்தது.

புதிதாக வாங்கிய விளையாட்டுப் பொருளுடன் சிறு குழந்தை விளையாடுவதுபோல அவன் விளையாடினான். அதன் அருஞ் செயலிலுள்ள அவன் ஆர்வம் அத்தனை பெரிதாயிருந்தது!

நகரிலுள்ள ஒரு பழம்பொருள் வணிகனிடம் சென்று அப்புட்டியைக் காட்டி அதற்கு நூறு வெள்ளி விலை கேட்டான். முதலில் அதைப் பார்த்துக் கடைக்காரன் சிரித்தான். பின் எப்படித் திருப்பினாலும் பாத

ரசக் குறளி தலைகிழாயிருக்கும் புதுமையைப் பார்த்த பின் அறுபது வெள்ளி கொடுக்க இசைந்தான். கிவ் புட்டியைக் கொடுத்துவிட்டு அறுபது வெள்ளியை வாங்கிக் கொண்டு நடந்தான். "வாங்கியதைவிடக் கூடுதலான விலைக்குக் கொடுத்துவிட்டேன். அது திரும்பி வருகிறதா பார்ப்போம்," என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கப்பலில் ஏறியபின் அவன் சட்டைப்பையில் துழாவினன். பணத்துடன் புட்டியும் இருந்தது!

புட்டியைப்பற்றிய சிந்தனை அவன் உள்ளத்தை விட்டு ஒருபோதும் நீங்கவில்லை. அவன் கைகளும் என்ன வேலை செய்தாலும் இடையிடையே பையைத் தொட்டுப் பார்க்கத் தவறியதில்லை.

கப்பலில் கிவுக்கு லோபப்பாக்கா என்ற ஒரு நண்பன் பழக்கமானான். கிவ் எப்போதும் அழகிய வீடு வேண்டும் என்ற கனவில் ஆழ்ந்திருந்ததுபோல, அவன் எப்போதும் வாணிகம் நடாத்த ஓர் அழகிய படகு வேண்டும் என்ற கனவில் ஆழ்ந்திருந்தான். கிவ் எப்போதும் எதையோ சிந்திப்பதையும், அடிக்கடி பையில் கை வைப்பதையும் கண்டு அவன் வியப்படைந்தான். எதாவது பெருஞ் செல்வமோ அல்லது அரும்பொருளோ இருக்கலாம் என்று நினைத்து, அவன், "கிவ், உன்னிடம் பணம் நிறைய இருக்கிறதுபோலத் தோற்றுகிறது. எனக்கு ஒரு படகு வேண்டும் என்று நீண்டநாள் அவா. அதற்கு நீ பணம் கடனுய் உதவ முடியுமா?" என்று கேட்டான்.

கிவ் தான் வைத்திருந்த புதையல், அது பெற்ற வகை, அதன் வியத்தகு ஆற்றல் ஆகிய யாவற்றையும் கூறி, "ஊர் போய் என் ஆவல் நிறைவேறியபின், உனக்

குக் கடனாக அல்ல, இலவசமாகவே வேண்டிய தொகை தருவேன்,” என்றான்.

லோப்பாக்காவும் முதலில் எதையும் நம்பவில்லை. சில செய்திகளைக் கண்ணார நேரில் கண்டு, சிலவற்றைக் காதாரக் கேட்டபின்கூட அரைநம்பிக்கைதான் ஏற்பட்டது. “ஊர் சென்றபின் நீ நினைத்தபடியெல்லாம் நடந்தால், நான் உன்னிடமிருந்து பணம் பெறுவானேன்? புட்டியையே விலைக்கு வாங்கிக்கொள்கிறேன்,” என்றான் அவன்.

இதன்பின் கப்பலில் போகும்போதே கிவ் தன் அவாவைப் புட்டிச்சாத்தனிடம் கூறினான்:

“ஹவாயில் கோனு என்ற இடத்தினருகில் நான் பிறந்தேன். பிறந்த இடத்திலேயே எனக்கு ஓர் அழகிய தோட்டமும் வீடும் கடற்கரையருகில் வேண்டும். தோட்டமெங்கும் பூஞ்செடிகள், கதிரவனொளியை வரவேற்கும் பல வண்ணக் கண்ணாடிகளாலான கதவுகள், பலகணிகள், சலவைக் கல் தளங்கள் ஆகிய யாவும் அதில் இடம்பெறவேண்டும். வெள்ளி பொன் பூச்சுப் பூசிய சுவர்கள், அழகிய படங்கள், பட்டுத்திரைகள், வெண்தோதகத்திமரம், தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்டுப் பொன் வெள்ளியாலும் மணிகளாலும் இழைக்கப்பட்ட இருக்கைகள், கட்டிடங்கள் யாவும் அதில் நிறைந்திருக்கவேண்டும். மற்ற வகைகளில் அது நான் சான்ஃவிரான்சிஸ்கோவில் கண்ட வீடுபோன்றிருக்க வேண்டும்.”

தான் கேட்ட இத்தனையையும் கிவ் தன் நண்பனிடமும் கூறினான். “இறங்கினவுடன் அதன்படி

நடக்குமா?'' என்பது பற்றி இருவரும் ஓயாது பேசிப் பேசிப் பொழுதுபோக்கினர்.

ஊரில் இறங்கியவுடன் முதன்முதலில் அவர்கள் கேட்ட செய்தி கிவைத் துயரில் ஆழ்த்திற்று. அவன் நெருங்கிய உறவினர்கள் இருவர் இறந்துவிட்டனர் என்று அவனுக்குத் தெரியவந்தது. அவன் இதுகேட்டு மிகவும் வருந்தினான். அவ் வருத்தத்தில் அவன் புட்டியையே மறந்துவிட்டான். லோப்பாக்கா அதை நினைவு படுத்தினான். தான் வீடு கட்டிப்பார்க்க எண்ணிய இடம் அவர்களுக்கு உரிய இடம் என்று, அப்போதுதான் கிவுக்கு நினைவுவந்தது, இதைக் கேட்டதே நண்பன் லோப்பாக்கா துள்ளிக் குதித்தான். "அன்பனே! கொன்றது நீ யல்லவா? இப்போது வருத்தப்படுவானேன்? நீ கோரிய வீட்டுக்கான மனையிடம் அவர்கள் நிலத்திலிருக்கும்போது, அவர்கள் சாகாமல் நீ நிலத்தை அடைவதெப்படி?'' என்றான்.

இதுவரை தன் பேரவாவினிடையே கிவ் இதுபற்றிச் சிந்திக்கவில்லை இப்போது அதே பேரவா மீண்டும் எழுந்து அவன் வருத்தத்தையும் போக்கிற்று. இதற்குள் வழக்கறிஞர் ஒருவர் நிலத்தின் கிடப்புவரைப் படம் ஒன்றை அவனிடம் தருவித்து, அதில் வீடு கட்டுவதாயிருந்தால் அதற்குரிய அமைப்பாளரையும் அனுப்பித் தருவதாகத் தெரிவித்திருந்தார். மறுநாளே அவன் விருப்பம் அறியுமுன்பே அமைப்பாளர் வந்து திட்டத்தை அவனுக்குக் காட்டினார். அவன் வியப்படைந்தான். திட்டம் அவன் மனத்தில் எண்ணிய எண்ணங்கள் அத்தனையையும் படம்பிடித்திருந்தது. கட்டடம் முடிப்பதற்கான செலவையும் அமைப்பாளர் கணக்கிட்டு ஒரு பெருந் தொகையைக் கூறிவிட்டுச் சென்றார்.

தொகைக்கு என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. புட்டிச்சாத்தனிடமே அதையும் கேட்கலாம் என்பதைக்கூட அவன் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால், சிறிது நேரத்திற்குள் இன்னொருவன் வந்து, வீட்டுக்காக அவன் திட்டமிட்ட இடம்போக, மீந்த இடத்தை விலைக்குக் கேட்டான். பேரம் எதுவும் பேசாமலே, கிவ் திட்டமிட்ட வீட்டின் செலவுக்கான தொகையை எண்ணிவைத்து அவன் நிலத்தைத் தனக்கு எழுதி வாங்கிக்கொண்டான்.

கிவின் நம்பிக்கையும் லோப்பாக்காவின் நம்பிக்கையும் வளர்ந்து ஆர்வத்துடிப்புக்கள் ஆயின.

ஒருசில நாட்களுக்குள்ளாகவே கிவின் கனவு நனவாயிற்று. அவன் கனவுகண்ட மாளிகையில் அவன் நனவுருவிலேயே சென்று குடிபுகுந்தான்.

புதிய வாழ்வால் அவன் பண்புகளிலும் புதுக் கூறுகள் எழுந்தன. புட்டிச்சாத்தனின் ஆற்றலைக் கண்கூடாகக் கண்டு அதை வாங்க விதிர்விதிர்ப்புற்றான் லோப்பாக்கா ஆனால், கிவ் தன் பணியாட்களை ஏவி அவனை வீட்டிலிருந்தே துரத்தினான். தான் அருமையாகப்பெற்ற வாழ்வை அவ்வளவு விரைவில் அவ்வளவு எளிதாக இன்னொருவன் பெறுவதா என்று அவன் உள்ளம் குமுறிற்று!

* * * *

புட்டியை லோப்பாக்காவுக்குக் கொடுக்க மறுத்த போது, கிவின் பேரவாவைவிடத் தன்னலமே ஓங்கியிருந்தது. தான் கனவுகண்ட ஒரே பேரவா நிறைவேறியபின், அவன் பேரவாவுக்கு ஒரு முற்றுப்புள்ளி

ஏற்பட்டது. கொஞ்ச நாட்களுக்குள் அது அவன் அமைதியான வாழ்வின் ஒரு கூறாய்விட்டது. புதிய அவா எதுவும் ஏற்படாததால், புட்டிச்சாத்தனைப் பயன் படுத்த வழி ஏதும் உண்டாகவுமில்லை. அதனிடம் வெறுப்பும் தட்டிற்று. ஆனால், கிவ் இன்னும் இளமை யின் தொடக்கக் கோடியிலேயே இருந்ததால், இவ் வெறுப்பு அதை விட்டொழிக்கும் துணிவாக உருவாக வில்லை. அதை இனிப் பயன்படுத்துவதே இல்லை என்று அவன் தனக்குள் உறுதிசெய்துகொண்டான்.

மனிதன் ஏழ்மையின்போது பணமே பெரிதென்று நினைக்கிறான். பணம் எளிதில் கைக்கு வந்துவிட்டால், அப்போதுதான் அது வாழ்வின் நிறைவு அல்ல என்று உணர்கிறான். கிவ் இவ்வுண்மையை இதுவரை அறிய வில்லை; இப்போது நேரடியாகத் தன் வாழ்விலேயே உணர்ந்தான்.

கலைவண்ண மாளிகைக்கு உரியவன் என்ற முறை யில் அவனுக்கு எங்கும் மதிப்புத்தரப்பட்டது. ஆனால், எவருக்கும் தன்னிடத்தில் அன்பு இல்லை என்பதை அவன் கண்டான். அவனை மணம்செய்து அந்த வீட்டில் வாழ விரும்பாத பெண் இல்லை. ஆனால், தன் வீட்டை விரும்பித் தன்னை மணக்கும் எந்தப் பெண்ணையும் மனைவியாக ஏற்க அவன் உள்ளம் ஒப்பவில்லை. அத்த கைய எந்தப் பெண்ணையும் அவனால் காதலிக்கவும் முடியவில்லை.

ஏழைகளுக்கு இன்னல்களிடையே மின்னொளி போலக்கிட்டும் காதல், செல்வருக்கும் செல்வ வேட்கை உடையவர்களுக்கும் கிட்டுவது அரிது என்ற உண்

மையை அவன் இப்போது உணர்ந்தான். உணர்ந்து தன் செல்வத்தையே வெறுத்தான்.

தன் வீட்டையும் தன் செல்வத்தையும் தன் பெயரையும் முற்றிலும் மறைத்து ஏழ்மையின் போர்வை போர்த்துக் கொண்டு, காதலைத் தேடிச்செல்ல அவன் எண்ணங்கொண்டான்.

இந்நிலையில் ஒருநாள் பழைய நண்பன் லோப்பாக்கா அவனைப் பார்க்க வந்தான். கிவும் தான் இடையில் அவனிடம் நன்றிகெட்டதனமாக நடந்ததை எண்ணி வருந்தி, அன்புடன் முகமன் கூறி வரவேற்றான். லோப்பாக்காவும் நண்பனின் புதுவாழ்வின் உயிர்நிலையில் குறுக்கிட்டு எதுவும் சொல்லாமல், வேறு பேச்சுக்களே பேசியிருந்தான்.

"உன் விருப்பங்கள் யாவும் நிறைவேறி விட்டனவா? நீ இன்பமாக இருக்கிறாயா?" என்று கேட்டான் லோப்பாக்கா.

கிவ், "நான் எதிர்பார்த்ததெல்லாம் கிடைத்து விட்டது. எதிர்பார்த்ததற்குப் பதின்மடங்கு கிடைத்து விட்டது. இனி எனக்கு இந்தப் புட்டிப்பேயால் ஆக வேண்டியது எதுவுமே கிடையாது. முன்பு அதை உனக்குத் தரமாட்டேன் என்றேன். இப்போது உனக்கோ அல்லது வேறு யாருக்கோ விருப்பமானால் அதை நான் கொடுக்கத் தடையில்லை. ஆனால், யார் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் அதை நான் இனிப் பயன்படுத்தப் போவதில்லை என்று உறுதி கொண்டுவிட்டேன்," என்றான்.

லோப்பாக்கா இம் மனமாறுதல் கண்டு வியப்படைந்தான். அவனுக்கும் இப்போது முன் கிவுக்கு

இருந்த ஆர்வம் இல்லை. அதேசமயம் தன் நீண்டநாள் ஆர்வமான படகுவாணிகத்தை அவனால் மறந்து இருக்கவும் முடியவில்லை. ஆகவே, "எனக்கு உன் விருப் பத்துக்கு மாறாக அதை வற்புறுத்தி வாங்கவேண்டு மென்றில்லை. ஆனால், வாங்குவதாக உன்னிடம் கூறி யிருந்தேன். வாங்க நான் தயங்கவில்லை. எனக்கு வேண் டிய ஒரு படகும் செலவுக்குச் சிறிது பணமும் பெற்ற பின், நானும் அதை விரைவில் விற்றுவிடவே எண்ணு கிறேன்," என்றான்.

கீவ் புட்டியை எடுத்துக்கொடுத்தான். லோப்பாக்கா கூடியமட்டும் உயர்ந்த தொகைகொடுத்து வாங்கத் தவறவில்லை. நாற்பத்தொன்பது வெள்ளியை எண்ணிக் கொடுத்துவிட்டு, புட்டியைப் பெற்றுக்கொண்டு கிளம்பி னான். அவன் இருக்க விரும்பவும் இல்லை. கீவ் அவனை இரவு தங்கும்படி கூறவுமில்லை. ஆனால், மழையாயிருந் ததை எண்ணி ஒரு குடையும் புற உடுப்பும் தந்து அவனை விரைந்து அனுப்பிவைத்தான்.

புட்டியையும் அதில் இருந்துகொண்டு அவனையே பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பொல்லாத புட்டிச் சாத்தனையும் விட்டொழித்ததனால் கீவ் மகிழ்ச்சியே அடைந்தான். மறுநாளே அவன் தன் ஏழ்மைப் போர்வை யைப் போர்த்திக்கொண்டு தன் பழைய சுற்றுப் பயணத்தை மீட்டும் தொடங்கினான்.

* * * *

கலைமாளிகையின் புகழும் அதற்குரியவனான கீவின் புகழும் பெருமா கடலுல¹கெங்கும் அதற்கப்பாலும் பரந்திருந்தன. கீவ் சென்ற இடமெங்கும் அதற்கப்பா

1. Pacific Regions.

லும் அவை அவன் காதுகளிலேயே ஓதப்பட்டன. ஆனால், அவற்றுக்கும் அவனுக்கும் தொடர்பு உண்டு என்பதை எவரும் அறியவில்லை.

பல இடங்களுக்கும் சென்று திரும்பும் வழியில் அவன் ஹவாயிலே உள்ள ஹோனூலூ என்ற சிறு நகரில் தங்கினான். அது அவனுக்குப் பழக்கமான இடமானதால் அவன் எல்லாரையும் அறிந்தான். ஆயினும் அவன் மாற்றுருவில் யாரும் அவனை அறியவில்லை. இங்கிலையில் மாலை நேரத்தில் ஒரு பெண் குளித்துக்கொண்டிருப்பது கண்டு, அது யாரென்றறிய அத்திசையில் சென்றான். அவள் குளித்துப் புத்தாடையுடன் அவன் கண்முன் வந்து நின்றாள். அவளை அவன் இன்னாளென்று அறியக் கூடவில்லை. அதேசமயம் அவள் அழகும் இளமைப் பொலிவும் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

"பெண்மணி, நீ இந்த இடத்துக்குப் புதியவ ளென்று நினைக்கிறேன். நீ யார்?" என்றான் அவன்.

"ஒருவகையில் நான் புதியவள்தான். நான் கியாவேு வின் மகள் கோக்குவா. 'ஒரு'வுக்குப் படிக்கச் சென்றி ருந்து, இரண்டு நாட்களுக்கு முன்தான் திரும்பிவந்தேன். நீங்கள் யாரோ?" என்றாள்.

கிவ் தான் யார் என்று அறிவிப்பதில் சற்றே தயங்கி, அதன்பின் துணிந்து தன் மாறுபெயரைக் கூறினான். அவள் அவன் தயக்கத்தைக் கவனித்தும் கவனியாதவள் போல் இருந்தாள்.

"உனக்குத் திருமணமாயிருக்கிறதா என்பதை நான் அறியலாமா?" என்று கிவ் கேட்டான்.

"அறிவதில் கேடு ஏதுமில்லையே. ஆகவில்லை; உங்களுக்கு?" என்ருள்.

"எனக்கும் ஆகவில்லை. இதுவரை அதைப்பற்றி நான் எண்ணியதுமில்லை. ஆனால், உன்னைப் பார்த்த வுடன்............" என்று கூறித் தயங்கினன் கிவ்.

அவள் அவன் கூறியதை முழுதும் கேட்டுக் கொண்டு நிற்கவில்லை. வீட்டை நோக்கி ஓடி மறைந் தாள்.

அன்றே கிவ் கியானேவிடம் சென்று, "உன் மகளை எனக்குத் தரமுடியுமா?" என்று கேட்டான்.

கியானே கிவை அடையாளம் கண்டு கொள்ள வில்லை. கிவை மணம் செய்து அவன் கலை மாளிகையில் வாழத் தன் மகள் விரும்பி இருந்ததை அவன் அறிவான். ஆகவே, அவன் மறுக்க இருந்தான். இச்சமயம் கோக்குவா கிவின் பின்புறம் நின்று சைகை காட்டினள். அதன் பொருள் என்ன என்பதை அறியாமலே, கியானே "மகள் விருப்பம் அதுவாக இருந்தால், தடையில்லை," என்ருன்.

கோக்குவா கிவின் தயக்கத்திலிருந்து அவன் உண்மையில் சமூகத்தில் தன் குறைந்த படிமையை மறைக்கப் பார்ப்பதாகவே எண்ணியிருந்தாள். அதனல் அவன் கேட்கும்படி அவன் ஏழ்மைபற்றியும் குறைந்த படிமைபற்றியும் நையாண்டி பேசினள். அப்போது அவன் முகம் அடைந்த மாற்றத்தை அவள் உன்னிப் பாகப் பார்த்தாள். அவன் மறைப்பது குறைந்த படி மையையல்ல, உயர் படிமையையே என்பதை இதனல் அவள் ஊகித்தாள். அத்துடன் கிவ் ஏழ்மை யுருவில்

வெளியேறி உலகம் சுற்றுவதாக அவள் கேள்விப்பட்டிருந்தாள். ஆகவே, உருக்கரந்து வந்தவன் கிவாகவே இருக்கவேண்டும் என்பதை அவள் உய்த்தறிய முடிந்தது.

கிவ் அவளை அணுகி, "என் உண்மைப் படிமையை அறியாமலே நீ என்னை நையாண்டி செய்ததைக் கேட்டேன். உண்மைப் படிமையை உணர்ந்தால் இன்னும் உன் மதிப்பில் நான் தாழ்வடையவே முடியும். நான் உன்னிடம் அளவில்லா அன்பு கொண்டு விட்டேன். ஆனாலும், உன் விருப்பமில்லாமல் நான் உன்னை மணம் செய்ய உளங் கொள்ளவில்லை. உன் தந்தையும் உன் விருப்பப்படியே நடப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, விருப்பமில்லாவிட்டால், தெளிவாகக் கூறும் படி கேட்டுக்கொள்கிறேன். நான் என் நம்பிக்கையை ஏற்கெனவே இழந்துவிட்டதால், நீ உன் கருத்தை மனம்விட்டுக் கூறத் தயங்க வேண்டாம்" என்றான்.

'உங்கள் விருப்பமே என் விருப்பம்' என்று மணிச் சுருக்கமாகத் தன் கருத்தை அவள் தெரிவித்தாள். இதைக்கேட்டதும் அவன் வியப்படைந்தான். ஆனால், அவன் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. விரைவில் திருமண ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அவளை வந்து காண்பதாகக் கூறி, அவன் கோனுவிலுள்ள தன் மாளிகைக்குத் திரும்பினான்.

கோக்குவா கிவைப் பார்ப்பதற்குமுன், அவன் மாளிகை பற்றிக் கேள்விப்பட்டு, அதற்காகவே அவனை நாடியிருந்தாள். ஆனால், அவனைக் கண்டபின் மாளிகையில்லாமலேகூட அவனை மணக்க அவள் உள்ளம் துடித்தது. இரண்டுநாள் அவனைச் சந்தித்தபின் அவன்

இல்லாமல் அவள் வாழ்வு ஒரு கணமும் சுவைப்பட வில்லை. அவனுக்காக அவள் தன் தாய் தந்தை, வீடு வாசல், சுற்றம் நட்பு யாவும் துறந்து செல்ல நேர்ந்தாலும் தயங்கியிருக்க மாட்டாள்.

கிவுக்கும் இப்போதுதான் வாழ்வில் முதல் தடவையாக ஆர்வம் ஏற்பட்டது போலிருந்தது. கலைமாளிகையின் கனவு, அவன் குழந்தைக் கனவாக மட்டுமே அவனுக்குத் தோற்றிற்று. கோக்குவா அவனை மனித உணர்ச்சி உடையவனாக்கி, அவன் மனித உள்ளத்தின் கனவுருவாய் நின்றாள்.

அவன் வந்தபோது அவன் தன் குதிரையை மனம் போனபடி ஓடவிட்டு வந்திருந்தான். இப்போது அவன் அதனை அதன் முழுவேகத்தில் முடுக்கினான். குதிரை கூட இதை வெறுக்கவில்லை. அது கோனாவிலுள்ள தன் இலாயத்தில் சென்று, வளமான புல் தின்ன விரைந்தது.

கலைமாளிகையின் பணியாட்கள் அவன் திரும்பிய போது வியப்படைந்தனர். அவன் பாடிக்கொண்டே வந்தான். பாடிக்கொண்டே, என்றும் இல்லாதவாறு வீட்டின் அழகைக் கண்டான். கோக்குவாவின் கண்கள் கொண்டு அவன் அதைப் பார்க்க முயன்றான் என்பதை அவர்கள் எப்படி உணர முடியும்? வீட்டிற்குப் புதுத்தலைவி வருவதற்கு முன்பே புதுத்தலைவன் ஏற்பட்டுவிட்டதாக மட்டும் அவர்களுக்குத் தெள்ளத் தெளியத் தெரிந்தது.

ஹோனானு செல்ல அவன் திருமண நாள்வரை காத்திருக்கவில்லை. அதற்கு நாள் பார்க்கும் சாக்கிலும், சரக்குகள் வாங்கும் போக்கிலும், நண்பர்களைக் காணும்

வாக்கிலும் அவன் பலதடவை அங்கே சென்றான். அவன் தன்மீது கொண்ட ஆர்வத்தைக் கோக்குவா அவன் கண்களில் கண்டாள். அவனும் அவளுக்குத் தான் வருவதனால் ஏற்படும் மகிழ்ச்சியை அவள் கண் ணொளியில் கண்டுமகிழ்ந்தான்.

அவன் திருமணச் செய்தி சிறிது சிறிதாகப் பணி யாட்களுக்குத் தெரியலாயிற்று. அவன் கலகலப்பின் பொருளும் இப்போது அவர்களுக்குத் தெரிய வந்தது. அவர்களும் அதில் பங்கு கொண்டனர்.

ஒருநாள் வழக்கம்போல அவன் பாடிக்கொண்டே எழுந்தான். குளிப்பறையில் தண்ணீர்த் தொட்டி நிரப்பு பவன், வெந்நீர் ஊற்றி வளாவுபவன் முதலிய பணியாட் களிடம் வழக்கம் போலவே ஆர்ப்பாட்டம் செய்தான். கதவை அடைத்துக்கொண்டு அவன் தொட்டியில் அமர்ந்து குளிக்கும் ஓசையுடன் ஓசையாக, அவன் பாட்டும் எங்கும் கணகணவெனக் கேட்டது.

ஆனால், திடீரென்று பாட்டு நின்றது. குளிப்பும் விரைவில் நின்று விட்டது. பாடிக்கொண்டு அறைக்குள் சென்றவன் முகத்தைச் சுளித்துக்கொண்டு வெளியே வந்தான். அன்று பகல் முழுதும் அவன் சிரிக்கவில்லை, பாடவில்லை, இரவில் அவன் உறங்கவில்லை. மேலும் கீழும், வலமும் இடமும், முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு அவன் கவலையுடன் திரிந்தான். அத்துடன் ஹோனுனுப் பக்கம் அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

இந்தப் புது மாறுதலுக்குக் காரணம் என்னவென்று அறியாமல் பணியாட்கள் மீண்டும் திகைத்தனர். கலை மாளிகைக்குச் சுண்ணமும் நறுமணப் பொருள்களும் கொண்டு வந்தவர்களுக்குத் திடீரென்று 'ஒன்றும்வேண்

டாம்' என்ற உத்தரவு பிறந்தது. திருமணத்துக்குரிய பெண் ஏதேனும் வெறுப்பாக நடந்து கொண்டாளோ என்று யாவரும் நினைத்தனர்.

ஆனால், இந்த மாறுதலால் மிகுதி மனச் சோர்வும் துன்பமும் அடைந்தவள் கோக்குவாவே. அவள் நாளும், நாழிகையும், கணமும் எண்ணி எண்ணி அவனை எதிர் பார்த்துக் கண் பூத்துக் காதும் அடைபட்டாள். எதைக் காண்பதிலும், எதைக் கேட்பதிலும், எந்தச் செயலில் ஈடுபடுவதிலும் அவள் உள்ளம் பற்றுக் கொள்ளவில்லை.

கிவின் இத்தனை மாறுதலுக்கும் காரணம், குளிக்கும் சமயம் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஒரு துணுக்குறத்தக்க எண்ணமேயாகும். இன்பக் கோட்டைகளிடையே அவன் தன் உடல்மீது சவுக்கார நுரையையும் நீரையும் வாரி இறைத்துக் கொண்டிருந்தான். அப்போது காலின் ஒரு பகுதியில் அவன் ஒரு வெள்ளைப் புள்ளியைக் கண்டான். அவன் பார்க்கப் பார்க்க அது விரிவடைவது போலவும் வெள்ளை படர்ந்துகொண்டு வருவது போலவும் அவனுக்குத் தோற்றிற்று. மீளாப் பெருநோய்க்குத் தன் அழகிய உடல் இரையாக இருந்ததாக அவன் திடுமென நினைத்தான். பாட்டுத் திடீரென நின்றதற்கும், அவன் மகிழ்ச்சி முற்றும் மாறியதற்கும் இதுதான் காரணம்.

'ஒருவனுக்கு எவ்வளவு செல்வமும் மதிப்பும் பணியாட்களும் இருந்தும் என்ன பயன்? காதலில்லாத இடத்தில் அத்தனையும் விண்' என்று கிவ் முதலில் கருதியிருந்தான். இப்போதோ காதல் அவன் வாழ்வில் கனியமுதூறக் காத்திருந்தது. ஆனால், 'காதலும் செல்வமும் இருந்துதான் என்ன பயன்' என்று அவன் இப்

போது எண்ணினான். அந்த ஒரு சிறு புள்ளி, அவன் வாழ்க்கைத்தத்துவம் அத்தனையையும் மாற்றியமைத்தது.

கோக்குவாமீது அவன் வைத்திருந்த பற்றுப் பெரிது. அவளுக்காக அவன் உயிரும் தரத் தயங்கவில்லை. அவன் காதல் தன்னலக் காதலாய் அமைந்திருந்ததால், இப்போதும் அவன் கோக்குவாவை மணக்கத் தடையில்லை. அந்தப்புள்ளி இன்னும் பலநாள் வெளியாருக்குத் தெரியவராது. ஆனால், அவன் தன் காதலுக்காக ஓர் உயிரின்—தன் உயிருக்குயிரான ஒரு காதலியின்—வாழ்வைப் பலியிட விரும்பவில்லை. முன்பு செல்வத்தை வெறுத்ததுபோலக் காதலையும் துறந்து நடைப்பிணமாகத் திரிவது அல்லது உயிரை எந்த நல்ல காரியத்திலாவது ஈடுபடுத்திப் பலியிடுவது என்று அவன் துணிந்தான்.

இதுமுதல் அவன் தலை, எண்ணெயை மறந்தது. உடல், புத்தாடைகளையும் நறுமணப் பொருள்களையும் மறந்தது. அவன் கலைமாளிகையையே கண்ணெடுத்துப் பாராமல், பகலையும் பட்டணத்தின் தெருக்களையும் நாடாமல், காடு கரைகளில் கரந்து திரிந்தான்.

திடுமென ஒருநாள் அவனுக்குப் புட்டிச்சாத்தனின் நினைவு வந்தது. 'ஆ, இப்போதுமட்டும் அந்தப் புட்டி கைவசமிருந்தால், ஒரேஒரு தடவை அதன் உதவி நாடி, என் காதலுக்கு இருக்கும் ஒரே தடையைப் போக்கிக் கொண்டு, அதை மீட்டும் விற்றுவிடலாமே!'' என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

பணத்துக்காக விரும்பாத புட்டிச்சாத்தனை அவன் காதலுக்காக மீண்டும் ஒருமுறை விரும்பினான்.

அவன் உள்ளத்தில் மீண்டும் நம்பிக்கை ஒளி ஏற்பட்டது. உடலில் மீண்டும் தெம்பு ஏறிற்று. திருமண நாளைச் சற்று ஒத்திவைத்திருப்பதாக ஹோனுனுவில் கியாஹேனுவுக்குக் கடிதம் எழுதிவிட்டு, அவன் புறப்பட்டான். புட்டியோடு மழையில் அனுப்பிவைத்த நண்பன் லோப்பாக்காவை நாடி அவன் கால்கள் விரைந்தன.

ஓடும் வண்டிகளில் அவனுக்கு இருக்கப் பிடிக்கவில்லை. வண்டியைத் தாண்டிஓட நினைத்தான். நீர் கிழித்துச் செல்லும் படகில் அவன் இருக்கை கொள்ளவில்லை. சிறகிருந்தால் பறக்க உதவுமே என்று எண்ணினான்.

*　　*　　*　　*

'இருந்தவன் எழுந்திருக்குமுன் நடந்தவன் காதவழி' என்று ஒரு பழமொழி உண்டு. அவனிடம் பலநாள் தூங்கிக்கிடந்த புட்டிச்சாத்தன் அவன் கையிலிருந்து சென்றதே, அவனிடமிருந்து நெடுந்தொலை பறந்தோடி விட்டது என்பதை அவன் கண்டான்!

லோப்பாக்காவை அவனால் காணமுடியவில்லை. அவன் பெருஞ் செல்வமடைந்து தொலைநாடுகளில் வணிக மன்னனாக வாழ்வதாகக் கேள்விப்பட்டான். அவன் நண்பர் சிலரைப்பற்றி உசாவினான். அவர்களும் திடீரெனப் பெருவாழ்வு கண்டு பெருமாக் கடலின் பல எல்லைகளில் மாளிகைகள் கட்டி வாழ்வதாகக் கேள்வியுற்றான். 'அந்தோ! நான் அருமை யறியாது வாளா வைத்திருந்த புட்டி, சென்ற வழியெல்லாம் செல்வக் குவை தூவிய வண்ணம் நெடுந்தொலை சென்றிருக்கிறது! இப்போது அதன் விலை என்னவாயிருக்குமோ?' என்ற கவலை அவன் உள்ளத்தில் எழுந்தது.

'புட்டியை வாங்குவதில் திறமை இல்லை, பயன் படுத்துவதிலும் விற்பதிலுந்தான் திறமை இருக்கிறது' என்பதை அவன் கண்டான். செல்வமும் மகிழ்ச்சியும் தாண்டவமாடிய இடங்களிலெல்லாம் அதை விற்று விட்ட திறனைத்தான் அவன் கண்டான். செல்வத் துடன் துயரம் குடிகொண்ட இடந்தான் அது தங்கி இருக்கும் இடமா யிருக்கவேண்டுமென்ற குறியிலக் குடன் அவன் ஓயாது தேடினான்.

முத்துத் துறைமுகத்தை அடுத்த ஒரு பேட்டையில் ஒரு வெள்ளை இளைஞன் வீட்டில் கிவ் தான் நாடிய குறி யிலக்கை அடைந்தான். ஆங்கே செல்வத்தின் தடம் இருந்தது. ஆனால், சிந்தனையும் சீர்கேடும் அதில் படர்ந் திருந்தன.

அவன் தேடிச்செல்லுமுன் வெள்ளை இளைஞன் அவனை நாடி எதிர்வந்தான். கிவ் கைநடுங்க வாய் குளற அவனைப் பற்றிக்கொண்டு, 'புட்டிக்காக, புட்டிக் காகவே நான் வந்தேன்', என்றான்.

வெள்ளை இளைஞன் நல்லவன். இரக்க உள்ளம் படைத்தவன். அவன் கிவைக் கட்டிக்கொண்டு கோவென்று அழுதான். கிவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'புட்டியை விற்க மனமில்லையா? அல்லது புட்டி வேறி டம் சென்றுவிட்டதா? ஏன் அழுகிறாய்? அதை உன் னிடமிருந்து வாங்கத்தானே வந்திருக்கிறேன். உனக்கு இன்னும் ஏதேனும் வேண்டுமானாலும், புட்டியிட மிருந்து பெற்றுக்கொள். நான் அதை வாங்கிக்கொள் ளவே வந்திருப்பதால், நீ தயங்கவேண்டாம்' என்றான்.

இளைஞன், "அந்தோ! நான் அதற்காகவெல்லாம் அழவில்லை. புட்டி என்னிடம்தான் இருக்கிறது. அதை

நான் விற்கவும் தயங்கவில்லை. ஆனால், நான் தொழிலாளி. என் முதலாளியிடமிருந்து திருடிய காசுகொண்டு அதை வாங்கினேன். வாங்கியதிலும் எனக்குப் பழி. அதை எளிதில் யாரும் திரும்ப வாங்கமுடியாத விலைக்கும் வாங்கிவிட்டேன். அது என்னிடம் இருந்தாலும் எனக்குப் பழி. ஆனால், இப்போது நீ அதை வாங்க வந்திருக்கிறாய். என்போல் நீயும் இளைஞன்தான். ஆனால், நீதான் கடைசி ஆளாகவேண்டும். என் பழிசார்ந்த வாழ்விலிருந்து தப்ப, உன் வாழ்வையே நான் பாழாக்க வேண்டும். இத்தகைய இருதலைப் பழியில்வந்து சிக்கி விட்டேனே என்றுதான் வருந்துகிறேன்,'' என்றான்.

கிவினால் அந்த நேரத்திலும் ஒரு சிரிப்புச் சிரிக்க முடிந்தது. அது பேய்ச் சிரிப்புத்தான். ஆனால் அதிலும் ஒரு கனிவு இருந்தது. காதலுக்காக அவன் பழி ஏற்கவும் தயங்கவில்லை. இந்த இளைஞன் தனக்காக அழாமல் இன்னொருவனுக்காக அழுவதைக் காண, அவன்மீது ஏற்பட்ட பாசமும் அவன் கவலைகண்டு இரங்கும் இரக்கமும் அந்த நகைப்பில் கலந்திருந்தன.

'ஆனால், "காசு!," "நீதான் கடைசி ஆள்!" இவற்றின் பொருள் என்னவாயிருக்கக் கூடும்?' என்று சிந்தித்தான்.

'நீ வாங்கிய விலைதான் என்ன?' என்று கிவ் கேட்டான்.

இளைஞன் குரல் ஈயின் குரலினும் தாழ்வுற்றது. 'இரண்டு காசுகள்' என்றான்.

கிவுக்கு இப்போது தன் கோரநிலை புரிந்தது. 'இரண்டு காசுக்கும் குறைத்துத்தான் வாங்கவேண்டும். அதற்குக் குறைந்த விலை ஒன்றே ஒன்றுதான்—ஒரு

காசு! அதன்பின் அதை யாரும் வாங்க முடியாது! அதனுடன் தான் தன் வாழ்வை ஒப்படைத்து—அந்த நரகவாதையை—........' அதற்குமேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. அவன் உடல் வியர்த்தது. அவன் உறுப்புக்கள் நடுங்கின.

அவன் உடலைவிட இளைஞன் உடலில் நடுக்கம் மிகுதியாயிருந்தது. அவன், "அண்ணா, நான் இந்தப் பேயிடமிருந்து தப்பக்கூட உன்னை அதனிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. இது என்னிடமே இருக்கட்டும். உனக்கு வேண்டாம். ஏற்கெனவே பழிச் செயல்கள் செய்த நானே மீதிப் பழியையும் சுமந்து செல்லட்டும். பொன்னான உன் வாழ்வை அது கறைப்படுத்த வேண்டாம்," என்றான்.

கிவ் நடுக்கம் தீர்ந்தது. அவன் வெள்ளை இளைஞனைப் பிடித்து ஆதரவாக ஒரு திண்ணையின் பக்கம் கொண்டு சென்றான். "தம்பி! இதோ, என்னைப் பார் நான் துணிந்து வந்திருக்கிறேன். பழியச்சம் என்னை ஒன்றும் செய்யாது. அதைக் காட்டிலும் ஒரு பெரிய ஆற்றல் என்னை ஆட்டிப் படைக்கிறது. நான் அதை வாங்கத்தான் போகிறேன்," என்றான்.

"அப்படி என்ன ஆற்றல் இருக்கிறது, உலகில்?" என்று வியப்பே உருவாகக் கேட்டான் இளைஞன்.

"காதல்!" என்றான் கிவ்.

கிவிடம் வெள்ளியாக ஒரு வெள்ளிதான் இருந்தது. "உன்னிடம் சில்லறை இருக்கிறதல்லவா?" என்று கேட்டான். இளைஞன் உயிரைப் புதைத்து வைத்திருப்பதுபோல, தன் மடியில் ஐந்து காசுகளைச் செருகி வைத்திருந்தான். வெள்ளியைக் கொடுத்து முதலில்

அவற்றைக் கிவ் வாங்கினான்; பின் ஒரு காசு இளைஞனிடம் சென்றது. முன் ஐம்பது வெள்ளியின் சின்னமாக அவனிடம் வந்த புட்டிச்சாத்தன், இப்போது ஒரே ஒரு காசின் சின்னமாக அவனிடமே திரும்பி வந்தது.

அவன் வீடு திரும்பும்வரைகூடக் காத்திருக்கவில்லை. புட்டி கையில் வந்ததே, "என் பெரு நோய்க் கூறு நீங்கி நான் உடல்நலம் பெறுக," என்று புட்டிச் சாத்தனிடம் கூறினான்.

வீடு வந்து சேர்ந்தபின் அவன் குளிப்பறை சென்றான். உடலிலிருந்த புள்ளி மறைந்து போய் விட்டது. அவன் துள்ளிக் குதித்தான்.

அவன் இப்போது கவலை தீர்ந்தான். ஆனால், பாடவில்லை. இனித் தன் காதலியைப் பெற்றுத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற மகிழ்ச்சி எழுந்தது. ஆனால், காதலுக்காக மீளா நரகத்தையும் விலைக்கு வாங்க வேண்டி வந்தது என்ற எண்ணம் அந்த மகிழ்ச் சிக்கு ஒரு கரைகட்டி இருந்தது.

அந்தச் சிறு புள்ளி தந்த வாழ்க்கைத் தத்துவத் தைத் திருத்திப் புட்டி மற்றொரு வாழ்க்கைத் தத்து வத்தை அவனுக்கு அறிவுறுத்திவிட்டது. 'பகலும் இரவும் தனித்தனி வராது; சேர்ந்தேவரும். அது போல இன்பமும் துன்பமும் இணைந்தே பெறவேண்டும். இணைத்து ஏற்கத் தயங்கக்கூடாது' என்பதே இந்தப் புதுத் தத்துவம்.

இது ஆறுதலளிக்கும் தத்துவம். ஆனால், ஆரவாரித்து ஆர்ப்பரிப்பதற்குரிய தத்துவமல்ல.

கிவின் முதல் பேரவாவைப் போலவே, இரண்டாவது பேரவாவும் புட்டிச்சாத்தனால் நிறைவேறிற்று

அவன் கோக்குவாவை மணம் செய்துகொண்டு புது மனைவியுடன் கலைமாளிகையில் குடிபுகுந்தான். கலை மாளிகையில் முதல் தடவையாக வாழ்வின் களை ஒளி வீசிற்று.

கோக்குவா பச்சைக்கிளிபோல் மாளிகையெங்கும் பறந்தாள். அவளுடைய குயிலினுமினிய குரல் மாடிப் பலகணிகளிலிருந்து தென்றலில் மிதந்து குயில்களுடன் இன்பப் போட்டியிட்டது. கிவும் அடிக்கடி அவள் பாடலுடன் சேர்ந்து பாடுவான். அவள் காதல் நிறைவி லிருந்து பொங்கிய மகிழ்ச்சியால் அவன் புட்டிச்சாத்த னைப் பெரிதும் மறந்திருந்தான். எப்போதாவது தனியா யிருக்கும் நேரம் அந்த நினைவு வந்தாலும் அவன் காதற் கடமைகள் அதைத் துரத்தி யோட்டின.

குயிலின் பாட்டுக்கும் ஒரு காலமும் இடமும் உண்டு. பச்சைக்கிளி எப்போதும் பறந்துகொண்டே இராது. கோக்குவாவின் கன்னி இளமை கட்டிளமை யாயிற்று. கட்டிளமை முற்றிளமையாக முதிர்ந்தது. அவள் கால்கள் வரவர நிலத்தில் பாவவும் பதியவும் தொடங்கின. அவள் குரல் மழலைத்தன்மை இழந்தது. ஆடல்பாடல் இன்ப அமைதியாக நிலவிற்று. ஆனால், இம்மாறுதல்களை அவள் அறியவில்லை. அவள் உள்ளத் தின் காதல் இளங் குருத்தாயிருந்து இப்போது பசுமர மாகி ஆணி வேரிட்டுக் கிவின் வாழ்வில் ஆழ்ந்தது,

கிவ் கோக்குவாவினுடன் முன்போலவே கூடிக் குல விப் பேசியிருந்தான். ஆனால், அவள் அப்பால் சென்ற போதெல்லாம் தன் காதலுக்காகத் தான் செய்த பெருந் தன்மறுப்பும் அதன் பளுவும் அவனை அழுத்தின. அதன் கோர நினைவுகளால் அவன் அடிக்கடி கண்ணீர்

விட்டுக் கலங்குவான். பல இரவுகள் அவன் தனியே சென்று தன் தலையணைகளைக் கண்ணீரால் துவைப்பான். ஆனால், இவற்றை மனைவி காணாமல் மறைத்து, கழூவியகண்களுடன் புன்முறுவலை வருவித்துக்கொண்டு அவளிடம் பேசுவான். இம் முயற்சிகளால் தன்னைப் பிடித்த பெருங்கவலை தன் மனைவியின் மாசுமறுவற்ற வாழ்வில் பற்றிவிடவில்லை என்று அவன் அமைந்திருந்தான்.

கிவின் நெற்றியில் ஏற்பட்ட அடங்கிய கவலையின் கோடுகளைக் கோக்குவாவின் கண்கள் முற்றிலும் காணாமலில்லை. அத்துடன் அவன் வாட்டமும் உடல் நலிவும் அவள் உள்ள அமைதியைத் தட்டி எழுப்பின. கிவ் பிரிந்துசென்று தன் பெருங்கவலையில் ஆழ்ந்தது போலவே, அவளும் அடிக்கடி பிரிந்துசென்று அதன் காரணத்தை அறிய முனைந்தும் அதுபற்றி உள்ளங் கசிந்தும் வருந்தலானாள்.

ஒருநாள் கிவ் வீட்டில் நுழையும்போது சந்தடி இல்லாமலிருந்தது. யாருமில்லை என்று எண்ணி அவனும் குரல்கொடுக்காமல் உள்ளே வந்தான். தன் அறைக்கு அருகில் ஏதோ குழந்தை தேம்பித்தேம்பி அழுவது போன்ற குரல் கேட்டு எட்டிப் பார்த்தான். கோக்குவா நிலத்தில் விழுந்து புரண்டு அழுதுகொண்டிருந்தாள்.

அவன் அவளை வாரி எடுத்து மடிமீது கிடத்தித் தடவிக்கொடுத்த வண்ணம், "இந்த வீட்டில் நீ அழுவதற்கு என்ன தவறு நடந்திருக்கக் கூடும்? நீ மகிழ்ச்சியாயிருப்பதற்காக நான் உயிரைக் கொடுக்கவும் ஒருக்கமாக இருக்கிறேனே. என்னிடத்தில் சொல்லப்படாதா?" என்றான்.

அவன் அவள் கண்களைத் துடைத்தான்.

"அன்பரே, பாடலில் இல்லாத மகிழ்ச்சி ஆடலில் எங்கிருந்து வரும்? துன்பத்திலேயே அழுந்தியவர்கள் கூடக் காதலித்த பெண்ணை அடைந்து மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். ஆனால், நீங்கள் என்னை மணம் செய்யு முன் கவலையில்லாத இளங்காளையாக எங்கும் உலவி யதை நான் அறிவேன். நான் வந்தபின் நீங்கள் கவலை யுற்று வாடுவதை அறிந்தும் நான் எப்படி மகிழ்ச்சியோ டிருக்க முடியும்? நீங்கள் முகத்தில் எவ்வளவு மகிழ்ச் சியை எனக்காக வருவித்துக்கொண்டாலும், உங்கள் அகத்தின் வாட்டம் ஆகம் முழுவதையும் வாட்டுவதை நான் அறியாமலா இருக்கிறேன்?" என்றாள் அவள்.

அவன் அவளை உட்காரவைத்து அருகிலமர்ந்து கையைப் பற்றிக்கொண்டு ஆதரவாகப் பேசினான். "பாவம்! என் வாட்டத்தின் காரணமறியாமல் நீ வீணே வருந்துகிறாய். அது உன்னால் வந்ததல்ல. உன் காதலைப் பெற நான் கொடுத்த விலைதான் அது. பொரு ளைப் பெற்றபின் விலைக்கு வருந்துவார்களோ? நான் நடந்தவை யாவற்றையும் கூறிவிடுகிறேன். அப்போது தான் என் துன்பம் தவிர்க்க முடியாதது என்று அறிந்து அதற்காக நீ வருத்தப்படமாட்டாய்," என்றான்.

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள். அவன் மெல்ல விளக்கினான். கலைமாளிகையைத் தான் பெற்ற வகை, அதன்பின் காதல்வாழ்வுக்கு ஏற்பட்ட இடை யூறு, அதை நீக்கத் திரும்பவும் புட்டிச்சாத்தனைத் தேடியது, அதற்குக் கொடுத்த விலை ஆகிய யாவற்றை யும் அவன் அவளுக்கு விரிவாகக் கூறினான். பின், "இப் போது என் துயரத்துக்குரிய காரணத்தை நீ அறிந்து

கொண்டாய். ஒரு காசுக்குக் குறைந்து புட்டிச்சாத்தனை விற்கமுடியாதாதலால், நான் இனி இறுதிக்கால நரக வேதனையிலிருந்து மீள முடியாது. ஆகவே, என் துயரை என்னிடம் விட்டு, நீ உன் மகிழ்ச்சியை மட்டுமாவது எனக்கு அளிக்கப்பார்," என்றான்.

கோக்குவா எழுந்து நிமிர்ந்து நின்றாள். ஒரு கணத்தில் பெண்ணினத்தின் பீடு முழுவதும் அவள் சிற்றுடலில் பெருக்கெடுத்தோடிற்று. "பெண்ணைக் காதலித்து ஒரு ஆண் கெட்டான் என்ற பெயரைக் கோக்குவா பொறுக்கமுடியாது. எனக்காக நீங்கள் உங்கள் நலனைக் கெடுத்துக்கொண்டால், உங்கள் உயிரைப் பலியிட்டால், உங்களுக்காக நானும் என் நலனைக் கெடுத்துக்கொள்ளமுடியும்; உயிரைப் பலியிட முடியும் என்று காட்டுகிறேன்," என்றாள்.

"நீ எனக்காக எதுவும் செய்வாய் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால், ஒருயிரல்ல; ஒன்பது உயிர்கொடுத்தாலும் போன என் அமைதி திரும்ப வரமுடியுமா? ஆகவே, முடியாத காரியத்துக்காக மனம் கலங்காமல், முடிகின்ற காரியங்களில் கருத்துச் செலுத்து. எனக்கு இறுதியமைதி தரமுடியாவிட்டாலும், அதுவரை நீ இன்பமாயிருப்பதை நான் காணும் அமைதியையாவது நீ எனக்குத் தரலாமல்லவா?" என்றான் அவன்.

"முடியாது என்ற சொல்லை என்னிடம் சொல்லாதீர்கள். ஒரு பெண் நினைத்தால், கோக்குவா திட்டமிட்டால் ஆகாதது எதுவுமில்லை. பெண்ணின் காதல், கோக்குவாவின் காதல் என்ன செய்யும் என்பதை நீங்கள் இனித் தான் காண்பீர்கள். ஆடவர் அறிவு கடந்து காதல் கனிந்த பெண்ணின் அறிவுக் கண்கள் அறியவல்லன."

"சரி, நீ என்ன செய்வாய், பார்க்கலாம்!"

"பார்ப்பதென்ன, இதோ ஒரு காசு, ஒரு காசு என்று நீங்கள் கைகட்டிக்கொண்டு அழுகிறீர்கள். அமெரிக்கக் கொடியின் ஆட்சியில் ஒரு காசைவிடக் குறைந்த தொகை இல்லைதான். ஆனால் அமெரிக்காவை விட்டால் வேறு உலகமே இல்லையா? நீங்கள் கவலையில் சிந்தனையை இழந்துவிட்டீர்கள். பிரிட்டனுக்குச் சென்றால் சல்லி[1] என்று ஒரு சிறு பணம் இருக்கிறது. ஒரு காசுக்கு இரண்டு சல்லி மாற்றலாம். இன்னும் அப்பால் சென்றால் ஃவிராண்ஃசு இருக்கிறது. அங்கே சிறுகாசு என்று ஒரு பணம் இருக்கிறது. நம் காசுக்கு அதில் ஐந்து கிடைக்கும். எழுங்கள், புறப்படுங்கள், போகலாம். ஃவிரஞ்சுக்கொடி பறக்கும் தாகிதி தீவுக்குச் சென்றால், அங்கே உங்கள் காசு கடந்து நாலு சிறு காசு, மூன்று சிறு காசு, இரண்டு சிறு காசு, ஒரு சிறு காசு என்று நான்கு கைம்மாற்றுப் பண்ண இன்னும் இடமிருக்கிறது. விற்பனைக்குத் தூண்ட நாம் ஒருவருக்கு இருவர் இருக்கிறோம். எழுங்கள், புறப்படுங்கள். கோக்குவாவைக் கட்டினவன் கைகட்டிக்கொண்டு அழத் தேவையில்லை," என்றாள்.

கோக்குவாவின் அறிவார்ந்த திட்டம் கண்டு கிவ் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டான். அவளிடமே தன் கவலைகள் அனைத்தையும், அவற்றைத் தீர்க்கும் பொறுப்பையும் விட்டுவிட்டுப் புறப்பட ஏற்பாடானான்.

கோக்குவா அன்றுமுதல் இரண்டு மூன்று நாட்களாக ஆரவாரமாகப் பயணத்துக்குத் திட்டம் செய்தாள். கிவைப்போல அவள் புட்டிச்சாத்தனைத் தொட

1. Farthing.

அஞ்சவில்லை. தேவைக்கு வேண்டிய பணத்தைக் கேவைத் தூண்டிப் புட்டிச்சாத்தன் மூலம் தருவித்து, தன் செல்வத்தை எல்லாரும் காணும்படி பகட்டாகச் செலவு செய்தாள். தாகிதி செல்லச் சிலநாள் பிடித்தது. அங்கே பிரிட்டிஷ் தூதர் அலுவலக மாளிகைக்கெதிரே ஒரு மாடி விடு எடுத்துக்கொண்டு இதே முறையில் ஆரவாரமாக வாழ்ந்தார்கள்.

அவர்கள் செல்வத்தைக் கண்டு வியந்து பொருமைப்பட்டவர்களிடையே நேரம் பார்த்து இருவரும் தனித்தனியாகப் புட்டிச்சாத்தன் ஆற்றல் பற்றிப் பேச்செடுத்தார்கள். அதை வாங்கியவர்களுக்கு இத்தனை செல்வமும் 'இம்'மெனுமுன் எளிதாகக் கிடைக்கும் என்று ஆவல் ஊட்டினார்கள். ஆனால், தானாகப் பழுக்க வேண்டிய பழத்தைக் கல்லிப் பழுக்கவைத்த கதையாகவே அவர்கள் முயற்சி இருந்தது. புட்டிச்சாத்தனைப் பற்றிய பேச்சுக் கேட்டவர்களெல்லாம் ஒன்று அதை நம்பாதவர்களாயிருந்தனர்; அல்லது அதனால் வரும் நலங்களைவிடத் தீங்குகளையே பெரிதாக எண்ணி அஞ்சியவர்களாக இருந்தார்கள். நாளடைவில் புட்டிச்சாத்தன் தொல்லைக்கஞ்சி எவரும் அவர்களுடன் நெருங்காமல் விலகத் தொடங்கினர்.

கேவ், கோக்குவா ஆகிய இருவர் காதல்வாழ்வில் மீட்டும் தனித்தனி துயர், வாய்பேசா எண்ண நிழல்கள் படர்ந்தன. புட்டிச்சாத்தனைப் பற்றிய கவலை ஒன்றே இருவர் உள்ளத்திலும் இருந்து அவர்கள் ஒருவரை ஒருவர் அறியாமல் உருக்கிற்று. பல இரவுகளில் ஒருவர் தூங்குவதாக மற்றவர் எண்ணிக்கொண்டு, இருவருமே துயிலொழித்திருந்தனர். ஒருவேளை இருவரில் ஒருவர்

சற்று அயர்ந்தால்கூட, விழிக்கும்போது மற்றவர் கண்ணீர் பெருக்கி வீங்கிய முகத்துடன் தூங்காமல் இருப்பதையே கண்டனர்.

ஒருநாள் கோக்குவா சற்றுக் கண்ணயர்ந்து உறங்கி எழுந்தபோது அருகே கீவைக் காணவில்லை. வீடெங்குந் தேடியும் பயனில்லை. தோட்டத்தின் பக்கமுள்ள பல கணியில் சென்றுபார்த்தாள். அவள் உள்ளம் பதை பதைத்துப் பாகாய் உருகிற்று. கீவ் ஒரு மரத்தினடியில் மண்ணில்கிடந்து புரண்டு வாய்விட்டுப் புலம்பினான்.

முதலில் எழுந்த உணர்ச்சியில் கோக்குவா அவனிடம் சென்று தேறுதல்சொல்ல எண்ணினாள். ஆனால், அவள் பெண்மையறிவு விரைவில் எழுந்து அவனைத் தடுத்தது. மனைவிக்குத் தெரியாமல் வெளியே சென்று தன் துயரைக்கொட்டும் கணவன் உள்ளம், அத்துயரை அவள் அறிந்துவிட்டாள் என்று காணப்பொறுது என்பதை, அவள் உணர்ந்தாள். ‘இப்போது வேண்டுவது தேற்றுதல் அல்ல, துன்பந்தவிர்த்தல். காதலுக்காகத் தன் எதிர்கால நலனைத் துறந்த ஒப்பற்ற காதலனுக்குத் தான் செய்வது அதே துறவன்றி வேறெதுவுமன்று,’ என்று அவள் தனக்குள் துணிவுகொண்டாள்.

அவள் உள்ளம் முடிவான திட்டமிட்டது. அவள் ஒரு காசுக்குரிய சில்லறையாகிய ஐந்து சிறு காசுகளை எடுத்துக்கொண்டு பேசாமல் வெளியே புறப்பட்டாள். மாளிகையண்டையுள்ள தெருக்களில் சுற்றுமுற்றும் உலவினாள்.

காசநோயால் உடல்முழுதும் அரிக்கப்பட்டு, ஓயாது இருமிக்கொண்டே உறக்கமில்லாது உழலும் ஒரு கிழவனை அவள் கண்டாள். அவனருகில்சென்று அவன்

நோய்பற்றிக் கேள்விகள் கேட்டு ஆதரவாகப் பேசினுள். ஓர் இளம்பெண் இந்த வேளையில் தன்னிடம் வந்து இவ்வளவு கனிந்து பேசுவதுகண்டு கிழவன் வியப்படைந்தான். ஆனுல், அவன் உள்ளத்தில் அதனுல் மிகவும் ஆறுதல் ஏற்பட்டது. அவன் தன் இருமல்களிடையே அவளை நன்றியறிதலுடன் நோக்கி, "உனக்கு என்ன என்னுல் செய்யமுடியும், மகளே! உன் மனத்தில் ஏதோ துன்பம் இருப்பதாக உன் முகம் காட்டுகிறதே!" என்ருன்.

கோக்குவா அவனிடம் புட்டிபற்றிய கதையையும் அந்தத் தீவுக்குத் தானும் தன் கணவனும் வந்திருப்ப தன் காரணத்தையும் கூறினுள். நினைத்தபடி எவரும் புட்டியை வாங்காததால் தன் கணவன்படும் துயரையும் எடுத்துரைத்தாள்.

கிழவன், "மகளே! இதில் நான் என்னசெய்ய முடியுமோ, செய்கிறேன். நான் நெடுநாள் இருக்கப்போவதில்லை. என்னை அதை வாங்கச் சொல்கிருயா?" என்ருன்.

"அவ்வளவு கொடிய காரியத்தை நான் யாரையும் செய்யச் சொல்லமாட்டேன். அதிலும் உம்மைப்போன்றவர்களுக்கு உதவ வேண்டியதைவிட்டு, இந்தமாதிரிப் பழிகளில் தள்ளுவதா? நான் கேட்பதெல்லாம் அந்தப் புட்டியை என் கணவனிடமிருந்து நாலு சிறு காசு கொடுத்து வாங்கித் திரும்ப என்னிடம் மூன்று காசுக்கு விற்றுவிடுவதுதான். வாங்குபவள் நான் என்று தெரிந்தால், என் கணவர் விற்கமாட்டார். எனக்கோ நான் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை. என் கணவனை மகிழ்வித்துப் பார்க்கமட்டுமே விருப்பம்," என்ருள் அவள்

கிழவன் அவளைக் கைகூப்பி, "அம்மணி, நீ ஒரு பெண் தெய்வம். இதோ நீ கோரியபடி செய்கிறேன்," என்றெழுந்தான்.

கோக்குவா நாலு சிறு காசை அவனிடம் கொடுத்து, "இந்த இடத்திலேயே நான் இருப்பேன். விரைவில் வாருங்கள்," என்றாள்.

அவள் திட்டமிட்டதுபோலக் காரியம் முடிந்தது. கிழவன் புட்டியுடன் வந்தான். கோக்குவா மூன்று சிறு காசுகள் தந்து புட்டியைப் பெற்றுக்கொண்டாள். அவளிடம் புட்டியை விற்க மனமில்லாமல் கிழவன் தழதழத்தான். ஆனால், கோக்குவாவின் வீர உள்ளம் கிழவனைப் பழிகொள்ள ஒருப்படவில்லை. புட்டியுடன் அவள் சென்றபின் கிழவன் அவள் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்றான்.

இப்போது துன்பத்தின் முறை கோக்குவாவுக்கும் இன்பத்தின் முறை கீவுக்குமாக, அவர்கள் தொடக்கக் கால உறவு தலைமாறிற்று. புட்டியைத் தொலைத்து விட்டோமென்ற மகிழ்ச்சியில் கீவ் உறங்கினான். அது உண்மையில் தன்னிடமிருந்து தன் மனைவியிடமே சென்றிருக்கிறது என்பதை அவன் கனவிலும் கருதவில்லை. ஆனால், அவன் உறங்கும் வேளையிலெல்லாம் கோக்குவா விழித்திருந்து தன் எதிர்காலம்பற்றிக் கவலைப்பட்டு அரற்றிக்கொண்டிருப்பாள். ஆனால், அத்துன்பத்தினிடையேயும் அவளுக்கு ஒரு ஆறுதல் இருந்தது. கணவன் காதலுக்கும் அவன் தன் மறுப்புக்கும் தான் சரிநிகரான கைம்மாறுசெய்து கடனாற்றிவிட்ட அமைதியே அது.

புட்டியை ஆவலாக வந்து வாங்கிக்கொண்ட கிழவனைப்பற்றிக் கீவ் அடிக்கடிப் பேசுவான். கிழவனின் அறியாமையை அச்சமயங்களில் அவன் குத்திக் கேலி செய்யாதிருப்பதில்லை. 'முட்டாள், அறிவில்லாமல் தன் வினையைத் தானே வாங்கிக்கொண்டு ஓடினான். அவனுக்கு இருப்பதோ ஒன்றிரண்டு மாதம். அதற்குள் எங்கே யார் அதை இரண்டு சிறுகாசு கொடுத்து வாங்கப் போகிறார்கள். அவனைப்போன்ற இன்னொரு முட்டாள் இந்தத் தாகிதித்தீவு முழுவதும் தேடினாலும் கிடையாதே!' என்று கூறியவண்ணம் கவலையற்ற உள்ளத்துடன் கீவ் கலகலவென்று நகைப்பான்.

கணவனின் இரக்கமற்ற கேலி கோக்குவாவின் காதலுள்ளத்தை அறுத்தது. அவள் கிழவன்மீது பரிவு கொண்டு பேசினாள். தான் விடுதலை பெற்றதுபற்றி மகிழ்வதற்கு மாறாக, அதற்கு உதவிய கிழவனிடமே பரிவுகாட்டுகிறாளே என்று கீவ் புழுங்கினான்.

கோக்குவா இப்போது தன் கடமையைச் செய்து விட்டாள். ஆனால், புட்டியை அவள் தானே வைத்து அழிய விரும்பவில்லை. மூன்று சிறு காசுக்குக்கீழ் இன்னும் இரண்டு கை மாற இடமிருந்தது. ஆகவே, இரு சிறு காசுகள் தந்து அதை யாராவது வாங்கிக்கொள்ளக் கூடும் என்று கருதியிருந்தாள். ஆனால், மனைவி நிலை அறியாத கணவன் திட்டம் இதற்குக் குறுக்கே சென்றது. தாகிதிக்கு வந்த காரியம் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் முடிந்துவிட்டதால், இனி ஹவாய்க்குப்போக அவன் படபடத்தான்.

அவளுக்கு வந்த மனக்கசப்பில், ஹவாய்க்குச் செல்லுவதற்குமுன் இருந்த ஓரிரு வாரத்தைக்கூட அவள்

தனக்காகப் பயன்படுத்த மனமில்லாமல், வீட்டுக்குள்ளாகவே அடைபட்டுக் கிடந்தாள். முன் காதலுக்காகத் தன் எதிர்காலத்தை இழந்த கிவின் இன்ப வாழ்வில் இப்போது அவளும் முழுதும் கலக்கமுடியாமல் குமுறினாள்.

ஒருநாள் கிவ் வெளியே சென்று மகிழ்ச்சியுடன் உலாவ விரும்பினான். மனைவியையும் தன்னுடன் அழைத்தான். அவள் 'உடம்புக்கு நலமில்லை' என்று மறுத்தாள்.

உண்மையில் அவள் உடம்பு மட்டுமல்ல, உள்ளமும் வெந்து புழுங்கிற்று. ஆனால், அவள் உள்ள நிலைமை அறியாத கிவ் உள்ளூரப் பொருமினான். "நான் நன்மை அடைந்ததை இவள் உள்ளூர விரும்பவில்லை. இவள் பசப்பிய காதலெல்லாம் இவ்வளவுதான் போலும்!" என்று அவன் கறுவிக்கொண்டான்.

அடுத்த நாள்முதல் கிவ் குடிக்கத் தொடங்கினான். குடிவெறியில் அவன் தன் புட்டி, தன் பணம், தன் மனைவி என உளறினான். குடித்திருந்த நண்பன், 'பணத்தைப் பெண்களிடம் நம்பி வைத்திராதேடா, பாவி! பெண்கள் எல்லாரும் மோசக்காரிகள்,' என்றான்.

புண்பட்ட கிவ் உள்ளத்தில் குடிவெறியில்கூட இந்தச் சொற்கள் பதிந்தன. அன்றுமுதல் இரவில் அவன் திடுமென எழுந்து கோக்குவா என்ன செய்கிறாள் என்று உளவறிய முயன்றான்.

அவன் கண்ட அந்த உளவு அவன் அமைதியை மீண்டும் கலைத்தது. அவன் கண்டுபிடித்தது அவள் மோசத்தையல்ல, அவள் பாசத்தை! நள்ளிரவில் புட்டியை வைத்துக்கொண்டு முன் தான் மனம் நொந்

ததுபோல அவள் இப்போது நொந்து புலம்பிக்கொண் டிருந்தாள்.

கிவுக்கு இப்போது புட்டியின் விற்பனைபற்றிய கோர உண்மை விளங்கிற்று. 'அந்தோ! எனக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்த மனைவியிடம் நான் என்ன நன்றிகெட்டதனமாக நடந்துகொண்டேன்! அவள் பத்தரைமாற்றுத் தங்கம். அவள் கேடடையக் கூடாது. நான் பாவி! சண்டாளன்! அந்தக் கேட்டை மீண்டும் நானே அவளறியாமல் என்மீது ஏற்றுக்கொள் வேன்,' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான்.

தான் உண்மையைக் கண்டுகொண்டதாகவே அவன் மனைவியிடம் காட்டிக்கொள்ளவில்லை. தான் திருந்தி விட்டதாகவும் காட்டிக்கொள்ளவில்லை. வழக்கம்போலக் குடிப்பதற்கு அவன் பணம் கேட்டு வாங்கிக்கொண்டு போனான். ஒரு காசை மாற்றிக் கையில் வைத்துக் கொண்டான்.

தன் மனைவிமீது அவதூறு கூறிய அதே குடிகாரனிடம் அவன் சென்றான். அந்த நண்பன் 'என்ன எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய், எத்தனை புட்டி இன்று எனக்கு வாங்கித்தரப் போகிறாய்,' என்று அரை மயக்கத்திலேயே கேட்டான்.

கிவ் அவன் மயக்கம்தீர இரண்டு குத்துக்கொடுத்து, 'அடே, கேட்ட பணம் தரும் புட்டி என் மனைவியிட மிருக்கிறது. ஆனால், அதை அவள் இரண்டு காசு கொடுத்தால்தான் விற்பாள். எனக்கு விற்கவும் மாட் டாள். நீ அதை வாங்கித் தராவிட்டால் என்னிடம் இனிப் பணம்பெற முடியாது. வாங்கித் தருவதாயிருந்

தால் இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் புட்டியிடம் வாங்கித் தருவேன்,' என்றான்.

'உன் புட்டிக்கதையை நான் நம்பவில்லை,' என்றான் நண்பன்.

'நீயே தேர்ந்து பார்த்துக் கொள்ளேன். என்னிட மிருந்து வந்ததாகமட்டும் கூறாமல் இரண்டு சிறுகாசு கொடுத்து என் மனைவியிடம் கேள். அவள் புட்டியைக் கட்டாயம் கொடுப்பாள்; கொடுத்தபின் எனக்குத் தரு வதற்கு முன் எத்தனை புட்டிக் குடிவகைகள் வேண்டு மானாலும் கேட்டுப்பார். அதன்பின் நான் ஒரு சிறுகாசு விலைதந்து அதை வாங்கிக் கொள்கிறேன்,' என்றான்.

அச்சாரமாகச் சிறிது குடிவாங்கிக் கொடுத்த பின் னால் நண்பன் இரண்டு சிறு காசுகளுடன் சென்றான். கீவ் அவனுக்காகக் காத்திருந்தான். நெடுநேரம் இருந் தும் அவன் வரவில்லை.

கீவ் கவலையுடன் அவனைத் தேடிக்கொண்டே தன் வீட்டுவரை வந்தான். வீட்டண்டை வரும்போது அவனெதிரே நண்பன் நடக்கமாட்டாமல் தள்ளாடிக் கொண்டு வருவது கண்டான்.

அவன் உடுப்பின் ஒவ்வொரு பையிலிருந்தும் ஒன் றிரண்டு புட்டியின் கழுத்துக்கள் நீட்டிக் கொண் டிருந்தன. கையில் நீண்ட ஒரு புட்டி இருந்தது. அவன் குடித்துக் கொண்டே நடந்து வந்தான்.

"அண்ணே! நல்ல புட்டிச்சாத்தன் அண்ணே! நீதானே எனக்கு இந்த நன்மை செய்தாய், நீ ஒரு புட்டி சாப்பிடுகிறாயா?" என்றான்.

கிவ் அவன் நிலைகண்டு இரங்கினான். "புட்டி சாப் பிடுவது அப்புறமிருக்கட்டும். அந்தப் புட்டிச்சாத்தன் எங்கே? அதை நான் விலைக்கு வாங்கிக்கொண்டு விடு கிறேன். இதோ, ஒரு சிறுகாசு, அதைக்கொடு," என்றான்.



கிவும் குடிகாரனும்

நண்பன் புட்டிச் சாத்தனை உட்சட்டையின் உட் பைக்குள் செருகி வைத்திருந்தான். அதைத் தட்டிக் காட்டி "ஒரு காசா! என்னை அவ்வளவு பைத்தியக்கார னென்று நினைத்தாய்? குடிவெறியில் என் குடிச் செல்வத்தை மறந்து கொடுத்து விடுவேன் என்று பார்த் தாயா? ஒரு சிறு காசல்ல. ஒன்பது நூறாயிரம் பொன் கொடுத்தாலும் இனி இந்தப்புட்டி என்னிடமிருந்து வராது. என்னை நீ கொன்றுவிட்டால் கூட, அந்தப்

புட்டியையும் புட்டிச்சாத்தனையும் விழுங்கிவிட்டுத்தான் உயிர் விடுவேன்,'' என்றான்.

கிவுக்கு அதனை அப்படியே விட்டுச்செல்ல மனம் வரவில்லை. அந்தப் புட்டியை வைத்திருப்பவனுக்கு நேர விருக்கும் நரக வேதனையை எடுத்து மீண்டும் விளக்கினான்.


'புட்டிகளின் அருமை தெரியாதவர்களிடம் சொல்லு அண்ணே, இந்தக் கதை எல்லாம்! எனக்குக் குடிக்கக் குடிக்கப் புட்டிதருகிற இந்தச் செல்வத்தை நான் ஒரு நாளும் கொடுக்கமாட்டேன். போ, இங்கே நின்று என்னைத் தடுத்தால், உன்னைக் கொன்று போடு வேன்,' என்று கூறிக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி இருட்டில் மறைந்தான்.

கிவ் முதலில் தான் கண்ட காட்சி உண்மைதானா, கனவா என்று உணர முடியவில்லை. ஆனால், ஆர அமர எண்ணிப் பார்த்தபின், நண்பன் செயல் அவனுக்குப் புரிந்தது; குடிப்பதல்லாமல் வேறு எதுவும் நாடாத அவன் மற்ற எல்லாரையும்விடப் புட்டிச்சாத்தனின் பிடிக்கு உகந்தவன். நரகில்கூடக் குடிக்க வழியிருந்தால், அதை வானுலகாகக் கருதுபவன் அவன்.

ஹவாய்க்குப் புறப்பட ஏற்கெனவே குறிப்பிட்ட நாளிலேயே கோக்குவாவுடன் கிவ் கப்பலேறினான். புட்டிச்சாத்தன்மூலம் கோக்குவாவுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட துன்பங்களுக்கு ஓர் எல்லை ஏற்பட்டது. ஆனால், புட்டிச்சாத்தன் தந்த செல்வம்மட்டும் இன்னும் வாழ்வில் வளமூட்டிற்று.

புட்டியைக் கடைசியில் வாங்கியவனைப்பற்றிக் கிவும் கோக்குவாவும் சிறிது கவலைப்பட்டிருந்தனர்.

ஆனால், கப்பலேறும்போது, அந்த நண்பன் சிறிதும் சலிக்காமல் புட்டிகளை ஈட்டிகள்போல் உடுப்பில் மாட்டிக்கொண்டு குடித்தபடியே, 'நீங்கள் என்னை ஏய்க்கப் பார்த்தீர்கள். நான் உங்களை ஏய்த்துவிட்டேன். ஆனாலும் புட்டிச்சாத்தன் பெயரால் உங்களுக்கு என் அழியா முழுநன்றி,' என்று கூறி விடையனுப்பினான்!



௨. மணிப்பாறை

பேர்த் நகரத்திலிருந்து டண்டிநகரம் நோக்கிப் பாய்ந்துகொண்டே யிருந்தது வெள்ளம், மனிதவெள்ளம்! வெள்ளத்தில் மிதந்துசெல்லும் குடங்களைப் போலப் பெரிய காணிக்கைப்பெட்டிகளைத் தலையில் சுமந்துகொண்டு தொண்டர்கள் அங்குமிங்கும் திரிந்தனர். பெட்டிகளின் சிறு துளைகளில் காசுகள் 'டங், டங்' என்று விழுந்தவண்ணம் இருந்தன. பலர் பொன் வெள்ளிக்காசுகளையும் பத்து நூற்றுக் கணக்கான காசு முறிகளையும் அவற்றினுள் ஆர்வத்துடன் திணித்தனர். டண்டிநகர் என்றும் காணுத ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நகர்ப்பொதுவில் கூடிற்று.

காற்றில் தானேஅடிக்கும் மணி ஒன்றைக் காலன் பாறைமீது கட்டவேண்டும் என்ற திட்டத்திற்காகவே இவ்வூர்வலமும், பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன.

'டே' கடற்கூம்பை[1] நோக்கிச்செல்லும் எந்தக் கப்பலும் அந்தப் பாறை கடந்தே செல்லவேண்டும். புயல் காலங்களில் அப் பாறையருகே அலைகளும் சுழல்களும் பேயலைகளாகவும் பேய்ச்சுழல்களாகவும் மாறிக் கப்பல்களை விழுங்கி ஏப்பமிட்டன. ஸ்காட்லந்தின் அப் பகுதியில் அந்தப் பாறைக்கு இரையாக ஒரு தந்தையையோ, மகனையோ, அண்ணனையோ, தம்பியையோ, மாமனையோ, மைத்துனனையோ, மருமகனையோ, கணவனையோ பிற சுற்றத்தாரையோ இழக்காத ஆண் பெண் பாலார் எவரும் இருக்கமாட்டார்கள் என்றே கூறலாம்.

---

1. Frite of Tay.

மக்கள் அதனைக் காலன்பாறை என்று அழைத்தது இதனாலேயே.

'காலன் பாறை'யில் ஒரு மணிகட்டி அதை 'மணிப் பாறை'யாக்கும் முயற்சிக்குப் பொதுக்கூட்டம் பேரா தரவு தந்தது. மணி புயலில் தானே அடித்து நெடுந் தூரம் கேட்கத்தக்க அளவில் பெரிதாகவும், எளிதில் இயங்கவல்லதாகவும் இருக்கவேண்டி யிருந்தது. இந்த இலக்கணங்களெல்லாம் பொருந்திய மணி ஹாலந்து நாட்டில் ஒரு வணிகன்வசம் இருந்த பேர்போன யூட் ரெக்ட்மணியே என்று அனைவரும் கருதினர். அது மிக வும் விலையேறியது. ஆயினும் அதை வாங்கப் போதிய அளவு பெருந்தொகை ஊர்வலத்திலும், பொதுக்கூட் டத்திலும் திரண்டிருந்தது. அதை வாங்கும் பொறுப் பையும், வாங்கிப் பாறையில் கட்டும் பொறுப்பையும் கூட்டத்தில் கலந்துகொண்டு பேரார்வத்துடன் பேசிய இளைஞன் மெக்ளிஸினிடமே விடப்பட்டது.

ஆண்ட்ரூ மெக்ளிஸ் மிக இளவயதிலேயே வாணிக முயற்சியை மேற்கொண்டிருந்தவன். அவ்வகையில் அவன் அடிக்கடி ஹாலந்தின் தலைநகரான ஆம்ஸ்டர்டம் சென்றதுண்டு. அப்போதெல்லாம் அவன் வாண்டர் மாக்ளின் என்ற யூத வாணிகனில்லத்தில் தங்கி இருப் பது வழக்கம். வாண்டர்மாக்ளின் ஆண்ட்ரூவின் சுறு சுறுப்பையும் நல்ல தோற்றத்தையும் கண்டு அவனிடம் மிகுதி ஈடுபாடுடையவனானான். மனைவியிழந்த மாக்ளி னும் ஆண்ட்ரூவும் அடிக்கடி ஒருங்கே விடுதி சென்று உணவுண்டு, வீட்டில் இரவு நடுயாமம் வரை புகை குடித்துக்கொண்டே பேசிக்கொண்டிருப்பார்கள். ஆண்ட்ரூவைப் போலத் தனக்கு ஒரு மகனிருந்தால்

எவ்வளவு நலமாயிருக்கும் என்று அச்சமயங்களில் வாண்டர்மாக்ளின் எண்ணுவான். ஏனென்ருல், அவனைப் போன்ற செட்டும் சுறுசுறுப்பும் உடைய இளைஞன் தன் பெருஞ் செல்வத்தைப் பாதுகாப்பதுடன் அதைப் பெருக்கவும் வகை தேடுவான் என்று வாண்டர்மாக்ளின் கருதினுன்.

டண்டிப்பகுதியில் உள்ளவர்கள் காலன்பாறைக்காக வாங்க எண்ணிய யூட்ரெக்ட் மணியும் அதனையொத்த புகழ்மிக்க மணிகளும் வாண்டர்மாக்ளினின் மாமணி இல்லத்திலேயே இருந்தன. ஆகவே ஆண்ட்ரூமக்ளிஸ் ஆம்ஸ்டர்டம் சென்றபோது மீட்டும் நேரே அவனிடமே விருந்தினனுனன்.

முன் மெக்ளிஸ் வந்தபோது வாண்டர்மாக்ளின் வீட்டில் இல்லாத ஒரு புது உயிர் இப்போது அங்கே இருந்தது. அதுவே அவன் புதல்வி கதரினு. முன் பெல்லாம் தாயற்ற நிலையில் அவன் பள்ளி இல்லங்களிலேயே தங்கித் தன் படிப்பில் கவனமாயிருந்தான். இப்போது அவள் படிப்பும் முடிந்துவிட்டது. மணவினை பற்றிக் கவனிக்க வேண்டிய பருவமும் அவளை அணுகிற்று.

வாண்டர்மாக்ளின் தன் நண்பன் மெக்ளிஸை முக மலர்ச்சியுடன் வரவேற்ருன். "ஆ, வருக ஆண்ட்ரூ மெக்ளிஸ், வருக! புகழ்மிக்க யூட்ரெக்டின் மணியை வாங்க வந்திருக்கிறீர்களென்று அறிகிறேன். காலன் பாறையின் காரிடர்களையெல்லாம் இதற்குமுன் நீரே என்னிடம் எத்தனையோ தடவை கூறியிருக்கிறீர். இப் போது அந்தக் காரிடர்களை அகற்றுவதற்குரிய கருவியாக இம் மணியைக் கோரி வந்திருக்கிறீர். நானும் அந்தப்

பாறையின் இன்னல்களைச் சிறிது அறிந்தவன்தான். ஆகவே, உம் முயற்சியை நானும் வரவேற்கிறேன்," என்று அவன் முகமன் உரைத்தான்.

சிறிது நேரம் சென்றபின் மீண்டும் மணிபற்றிய பேச்சு வந்தது. இத்தடவை அது வெறும் பொழுது போக்குப் பேச்சு அல்ல. தொழில்முறைப் பேச்சு.

"எல்லாம் சரிதான், தம்பி! மணி மிகவும் விலை பிடிக்குமே! மணியின் தரம் உயர்ந்தது என்பது மட்டுமல்ல, பளுவும் மிகக் கூடுதலாயிருக்கிறதே! நன்கு ஆய்ந்தமைந்து பார்த்துக் கேளுங்கள்."

"நாங்கள் உரிபவிலை கொடுத்துத்தான் கேட்கிறோம், அன்பரே!"

"அப்படியா! நன்று. பயனீடும் பொதுப் பயனீடாயிருக்கிறது. நானும் இதில் மிகவும் விலையேற்றம் செய்வதற்கில்லை. ஆகவே, மணியின் தனிச் சிறப்புக்குரிய வேலைப்பாட்டையும் கலைத்திறத்தையும் பற்றி நான் அவ்வளவாக வற்புறுத்தப்படாது. அடக்கப் பொருளாகிய உலோக விலையையே கூறுகிறேன். அது உண்மையில் நான் அதற்குக் கூறும் விலைகூட அல்ல. மணிவாணிகன் கிராஃவட் நான்கு மாதங்களுக்குமுன் கெஞ்சிக் கூத்தாடிக் கொடுத்துவிடும்படி கேட்ட விலைதான்—அது சிறு தொகையே—பதினாயிரம்பொன்—ஆனால், உன் கையில் அவ்வளவு இருக்குமா?"

"என் கையில் இருப்பதைப் பற்றிக் கவலை வேண்டாம். கையில் அதுவும் இருக்கிறது, அதற்கு மேலும் இருக்கிறது."

"சரி அப்படியானால் சரி. என் விலை பதினாயிரம் பொன்தான். அதற்குமேல் ஒரு காசுகூட நான் கேட்க மாட்டேன்."

"சரி, அந்த விலையே உறுதிசெய்வோம். மணியை நான் பெற்றுக்கொள்கிறேன்."

"மகிழ்ச்சி, பேரம் முடிந்தது; இனி நாம் வீட்டுக்குள் செல்வோம். உணவு உட்கொண்டு வழக்கம் போலப் புகையருந்துவோம். நேரமாயிற்று; அத்துடன் நான் உங்களுக்கு என் புதல்வி கதரினாவை அறிமுகம் செய்துவைக்கவும் வேண்டும்."

கதரினா நடுத்தர உயரமுடையவள். அவள் அழகு பவளத்தையும், நடை ஓர் இளவரசியையும் நினைவூட்ட வல்லதாயிருந்தது. அவள் முகத்தில் கவர்ச்சியுடன் உறுதியும் கலந்து, காண்போர் உள்ளத்தை ஈர்த்தது. கள்ளங் கபடமற்ற பள்ளிப் படிப்பினால் அவள் கன்னித் தன்மை முழுதும் முதிர்ந்து, ஈடிலா வனப்பையும் இம்மியும் பிழையிலா வடிவமைதியையும் தந்திருந்தது. அவள் இப்போது பதினெட்டே வயதுடைய இள மங்கையாய் இலங்கினாள்.

ஆண்ட்ரூ மெக்ளிஸுக்கு இப்போது வயது கிட்டத் தட்ட இருபத்தாறு. அவன் சற்று உயரமானவன். அவன் நடை வீறுடையதாகவும், முகம் பொலிவுடைய தாகவும் இருந்தது. அவன் பார்வையில் கபடமோ வஞ்சகமோ இல்லை. ஆனால், விழிகள் எவர் உள்ளத்தையும் துளைத்தறியும் கூர்விழிகளாயிருந்தன. பண்பும் திறமையும், உணர்ச்சியும் அறிவும் அவனிடம் சரிநிகரா யிருந்தன.

முதற்சந்திப்பிலேயே அவர்கள் ஒருவர் உள்ளத்தை ஒருவர் முற்றிலும் மாற்றியமைத்துவிட்டனர். அவர்கள் தமக்குள் வாய்திறந்து ஒரு சொல் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் கண்கள் பேசின. அவர்கள் தனியாகச் சந்திக்கவில்லை. ஆனால், ஒருவர் உள்ளம் ஒருவர் உள்ளத்தில் நிழலாடிற்று.

பணம் எண்ணிக் கொடுத்தாயிற்று. மணியை வாங்கிப் போதிய முன்னெச்சரிக்கைகளுடன் கப்பலில் ஏற்றியாயிற்று. வாண்டர் மாக்ளினிடம் விடைபெற்றாயிற்று—மீண்டும் மீண்டும் விடைபெற்றாயிற்று. இனி தாமதிக்க வழியில்லை. போகும் போக்கில் 'போய் வருகிறேன்' என்ற சொல்லுடன் ஒரு கண்வீச்சையும் தூதனுப்பிவிட்டுப் புறப்பட்டான், மெக்ளிஸ்!

ஆனால், அவன் உடல்தான் கப்பலிலேறிற்று; உடல் தான் கடல் கடந்து ஸ்காட்லந்து சென்றது. தன் உயிரையும் உள்ளத்தையும் ஆம்ஸ்டர்டமிலேயே அவன் ஊடாட விட்டிருந்தான்.

கதரினாவும் மூன்று நான்கு நாட்களுக்கு முன்னிருந்த கதரினாவாயில்லை. திடுமென அவள் பேதைப் பருவமும் நங்கைப் பருவமும் தாண்டி முதிர்ந்த மங்கையாய்விட்டாள். ஒன்றிரண்டு நாட்களுக்குள், தன்னையே பறிகொடுத்துவிட்ட நிலையில், உள்ளம் எதிலும் பதியாமல், எதையும் உணராமல், அவள் நடைப்பிணமாயியங்கினாள்.

* * * *

மாதங்கள் சென்றன. ஆர்வத்துடன் மக்கள் உணர்ச்சியைத் தட்டிஎழுப்பிய வீர இளைஞன் மெக்ளிஸ் இப்போது ஆர்வமிழந்து கருவிகளுடன் கருவியாயிருந்து

காலன்பாறையில் மணியை நிலைநாட்டும் பணியை மேற்கொண்டு உழைத்தான்.

இறுதியில் நிலைநாட்டுவேலை கிட்டத்தட்ட முடிந்தது. இப்போது மீட்டும் ஓர் ஊர்வலம்! இத்தடவை ஊர்வலம் நீர்வலமாக நடந்தது. அது நிலத்தில் மனித வெள்ளமாகப் பாயவில்லை. நீரில் படகுக் கொடியாகப் படர்ந்தது! 'அபெர் பிராத்விக்' என்ற இடத்திலிருந்து புறப்பட்டு அது பாம்புபோல் நீண்டு வளைந்து சென்று, காலன்பாறையில் புயலற்ற வேளை பார்த்துத் தலையைச் சாய்த்தது. படகுகளில் சென்ற இன்னிசைக் கருவிகள் காற்றலையுடன் இசையலைகளை இயக்கி, நீரலைகளின்மீது தவழவிட்டன. யூட்ரெக்ட் மணியைச் சுமந்துவந்த பெரும்படகு தலையாக அமைந்திருந்தது. தலையிலுள்ள மணியைப் பூசனைக்குரிய இடத்தில் உமிழ்ந்து வைக்கும் பாம்புபோல, படகுப்பாம்பு தலைதாழ்த்தி மணியை இறக்கிற்று. அப்படகில் அமர்ந்துசென்ற மெக்ளிஸனும் இறங்கினான்.

மணியைப் பூட்டும் வினைமுறையும், இயங்கவைக்கும் வினைமுறையும் பெரிய திருவிழாவாக நடைபெற்றன.

விழாவின் நடுவில் கடலின் அடிவயிறு பொருமிற்று. காற்று வெளி மூச்சுவிடுவதற்குமுன் உள்மூச்சு வாங்கிற்று. புதிதாகப் பூட்டப்பட்ட மணி உடனே கண கணவென அடிக்கத் தொடங்கிற்று. மணி சரியாகப் பூட்டப்பட்டது என்பதற்கு அது ஒரு நற்சான்று. அதே சமயம் புயல் வருகிறது என்பதற்கும் அது ஒரு அறிகுறியாய் அமைந்தது. மணியைக் கொண்டுவந்து பூட்டியவர்களுக்கே மணியின் முதல் எச்சரிக்கை பயன்பட்டது.

அவர்கள் விரைந்து படகுகளை உகைத்துப் பாறையி லிருந்து புறப்பட்டுக் கரை சேர்ந்தனர்.

மெக்ளிஸின் உள்ளம் இதுவரையில் தன் வேலை யில் இல்லை. உடல் மட்டுமே அதில் இயங்கியிருந்தது. வேலை முடிந்ததே அவன் ஒரு சிறிதும் காலம் தாழ்த்தா மல், ஆம்ஸ்டர்டாம் சென்றான். மீட்டும் ஒருமுறை அவன் வாண்டர் மாக்ளினின் விருந்தினனானான். ஒன் றின் நினைவில் ஒன்று அழுந்திக்கிடந்த இரு உள்ளங்கள், அருகருகே வந்துவிட்ட இரு எதிர்மின்சார முனைகள் அதிர்வது போல அதிர்ந்தன.

மெக்ளிஸ் தன் வீட்டில் வருவதனால், தன் புதல்வி யிடம் எத்தகைய மாறுதலாவது உண்டாகக்கூடும் என்று வாண்டர் மாக்ளின் எதிர்பார்க்கவில்லை. இருவ ரும் மனிதர் என்பதையும், இருவரும் இளம்பருவத்தின் பிடியிலிருந்தனர் என்பதையும் அவன் பெரிதாய் எண்ண வில்லை. ஏனென்றால் அவன் மெக்ளிஸினிடம் கொண்ட பற்று, ஆண்டை அடிமையிடம்—செல்வன் ஏழையிடம் கொண்ட பற்று. அதில் பாசம் இருக்கலாம், நேசம் இருக்க முடியாது. எனவே வெவ்வேறு உலகத்தவரா கிய அந்த இளைஞனிடமும் நங்கையிடமும், சமத்துவம் உடையவர்களிடையே எழும் உணர்ச்சிகள் எழமாட்டா என்று அவன் எண்ணினான்.

தன் எண்ணம் தவறு என்பதை வாண்டர் மாக் ளின் விரைவில் உணர்ந்தான். மெக்ளிஸ் அவனிடம் தன் காதலைக் கூறித் திருமணம் செய்து தரும்படியும் கோரி னான். அவன் துணிச்சல் கண்டு வாண்டர்மாக்ளினின் உள்ளம் சீறி எழுந்தது. ஆண்டரு தன் பாசத்தைத் தவறாகப் பயன்படுத்தினான் என்று அவன் உள் நாடிகள்

படபடத்தன. ஆனால் அவன் யூதன். வாணிகப்பண்பு அவனிடம் ஊறியிருந்தது. காதலைப் போலவே சீற்றமும் வெறுப்பும் சரிநிகரானவருக்கு இடையே மட்டுந்தான் கொள்ளத்தக்கவை என்று கருதியவன் அவன். ஆகவே அடங்கிய குரலில், ஆனால், கண்டிப்பாகப் பேசினான்.

" திரு மெக்ளிஸ், நீங்கள் எட்டாத உயரக்கொப்பை எட்டி அண்ணாந்து பார்க்கிறீர்கள். ஒருவன் திருமணம் செய்துகொள்ள எண்ணுமுன் மனைவியை வைத்துக் குடும்பம் நடத்துவதற்குப் போதிய பணத்துக்கு வகை செய்திருக்கவேண்டும். உம் உயர்ந்த எண்ணத்துக்குப் போதிய பணம் உம்மிடம் இருக்கிறதா?"

மெக்ளிஸின் முகம் சிறிது குன்றிற்று.

' தற்போது முழுதும் இல்லை; ஆனால் பணம் இருக்கிறது. விரைவில் என்னால் சேர்க்கமுடியும். நான் இளைஞன். உழைத்து ஈட்டமுடியும். அது இருக்கட்டும். உம் புதல்வியை நான் மனைவியாக அடைவதற்குமுன் என்னிடம் எவ்வளவு பணம் இருக்கவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதை நான் அறியலாமா?"

" ஒரு பன்னிரண்டாயிரம் பொன்னை நான் காணட்டும். கண்டபின் நீர் அவளை அடையலாம்!"

" என்னிடம் தற்போது மூவாயிரம் இருக்கிறது."

" அப்படியானால் கதரினாவின் பெயரைக்கூறவும் நீர் நாவெடுக்கவேண்டாம். ஆய்ந்தோய்ந்து பாராத இக் காதலை நீர் விரைவில் மறந்துவிடவேண்டும். அவளும் மறந்துவிடவேண்டியவளே. மறப்பதற்கு எளிதானவழி சந்திக்காமல் இருப்பதுதான். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். மற்றப்படி நான் உம்மிடம்

நல்லெண்ண முடையவனாகவே இருப்பேன். போய் வருக."

நயமான சொற்கள். ஆனால் கண்டிப்பு; அத்துடன் கதவடைப்பு! மெக்ளிஸ் உள்ளத்தில் பொங்கிவந்த நம்பிக்கை அத்தனையும் அடங்கிற்று. அவன் தலை சுழன்றது.


தன் காதல், தன் முயற்சி, அதற்குக்கிடைத்த மறுமொழி ஆகியவற்றைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றைக் கதரினாவுக்கு அனுப்ப அவன் ஏற்பாடுசெய்தான்.

மெக்ளிஸின் நடவடிக்கை வாண்டர் மாக்ளினுக்குத் தெரியவந்தது. அவனும் எதிர் நடவடிக்கை எடுத்தான். மெக்ளிஸ் கப்பலேறும்வரையும் மகளை ஒரு நண்பர் வீட்டில் இருக்கும்படி அவன் அனுப்பிவைத்தான். அதோடு டண்டி நகரிலுள்ள தன் வாடிக்கைக்காரருக்கும் வாணிக நண்பர்களுக்கும் எழுதி, தம் சரக்குகளை அனுப்பும்போது, மெக்ளிஸ் தலைவனாயிருக்கும் எந்தக் கப்பலிலும் அனுப்பவேண்டாம் என்று ஏற்பாடுசெய்தான்.

நம்பிக்கையின் உட்கதவம்கூட அடைபட்டு விட்டது என்று மெக்ளிஸ் கண்டான். இனி ஆம்ஸ்டர்டாமில் இருந்து பயனில்லை என்று உணர்ந்தும் அவன் அங்கேயே சுற்றித் திரிந்தான். கடலோடிகளிடையே காலத் திட்பத்துக்கும் சுறுசுறப்புக்கும் பேர் வாங்கியிருந்த அவன் இப்போது தன் ஆடைகள் அழுக்கடைவதைக்கூட அறியாமல் சுற்றித்திரிந்தான்.

கதரினா அனுப்பப்பட்டிருந்த வீட்டை அறிந்த பின்னும், அதைச் சுற்றிச்சுற்றித் திரியமுடிந்ததே தவிர வேறு

பயன் காணமுடியவில்லை. அவள் முகத்தைக் காணவோ அவளைப்பற்றிய செய்தி அறியவோ ஒரு சிறிதும் கூட வில்லை. அவன் கப்பல் மூட்டைகளை ஏற்றியாய்விட்டது. மறுநாள் கப்பலில் ஏறியாகவேண்டும். நம்பிக்கையிழந்த வனாய்த் தன் உயிரைத் தன்னகங்கொண்ட மதில்களை இறுதியாக ஒருமுறை ஏறிட்டுப்பார்த்தான். அவன்முன் ஒரு கல்பொதிந்த தாள் தொப்பென்று விழுந்தது.



மெக்ளிஸ் கதரினாவின் கடிதத்தை எடுத்தல்

கல்லுடன் தாள் பட்டுக்கயிற்றினால் கட்டப்பட்டிருந் தது. அதை ஆவலோடு எடுத்து வாசித்தான். அது கதரினாவின் கைவேலை. அது அவள் கையெழுத்து என்பதை ஐயமின்றி அறிந்து அவன் நெஞ்சு புது நம்பிக்கையுடன் படபடத்தது. ஆனால் அதில் இரண்டே சொற்கள்கொண்ட தொடர்தான் எழுதப்பட்டிருந்தது. 'யூட்ரெக்ட்மணி' என்பதுதான் அது.

மெக்ளிஸ் ஒரு கணநேரந்தான் விழித்து நின்றான். மறுகணம் மின்னல்போலக் கதரினாவின் கருத்து அவன் உள்ளத்தில் மின்னிட்டது. ஆம். அந்த மணிக்கு அவனே பதினாயிரம் பொன் கொடுத்ததுண்டு. வாணிகன் கிராஃவ்ட் அதற்குமுன்பே பதினாயிரம் பொன் விலை கூறிக் கேட்டதுண்டு. ‘இப்போதும் யாராவது மணியைக் கொண்டுகொடுத்தால் மூச்சுப்பேச்சின்றிப் பத்தாயிரம் பொன்னைக் கொடுப்பான். யார் கொடுத்தது, எப்படி வந்தது என்று கூறமாட்டான்.’ இந்த எண்ணம் தனக்கு ஏன்வரவில்லை என்று வியப்புற்றான்.

ஆனால்—ஆனால்—அவன் மனம் இன்னொரு வகையில் திடுக்கிட்டது. கொலைக்குற்றம் ஒரு பெரிய குற்றம் அல்ல. அதில் ஓர் ஆளின் உயிர்தான் போகும். போர் ஒரு குற்றம் அல்ல. அதில் சிலகாலம் சிலர் உயிர்தான் போகும். ஆனால், மணி பொதுமக்கள் எத்தனையோ பேர் ஆர்வத்துடன் கொடுத்த சிறு பொருள் தொகுப்பின் சின்னம். எத்தனை காலமோ எத்தனைபேர் உயிரையோ அது காக்க இருக்கிறது. மணியைக் கைப்பற்றி விற்றால், பொதுமக்கள் அத்தனைபேர் பொருளையும் திருடிய குற்றம், எல்லையில்லாக் காலம் எண்ணற்ற மக்களைக் கொலை செய்த பழி, எண்ணற்ற பெண்டு பிள்ளைகளைத் துணையற்றவராகச் செய்த படுதீம்பு—இத்தனைக்கும் அவன் ஆளாக வேண்டும். சேச் சே! அதிலும், பொது மக்கள் தொண்டில் ஈடுபட்டிருந்த அவனா, வாணிகத்தில் கூட நேர்மை தவறாத அவனா, எத்தனையோபேரின் மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெற்ற அவனா அதைச் செய்வது?

அவன் மனம் அலைகடலில் பட்ட துரும்பாக அழலில் பட்ட மெழுகாக, அடங்கொண்ட புயலில் சிக்கிய கலமாக அல்லோல கல்லோலப் பட்டது.

பழி செய்தால் காதலுக்கு ஒரு வழி உண்டு, பழி செய்யாவிட்டால் காதலுக்கு விடைதர வேண்டும். இரு புறமும் செல்ல முடியாத இடர்ப்பொறியில் அவன் அகப் பட்டுத் தத்தளித்தான்!

குற்றத்தின் கொடுமை ஒரு சமயம் அவன்முன் கோர உருவில் நின்று அச்சுறுத்தித் தடுக்கும்! மற்ெருரு சமயம் தந்தையின் கண்டிப்பு என்னும் சிறைக்கூடத் தில், பணப் பேரவாவாகிய கழுமரத்தில் கட்டுண்டு, வாய்விடா உயிரினம் போல் கதரிஞ கண் கலங்கும் காட்சி எழும்! அவன் இளங் குருதியோட்டமாகிய போர்க்களத் தில் பிந்திய காட்சியே இறுதி வெற்றி கண்டது.

அவன் தான் ஏற்றி வைத்த விளக்கை அவிக்கக் கை நீட்டினுன்.

ஆண்ட்ரூ மெக்ளிஸ் ஆம்ஸ்டர்டம் விட்டுச் சென்றதே கதரிஞவுக்குப் புறவிடுதலை கிடைத்தது. ஆனுல், ஒரு திருமணமூலம் அவள் அகத்தையும் மெக்கி ளிஸின் நினைவிலிருந்து விடுவிக்க வாண்டர் மாக்ளின் முயன்ருன். ஏற்கெனவே அவள் மென் கைக்காக முன் கை நீட்டிக் கோரிக்கையிட்டவர் பலர் இருந்தனர். அவள் தந்தையின் குறிப்பறிந்து கைகள் இன்னும் பல முன்வந்தன.

மெக்ளிஸைவிடப் பணத்திலும் பதவியிலும் உயர்ந்த இடத்தைத்தான் வாண்டர்மாக்ளின் விரும் பினுன். ஆனுல், அவை கிடைக்குமிடத்தில் மெக்ளிஸின் குண நலனையும் அவன் எதிர்ப்பார்த்தான். இது பொன்

ஞல் செய்த பூவில் மணத்தையும் எதிர்பார்ப்பது போலத் தான் இருந்தது. ஆகவே, அவன் எளிதாக எத்தகைய முடிவுக்கும் வராமல் தயங்கினான். இதற்குள் கதரினா அவனிடம் வந்தாள். "அப்பா, நீங்கள்தான் எனக்குத் தாயும் தந்தையும்! உங்கள் மனம் போலத்தான் நான் எல்லாச் செய்திகளிலும் நடக்கப்போகிறேன். ஆனால், என் மனம் உங்களுக்குத் தெரியும். பணம் தவிர மற்ற வகைகளில் மெக்ளிஸிடம் உங்களுக்குப் பற்றும் மதிப் பும் உண்டு என்பதையும் நான் அறிவேன். இந்நிலையில் நீங்கள் அவருக்குக் கொடுத்த வாக்கை மறந்துவிடா திருக்கக் கோருகிறேன். 'பன்னிரண்டாயிரம் பொன் னைக் காட்டு. கதரினாவை நீ அடைவாய்' என்பதே உங்கள் கடைசி வாக்கு," என்றாள்.

வாண்டர் மாக்ளின் முகம் சற்றுக் கடுமையாயிற்று. ஆனால், மகள் சொல்லுக்கு அவன் சிறிது மதிப்புக் கொடுத்தான். அவன் செல்வத்தின் பாதுகாப்புக்கான ஒரு மகனோ, இன்னொரு மகளோ இருந்திருந்தால், அந்த மதிப்புக்கூடக் கொடுத்திருக்க மாட்டான். 'நீ கேட்ப தனால், அவனுக்கு இரண்டு ஆண்டு தவணை கொடுக் கிறேன். அதற்குள் குறிப்பிட்ட தொகையுடன் வரா விட்டால், நீ அதற்குமேல் என் விருப்பப்படிதான் நடக்க வேண்டி வரும்,' என்றான்.

கதரினா தலை குனிந்தாள். தந்தை சென்றதும், அவள் கண்கள் மேலெழுந்தன. இறைவனை நோக்கி 'யூட்ரெக்ட்மணி, யூட்ரெக்ட்மணி' என்று முணு முணுத்துக் கொண்டாள்.

* * * *

காலன்பாறை இப்போது காலன்பாறையாயில்லை. எல்லாராலும் அது மணிப்பாறை என்றே வழங்கப்பட்டு

வந்தது. மணி பாரியதாக இருந்தாலும் அது புயலின் கருவிலுள்ள சின்னஞ்சிறு காற்றதிர்ச்சியிலும் கணகணவென்றொலித்துக் கப்பலோட்டிகளுக்கு எச்சரிக்கை தந்துதவிற்று. அம்மணியோசைகேட்ட அனைவரும் அம் மணியை அங்கு கட்டக் காரணராயிருந்த பொதுமக்களையும், அதற்குத் தலைத்தூண்டுதல் தந்து மணியைக் கொண்டுவந்து கட்டிய ஆண்ட்ரு மெக்ளிஸையும் வாழ்த்தாமலிருப்பதில்லை. அங்ஙனம் வாழ்த்துபவர் எவரும் அந்த மணியைக் கட்டிய கையே அதை அறுத்தெடுத்துக் கவரும் என்று கனவு கண்டிருக்க மாட்டார்.

மெக்ளிஸ் ஸ்காத்லந்து வந்து சேர்ந்தவுடனே தன் கப்பலோட்டும் தொழிலைத் தற்காலிகமாகக் கைதுறந்தான். சிலநாள் அருமுயற்சி செய்து கடற்கொள்ளைக்காரர்கள், கள்ளவாணிகக்காரர்கள் ஆகிய சிலரைத் திரட்டினான். மணிப்பாறையிலுள்ள மணியைத் திருடி, அதை ஆம்ஸ்டர்டம் கொண்டுபோக உதவினால், அவர்களிடையே ஆயிரம் பொன் பகிர்ந்து தருவதாகக் கூறினான். அத்தகைய தொழிலில் கைதேர்ந்தவர்களாதலால், அவர்கள் ஒத்துக்கொண்டனர். மணியைப் பூட்டியவன் மெக்ளிஸே யாதலால், பூட்டவிழ்த்தெடுப்பது அவனுக்கு எளிதாயிருந்தது. மணி மீட்டும் ஆம்ஸ்டர்டம் வந்து சேர்ந்தது.

ஆம்ஸ்டர்டமில் கிராஃவ்ட்டின் வணிகமனையை உசாவியறிந்து மெக்ளிஸ் அவனிடம் சென்றான். ஒளிவு மறைவாகத் தான் விலைக்குக் கொண்டுவந்திருக்கும் பொருளையும், அதற்குரிய விலையையும் அவன் கூறியதே, கிராஃவ்ட் எல்லையிலா மகிழ்ச்சியடைந்தான். ஏனென்றால் அவ்விலைக்குப் பல ஆயிரம் பொன்னுக்குமேல் அது

மதிப்புடையதாயிருந்தது. மணியை அவன் கைப்பற்றிக் கொண்டு கேட்டபடி பத்தாயிரம் பொன்னை எண்ணித் தந்தான்.

மெக்ளிஸ் காலந் தாழ்த்தாமல் பொன்னுடன் வாண்டர்மாக்ளினிடம் செல்லவிருந்தான். அவன் உள்ளம் அவனுக்கு முன்பே அத்திசையில் விரைந் தோடிற்று. ஆனால், அதற்கிடையே அவன் சிறிதும் எதிர்பாராத இக்கட்டு ஒன்று ஏற்பட்டது. அவனுக்கு உதவி செய்த கப்பலோட்டிகள் அனைவரும் உடனடி யாகத் தமக்கு வாக்களிக்கப்பட்ட ஆயிரம் பொன்னையும் கேட்டார்கள். கதரினாவை மணந்து கொண்டதும் தரு வதாக அவன் எவ்வளவு வாதாடியும் அவர்கள் கேட்க வில்லை. தராவிட்டால் அவன் செயலை வெளிப்படுத்தி விடுவதாகவும் அவனைத் தாக்குவதாகவும் அச்சுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இப்போது அவனுக்கு ஒரு வழிதான் தோற்றிற்று. செய்த ஒரு பழியை மறைக்க இன்னும் பல பழிகளை மேற்கொள்வது என்று அவன் துணிந்தான். அப் போதே பணம் தருவதாக வாக்களித்து அவர்களனை வரையும் ஒரு தனியிடத்துக்குக் குடிக்க இட்டுச்சென் ருன். குடியில் நஞ்சு கலந்திருந்தது. அனைவரும் குடி மயக்கத்துடன் நஞ்சையருந்திச் சாய்ந்தனர். மெக் ளிஸ் அவர்கள் உடல்களுடன் கல்லைச் சேர்த்துக்கட்டி, அருகிலிருந்த கடற்கால்வாயில் தாழ்த்திஞன். அதன்பின் கப்பலின் அறைகள் பலவற்றை உடைத்துவிட்டு, கப்ப லோட்டிகள் தன் கப்பலைக் கொள்ளையிட்டுவிட்டு ஓடிய தாகக் காவலரிடம் முறையிட்டான். காவலர்கள் தேடிப் பார்த்து, கப்பலோட்டிகள் தப்பி விட்டதாக கருதி வாளா இருந்தார்கள்.

இங்ஙனம் பழிமேல் பழி சூழ்ந்து தேடிப்பெற்ற பொன்னுடன் மெக்ளிஸ்வாண்டர் மாக்ளினிடம் சென்று பன்னீராயிரம் பொன்னையும் காட்டி வாக்களித்த படி கதரினுவை மணஞ் செய்து தரும்படி கோரினுன். மகள் வாடிய முகத்தில் மலர்ச்சியூட்டக் கருதி வாண்டர் மாக்ளின் இணங்கினுன். தான் ஏறிவந்த கப்பல் கொள்ளை யிடப்பட்டது என்ற கதையை அவனிடமும் மெக்ளிசு கூறியிருந்தான். இங்கிலாந்தில் கப்பலுக்கு உரியவனிடம் விரைவில் செய்தி தெரிவிக்கவேண்டும் என்று கூறி வற் புறுத்தித் திருமணத்தை உடனடியாக முடித்துக் கொண்டு அவன் ஆம்ஸ்டர்டமிலிருந்து புறப்பட்டான். மகளும் மருமகனும் வாண்டர்மாக்ளினிடம் விடை பெற்றுக்கொண்டனர்.

பிரியும்போது வாண்டர்மாக்ளின் மனம் மட்டும் ஆருத்துயரில் ஆழ்ந்திருந்தது. இனி மகளை நான் என்று காணப்போகிறேனே என்று எக்காரணத்தாலோ அவன் கலங்கினுன். மெக்ளிஸின் உள்ளத்திலும் ஒரு பெரும் பளு ஏறி அமர்ந்ததுபோலிருந்தது. கதரினுவை அடை யும்வரை அவளுக்காக அவன் எத்தனை பழிபாவங்களைச் செய்யவுங் கூசவில்லை. ஆனுல், விரும்பியது கிட்டியபின் அதற்காக அவன் செய்த தீம்புகளை எண்ணி அவன் மிக இரங்கினுன். கதரினு உள்ளம் ஒன்றுமட்டும் மாசு மறுவில்லா முழுநிறை மதியம்போல இன்பஒளி ததும்பி நின்றது. காதலன் தான் எதிர்பார்த்ததைவிடக் கடும் பழிகளால் சூழ்ந்திருந்தான். ஆனுல் அத்தனை பழிகளுமே அவனை அவளுக்கு முழுதும் உரியவனுக்கி யிருந்தன. அத்தனை பழிகளுமே அவள் காதலுக்கு அவன் அளித்த காணிக்கைகளாதலால், அவற்றினளவால் அவள் கண்ணில் அவன் இன்னும் உயர்காதலுக்கு உரியவ

ளுறன். அவன் பழிகளை எண்ணி மாழ்கியதுபோல், அவள் மாழ்கவில்லை. அவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்தாள்.

* * * *

இரண்டு புயல்கள் இடிமின்னல்களுடன் ஆர்த்தெழுந்து அடித்தன—ஒன்று கடலில், ஒன்று மெக்ளிஸின் உள்ளத்தில்! அவற்றினிடையே ஒரே ஓரிடத்தில் மட்டும் முழுநிறை நிலவும் தென்றலும் யாழிசையும் நிலவின—அது கதரிஞவின் உள்ளத்தில். புறப்புயல் ஒன்றிலேயே கருத்தழிந்து பொறிகலங்கி நின்றனர், கப்பலோட்டிகளும் கடல்வழிச் செல்பவர்களும்—ஆனால் மெக்ளிஸ், கதரிஞ இருவர் மட்டும் தத்தம் அகப்புயலிலும், அகத்தென்றலிலுமே முழுதும் ஈடுபட்டு, மற்றெல்லாவற்றையும் மறந்திருந்தனர்.

திருமணத்துக்குப்பின் மெக்ளிஸின் உள்ளத்தில் எழுந்த மாறுபட்ட போக்கின் தன்மையைக் கதரிஞ உணரவில்லை. செய்த பழிகளுக்காகக் கணவன் வருந்துகிறன் என்பதைமட்டும் அவள் உணர்ந்தாள். அப்பழிகளுக்குத் தானும் தன் காதலுமே காரணமானதால், ஆறுதல் கூறுவதும் தனது கடமை என்று அவள் கருதினள். இவ் எண்ணத்துடன் அவள் தன் அறையிலிருந்து மேல்தளத்துக்கு வந்தாள். கடலில் மூன்று நாளாக விடாதடித்த புயல் அப்போது உச்சநிலை அடைந்திருந்தது. மெக்ளிஸ் உள்ளத்திலும் வெறுப்புத் தலையோங்கி இருந்தது. அவன் முகத்தைப் பார்த்து அவள் திடுக்கிட்டாள்.

"ஆண்ட்ரூ, என்னல் நீங்கள் இல்லாமல் நீண்ட நேரம் கீழே இருக்க முடியவில்லை. புயலால் ஒன்றும் இடையூறு வராதே!"

அவனுக்கு எரிச்சலாயிருந்தது. ஆனால், அவன் ஒன்றும் வாய்திறக்கவில்லை.

"ஒன்றிரண்டு நாளில் போய்விடலாம் என்று சொன்னீர்கள், மூன்று நாளாய்விட்டதே! புயலும் நின்றபாடில்லையே!"

"நான் சொன்னேன். ஆனால், இப்போது இயற்கையின் சீற்றத்தின்முன் சாவு எல்லாரையும் எதிர் நோக்கியிருக்கிறது!"

"சாவா?........உங்களுடன் சாவதாயிருந்தால், சாவு கண்டு நான் அஞ்சவில்லை."

அவன் இதுவரை அடக்கிவைத்திருந்த கடுஞ்சினம் திடீரெனப் பீறிட்டெழுந்தது. 'பழிசெய்தவள் அவள், இத்தனைபேர் சாகிறார்களே என்று வருந்தவில்லை, பழிகாரி! நீலி!' என்று கொதித்தது அவன் உள்ளம்.

"போ, என்முன் நில்லாதே. நின்றால் நான் உன்னைப் பழிக்கவேண்டிவரும்."

"நீங்கள் என்னைப் பழித்தாலென்ன, உங்களையே பழித்தாலென்ன? என் பழி உங்கள் பழிதானே!"

வேறுபாடறியாத அக்காதல் உறுதிச்சொல் அச்சமயம் அவன் காதில் நாராசமாயிருந்தது. 'கொலைகாரி, இத்தனைபேரைக் கொன்ற உன்னுடன், சாகும் இந்த நேரத்தில் என்ன பேச்சு? கீழேபோய்த் தொலை!' என்று இரைந்தான்.

தனக்காகப் பல பழிகளையும் சுமந்த காதலன் இப்படித் தன்னை வெறுக்க என்ன காரணம் என்று அறியாமல், அவள் தரைமீது விழுந்து புலம்பி அழுதாள்.

அவன் மனம் இரங்கவில்லை. மேலும் கல்லாய்ச் சமைந்தது. அவன் புறப்புயலிலேயே கண்ணாயிருந்து விட்டான். அவளைக் கவனிக்கவில்லை.

அவள் மனம் முற்றிலும் இடிந்தது. காதலே கரையாகக்கொண்ட அவள் வாழ்க்கையின் ஆர்வம் அந்தக் கரை உடைந்து பொடியானபின் மண்ணில் வழிந்தோடி மண்ணுடன் கலந்தது.

மெக்ளிஸ் சுக்கானைப் பிடித்துக்கொண்டு நெடு நேரம் நின்றான். புயல் சிறிது சிறிதாக அமைந்தது. அவன் உள்ளமும் ஓரளவு தன்னிலைக்கு வந்தது. தனக்காகத் தந்தையின் செல்வந் துறந்து தனியே வந்த காதல் துணைவியிடம், தான் அளவுமீறிக் கடுமையாக நடந்து விட்டது அப்போதுதான் அவனுக்குப்பட்டது. அவளால் நேர்ந்த பழியாயிருக்கலாம். ஆனால், அதன் விலையாகக் கிட்டிய காதலையும் பழிப்பதால் செய்த பழிகள், குறையுமா? அவன் சிறிது மனமாற்றத்துடன் கீழே சென்றான்.

அவள் ஒடிந்து கிடந்தாள். அவன் அவளை ஊக்கித் தன் பிழைக்குக் கழுவாய் செய்ய முயன்றான்.

'நாம் தப்பினோம், கதரினா! எழுந்திரு!' என்றான்.

அவள் அசையவில்லை.

'இடையூறு நீங்கிவிட்டதே கதரினா. அதற்காக மகிழாமல் வருந்துவதா? எழுந்திரு.'

'அது நீங்காமல் நாம் அழிந்திருந்தால்கூட நன்றாயிருக்கும். அது நீங்கியதற்காக நான் மகிழவில்லை.'

'அப்படிச் சொல்லாதே, கண்ணே! உன் ஆண்ட்ரு உன்னைத் தேற்ற வந்திருக்கும்போது, நீ மனம் உடையலாமா?'

'நான் ஒருநாளும் மறக்கமாட்டேன், உங்கள் பழியை. நான் சாவுக்கு வருந்தவில்லை. உங்கள் காதலை இழந்ததற்கு வருந்துகிறேன்.'

'காதலை இழக்கவா? ஒருநாளுமில்லை........'

'வேண்டாம், அன்பரே! பழிகள் பெரிதல்ல, காதல் பெரிதாயிருந்தது. அக்காதலுடன் நான் இறந்திருந்தால் நல்லதாயிருந்திருக்கும். காதலைவிடப் பழி பெரிதான பின், வாழ்வையும் நான் விரும்பவில்லை; காதலையும் நான் துய்க்கப் போவதில்லை.'

அவள் சோர்ந்து வதங்கினாள், நுடங்கி விழுந்தாள். அவன் அவளைத் தாங்கி எடுக்கக் குனிந்தான்.

'மணிப்பாறையைக் கவனிக்கும்படி உத்தரவிடுங்கள், ஐயா? இப்போது வேறு எதற்கும் நேரமில்லை!' என்று யாரோ கூவினார்கள்.

'மணிப்பாறையா?'

காதலி இங்கே இப்படி! பழி அங்கே மீண்டும் கோர உருவெடுத்து விழுங்க வருகிறது.

'மணிப்பாறையா?' அவன் கலங்கினான்.


திடுமெனக் கப்பல் துள்ளிற்று. அவனும் கதரினாவுடன் தளத்தில் விழுந்தான்.

கப்பலின் இருபுறமும் நொறுங்கிற்று.

அடித்தளம் பிளந்தது.

நாற்புறமும் நீரின் இரைச்சல், மக்களின் இரைச்சல்.

அடுத்தகணம் இருவரும்—காதலுக்காகப் பழி செய்த காதலனும், காதலுக்கிருந்த ஒரே வழியை ஏற்று அதுவே உயிராகக்கொண்டிருந்த காதலியும்—இருவரும் மிதந்தனர்.



மெக்ளிஸ் சென்ற கப்பல் மணிப்பாறையில் மோதி உடைதல்


* * * *

மணிப்பாறையில் மணி இல்லாதசெய்தி படிப்படியாகத்தான் கரையோர மக்களறிய எங்கும் பரவிற்று. மீண்டும் அது காலன்பாறையாய்விட்ட செய்தி யறியு முன்பே, பாறைக்கு எத்தனையோ கப்பல்களும் கப்பலோட்டிகளும் இரையாயினர்.

ஆனால் புயல் எழும்போது, கடற்காகங்கள் கரை நோக்கி அணிஅணியாய்ப் பறக்கும்போது, கார்முகில்களி

லிருந்து மணிப்பாறைக்கு இன்றும் மெக்ளிஸின் உருவில் ஒரு கருமுகில் இறங்கி வருகிறதென்றும், யூட்ரெக்ட் மணி போன்ற ஒரு திண்ணிய முகில்கீற்று அவ்வுருவைக் கீழே இழுத்துவந்து மணிப்பாறை அருகே கடலுள் ஆழ்த்துகிறதென்றும் கரையோர மக்களிடையே அடிக்கடி பேசப்படுகிறது!

அதுபோலவே நல்ல அமைதி நிலவும்போது, முழு நிலா எறிக்கும்போது, அலையற்ற கடலில் தென்றல் மெல்லச் சிற்றலை எழுப்பும்போது, கதரிஞவின் உருவம் பாறைமீதமர்ந்து, தன் தந்தைக்குக் கடிதம் எழுதுவது போலத் தோன்றுகிறதென்றும் கரையோர நங்கையர்கள் கதை கூறுகின்றனர்.



௯. தீர்வைநாயகன்

நான் அப்போது அச்சம் என்பது இன்னது என்றறி யாத இளங்காளை. எனக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு தான் திருமணமாகி இருந்தது.

தீர்வை நிலையத்தில் நான் பணியேற்றுச் சில காலமாய்விட்டது. தாழ்ந்த பணியில் புகுந்து என் ஆர்வத் தாலும் சுறுசுறுப்பாலும் நேர்மையாலும் நான் சடசட வென்று உயர்ந்த படிமைகளுக்கு ஏறினேன். என் வயதுக்கு இந்தப் படிமையும் ஊதியமும் பெரிதாகவே எல்லாருக்கும் தென்பட்டது. என்னிலும் எத்தனையோ மடங்கு உயர்குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணை மணந்ததனால், என் மதிப்பு இன்னும் உயர்ந்தது. என் ஆர்வமும் பன்மடங்காயிற்று.

பல செல்வ இளைஞர்களைவிட்டு என்னைக் காதலித்த அந்தப் பெண்ணினல்லாள் தேர்வுக்கு நான் தகுந்தவனே என்றுகாட்ட, நான் இன்னும் உயர்படிமையும் புகழும் நாடினேன்.

நான் வேலைபார்த்த பணிமனை இங்கிலாந்தின் தென் கரையோரத்தில் டோவர் அருகே இருந்தது. அந்தப் பகுதியிலுள்ள வணிகரில் பெரும்பாலோர் அந்நாளில் கள்ள இறக்குமதி வாணிகத்தில் ஒரு கை உடையவர்களாகவே இருந்தனர். உள் நாட்டிலும் பல கல் தொலைவு வரை உள்ள மக்கள் அந்த வாணிகத்தால் தம் சிறு ஆதாயத்துக்கு ஒரு அணை தேடுபவர்களாகவே இருந்தனர். கள்ளச்சரக்குகள் அந்நாளைய வீடுகள் பலவற்றில் மறைவிடங்களில் சேமித்துவைக்கப்பட்டிருந்தன. வீடுகள் கட்டும்போதே அந்தவகைக்கென்று நிலவறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

கள்ள வாணிகத்தை அடக்கும்வகையில் அர சியலார் எடுத்த நடவடிக்கைகளெல்லாம் பெரும்பாலும் எப்படியோ வெற்றுவேட்டு நடவடிக்கைகளாய் அமைந்தன. ஏனெனில், தீர்வைத்துறைப் பணி யாளர்களுக்குள்ளேயே பலர் அவ்வாணிகத்தின் ஆதா யத்தில் பங்குகொண்டிருந்தனர். எனவே, அவர்கள் நடவடிக்கைகள் யாவும் இருதலை மணியங்களாயிருந்தது இயல்பே. அத்துடன் ஆதாயத்தில் பங்கு கொள்ளாத வர்கள்கூட அத்துறையில் அவ்வளவு முனைந்து உழைக்க விரும்பவில்லை. ஏனெனில் அத்தகைய உழைப்பின்மூலம் அவர்கள் பலரது வெறுப்பையும் பகைமையையும் பெறவேண்டியிருந்தது. ஒரு சிலர் என்னைப்போல ஆர்வம் காட்டினாலும், பொதுவாக இந்த நிலைமை வளர்ந்துகொண்டுதான் இருந்தது.

அவ்வப்போது தீர்வைத்துறையாளர் நடவடிக்கை கள்பற்றிப் பரபரப்பான செய்திகள் வரும். எங்காவது ஒரு கள்ள வாணிகக் கப்பல் பிடிபடும்; அல்லது கள்ள வாணிகச் சரக்குக் கண்டு கைப்பற்றப்படும். ஆனால், இவற்றால் கள்ள வாணிகத்துக்கு மிகுதிதடை ஏற்படுவ தில்லை. அதன் ஆதாயத்தில் இத்தகைய நடவடிக்கைக ளால் வரும் குறைபாடு நூற்றுக்கு ஒன்று விழுக்காடுகூட இருக்காது. அந்நடவடிக்கைகள் தீர்வை நிலையத்துக்கு ஒரு தன் மதிப்பை உண்டுபண்ணவும் பங்கு கொள்பவர் அதைச் சற்று உரிமையுடன் கேட்டுப் பெறவும் மட்டுமே உதவின.

தீர்வை நிலையத்தின் இந்த மரபுகளுக்கு நான் ஒரு விதிவிலக்கு என்பது வரவரத்தான் கள்ள வாணிக மக்க ளுக்குத் தெரிந்தது. ஆனால், அவர்கள் அதை அறியுமுன்

நிலைய மேலிடம் உணர்ந்து எனக்குப் படிமை யேற்றமும் புகழும் பாராட்டும் தந்தது. இன்னும் இவை வளரும் என்ற நம்பிக்கையும் தரப்பட்டது. எனக்குக் கிடைத்த ஒரு பெருவெற்றி இவ்வகையில் என் புகழையும் கள்ள வாணிகக்காரருக்கு என்மீதிருந்த அச்சத்தையும் பெருக்கிற்று.

ஒருநாள் ஒரு கேணியிலிருந்து ஒரு மனிதன் வெளி வருவதைக் கண்டேன். உடனே கேணியுள் இறங்கி னேன். நீர்மட்டத்தருகே குகைவழி ஒன்று இருந்தது கண்டேன்; அது கள்ள வாணிகக்காரரின் திருட்டுச் சந்திப்பிடம். அவர்கள் சரக்குச் சேமிப்பிடமும் அது தான். அதில் பலர் கையும் களவுமாக அகப்பட்டு விழித் தனர்; பலர் என்னிடம் மன்றாடியும் நான் அத்தனை பேரையும் தூக்குக்கு அனுப்பினேன். என் புகழ் பின் னும் வளர்ந்தது. என் தெம்பும் மிகுந்தது. ஆயினும் என்னையறியாமல் இச் செய்கையால் நான் கள்ள வாணிகக்காரரின் மாளாப் பகைமைக்கு ஆளானேன்.

இப்போது கள்ள வாணிகக்காரர் விழித்தனர். என்னை அச்சுறுத்தி மொட்டைக் கடிதங்கள் வரத் தொடங்கின. எச்சரித்த நண்பர்களும் பலர்; ஆனால், என் காதலியின் கண்ணில் என் தகுதியை உயர்த்த நான் விரும்பியதனால், இவற்றைச் சிறிதும் சட்டைசெய்ய வில்லை. ஆயினும் என் கண்டிப்பும், இரவுபகல் அயரா உழைப்பும் அவளுக்குக்கூடக் கவலை தந்தன. அடிக்கடி என்னுடன் அவள் எவ்வளவோ நயமாக இவ்வகையில் வாதாடினாள்.

" கடமை, பணி, படிமை உயர்வு என்றெல்லாம் ஓயாது கூறுகிறீர்கள். இவற்றுக்கெல்லாமா நான்

உங்களை மணந்துகொண்டேன். நமக்கு இப்போது இருப்பதைவிட இன்னும் குறைந்த செல்வம் இருந்தால்கூட, நான் வருந்தமாட்டேன். நான் விரும்புவது உங்களைத்தான்; உங்களுடன் அமைதியாக வாழ்வதற்காக நான் வறுமை, கடு உழைப்பு. எளிய வாழ்வு ஆகிய எதையும் பொருட்படுத்த மாட்டேன். ஆகவே என்மீது இரக்கப்பட்டாவது, இந்த வேலையை உதறித்தள்ளி விடுங்கள். அல்லது மற்றப்பேரைப் போலச் சம்பளத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதுடன் அமையுங்கள்,'' என்று அவள் ஓயாமல் என்னுடன் வாதாடினுள்; கெஞ்சினுள். என்னை வேலையார்வத்திலிருந்து தன் காதலில் ஈடுபடுத்திச் சிக்கவைக்க அவள் ஆயிரம் இனிய சூழ்ச்சி முறைகளைக் கையாண்டாள்.

அவள் அச்சத்தின் காரணத்தை நான் அன்று உணரவில்லை. அவள் நல்லெண்ணத்தை, தூய உள்ளத்தை, தன்மறுப்பு மனப்பான்மையைத்தான் நான் அறிந்தேன். அறிந்த அளவில் அது என்னை என் வழியிலேயே மேலும் ஊக்கிற்று. ஏனென்ருல் என் இன்ப வாழ்வுக்காக அவள் எடுத்துக்கொண்ட கவலை அவள் கடமையுணர்ச்சியை எப்படிக் காட்டிற்ருே, அதேபோல அவள் இன்பத்துக்கான கவலையை மேற்கொண்டு உழைப்பதுதான் என் கடமை என்று நினைத்தேன். ஆகவே அவள் சொல்லுக்கு நான் மறுப்பு எதுவும் சொல்லவில்லை. நயமாகத் தட்டிக்கழித்து என்போக்கில் மேன்மேலும் முனைந்து வந்தேன்.

கள்ள வாணிகக்காரர் விரும்பும் நாட்கள் மழை நாட்களேயாகும். அப்போது எங்கும் சேருயிருப்பதனுல், பொதுவாகப் போக்குவரவுக்கு இடைஞ்சலா

ளுலும், அதுவே அவர்களுக்குப் பாதுகாப்பாகவும் இருந்தது. அந்த ஆண்டு டிசம்பர் மாதம் பதினைந்தாம் நாள்—அந்த நாளை நான் என் வாழ்நாள் முழுவதும் என்றுமே மறக்கமுடியாது - அந்தநாள் அத்தகைய நாளா யிருந்தது—அன்று என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தி ருப்பதாக என் பணியாள் கூறி ஒரு உறையைக் கொண்டு வந்து கொடுத்தான்.

வழக்கமாக என்னை அச்சுறுத்தும் கடிதங்களில் ஒன்ருகவே அது இருக்கக்கூடும் என்று நினைத்தேன். ஆனல், வெளி உறையைப் பிரித்தவுடனே இது அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்று என்று கண்டேன். அது என் மேற்பணியாளர் ஒருவரின் கையொப்பத்துடன், அவர் பெயரால் எழுதப்பட்டிருந்தது. அஞ்சல் பொறிப்போ அதே தேதியில் ஃவோக்ஸ்டன் என்ற இடத்திற்குரியதாயிருந்தது. அவர் இருப்பிடம் அதுவே யாதலால், அவசரமாக எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை ஆவலுடன் வாசித்தேன். அதில் இரண்டு சிறு வாச கங்களில் என் திறமைக்கு நற்சான்றும் பாராட்டும் அளிக்கப்பட்டிருந்தது. அடுத்த வாசகத்தில் இப் புகழ்ந்துரைக்குரிய உடனடிக் காரணம் தெரிந்தது.

“இன்றிரவே கள்ள வாணிகச்சரக்கின் பெருந் தொகுதி ஒன்று ஃவோக்ஸ்டனுக்கும் டோவருக்கும் இடையில் இறக்கப்பட இருக்கிறது. ஆகவே, இரவு பதினொரு மணிக்குள் கடலையடுத்துள்ள குன்றின் பக்கம் என்னை வந்து சந்திக்கக் கோருகிறேன்,” என்று அம் மேற்பணியாளர் கட்டளையிட்டிருந்தார். அத்துடன் இச் செய்தியைத் தீர்வைத்துறையில்கூட யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்றும், யாரையும் உடன்

கொண்டுவராமல் தனியாகவே வரும்படியும் எழுதி யிருந்தது.

கடிதம் வந்ததுமுதல் என் கால்கள் நிலத்தின்மீது பதியவில்லை. நான் நீண்டநாள் காத்துக்கொண்டிருந்த முதல்தர வாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது. இன்று நான் காட்டும் திறமையின்மூலம் எனக்குக் கட்டாயம் உச்ச உயர்பணியோ அல்லது அதற்கடுத்த பணியோ கிடைக்கலாம். அத்துடன் புகழும் பாராட்டும் சிறப்பும் கிட்டுவது உறுதி. இவ்வாறு எண்ணியவனாய் நான் மாலையிலிருந்தே புறப்படுவதற்கு வேண்டிய முன்னேற் பாடுகளெல்லாம் செய்தேன். அகமகிழ்ச்சியுடன் செய்தேன். ஆனால், என் இளமனைவியினுடைய கண்கள் அதேசமயம் என்னைக் கவலையுடன் கவனித்துக்கொண் டிருந்தன.

அவளைப் பார்க்கப் பரிவிரக்கமாயிருந்தது. நான் சட்டையின் தூசியைத் துடைக்கும்போது, அவள் உள்ளம் துடித்தது. நான் துப்பாக்கியைத் துடைத்து மெருகு கொடுத்தபோது, அவள் நெஞ்சு வெம்பிற்று. இவற்றையெல்லாம் நான் சிறிதுநேரம் கண்டும் காணாத வனாகவே இருந்தேன். அவள் பக்கம் பார்வையைத் திருப்பினால் என்ன நேரும் என்பது எனக்குத் தெரியும். பகைவரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இல்லாத ஆற்றல்—அச்சுறுத்துக் கடிதங்களுக்கு இல்லாத வலு—அவள் நீல விழிகளுக்கும் அதில் கலங்கும் பனிநீருக்கும் உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

அவளை நான் நன்கு அறிவேன். அவள் பெண்தான், ஆனால் கோழையல்ல! என்னை இடரிலிருந்து காக்க அவளைத் துப்பாக்கி ஏந்திக்கொண்டு வரச்சொன்னால்,

அவள் வரத் தயங்கமாட்டாள். அவளைக் கோழை யாக்கியது அவள் என்மீதுகொண்ட அன்பு ஒன்றுதான். இந்த அன்பு என்னை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், அது அவளை ஒவ்வொரு நாளும் ஆயிரம் ஐயங்களுக்கும் அச்சங்களுக்கும் இரையாக்கியது. இந்த அச்சங்களையும் ஐயங்களையும் நீக்குவதற்கு ஒரே ஒரு வழிதான். அவளிடம் நன்மை தீமைகள் எவற்றையும் ஒளிக்காமல் கூறிவிடுவது ஒன்றே அது.

கற்பனை அச்சங்களும் ஐயங்களும் மெய்யான அச் சங்களையும் ஐயங்களையும்விட அன்புள்ளத்தில் மிகுதி துன்பம் உண்டுபண்ணும் என்பதை நான் அறிந்திருந் தேன். எனவேதான் 'இன்று என் வீர இளஞ்சிறுவன் எங்கும் வெளியேறவில்லையே,' என்று அவள் என்னிடம் கேலியாகக் கேட்டபோது, அவளிடம் மட்டும் உண்மை யைக் கூறிவிட்டேன். உண்மை என்றால் பிறரிடம் சொல்லும் அரைகுறை உண்மையல்ல. பாசமுள்ள வர்கள், அதிலும் பெண்கள் உண்மையின் ஒரு தும்பைப் பிடித்து மறு தும்புவரை நயமாக இழுத்து வெளிப் படுத்தாமலா இருப்பார்கள்? அவள் கேள்விமேல் கேள்விகேட்டுப் பசப்பி, இறுதியில் கடிதத்தையே வாங்கிப் பார்த்துவிட்டாள்!

தீர்வைத்துறை மேற்பணியாளர்களிடம் மட்டு மல்ல, காவல்துறை மறை வேவுக்காரரிடமும் வழக்கு மன்றத்து மன்று உரைஞரிடமும் நான் குறுக்குக்கேள்வி களுக்கு ஆளானதுண்டு. ஆனால், என் மனைவியின் குறுக்குக் கேள்விகள்போல அவை என்னை அவ்வளவு திக்குமுக்காட வைத்ததில்லை.

"மழையும் புயலும் வாரியடிக்கிறது. வானம் கண் ணையும் முகத்தையும் மூடிக்கொண்டு அலறுகிறது.

இப்படிப்பட்ட நேரத்தில் யார் வெளியே போவார்கள்? மேற்பணியாளர் நீங்கள் வருவதை எதிர்பார்ப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. அவர்கூட உண்மையில் வெளியேற மாட்டார். ஆகவே, நீங்கள் இன்று போக வேண்டாம்," என்ருள்.

"அவர் வருவதாகக் கூறியிருக்கிருர். என்னையும் வரும்படி கட்டளையிட்டிருக்கிருர். நான் போய்த்தானுக வேண்டும்."

"ஒரு தடவை மழையைச் சாக்கிட்டுக் கட்டளையை மீறினல் என்ன? தலையையா கொண்டுபோய் விடுவார்கள்? அல்லது வேலையிலிருந்து நீக்கிவிடுவார்களா? அப்படி ஒன்றும் செய்யப் போவதில்லை. உங்களைப் போல இன்னொரு துணிச்சல் பேர்வழி எங்கே கிடைக்கப் போகிருர்கள்?"

"நான் அடையவிருக்கும் உயர்பதவியையும் புகழையும் நீ மறக்கிருய். குறைந்த அளவு நீ உன் தந்தை வீட்டில் இருந்த நிலையிலாவது நான் உன்னை வைத்திருக்க வேண்டாமா?"

"இது ஒரு பெரிய காரியமானல், நான் தந்தை வீட்டிலேயே இருந்திருக்கலாம்! நம்மிடம் இப்போதிருக்கும் பணம் போய்விட்டால்கூட, நான் கவலைப்படமாட்டேன். நீங்கள் இப்படிச் சுற்றித்திரிவதில் நான் படும் துன்பம் அதைவிட மிகுதி."

"இன்று ஒரு நாள் பொறுத்துக்கொள். இனிப் போகவேண்டி வராது."

"இன்று ஒருநாள் எனக்காகப் போகாமலிருங்கள். இனி ஒருநாளும் நான் இப்படித் தடுக்கமாட்டேன். இன்று நான் உங்களுக்கென்று சுடச் சுட........'

"என்ன ஆலிஸ், வரவரக் குழந்தையாய் விட்டாய்!' என்னையும் குழந்தையென்று நினைத்து விட்டாயா? என்ன?"

அவள் சற்றுநேரம் பேசாதிருந்தாள். ஒரு மட்டில் தப்பினேம் என்று நினைத்தேன். ஆனால், கண்களி லிருந்து வடிந்த நீரை அவள் நானும் அறியாமல் மறைக்க முயன்றபோது, என்மனம் துடித்தது.

ஆனால், நான் பேசவில்லை. அவளும் தலைகவிழ்ந்து கடவுள் வழிபாட்டில் ஆழ்ந்திருப்பவர்கள் தம்மை மறந் திருப்பது போல் இருந்தாள்.

ஆயினும் அவள் உள்ளம் சும்மா இருக்கவில்லை. திடுமென அவள் பாயவிட்ட கேள்வி இதற்குச் சான் றுரைத்தது.

"இக்கடிதத்தை உங்கள் மேல்பணியாளர்தான் எழுதியிருக்கிறாரென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

நான் நிமிர்ந்து பார்த்தேன். வழக்குரைஞரல்ல, இந்தக் கேள்வி கேட்டது. ஒரு பெண்தான்!

"அவர் கையொப்பம், அஞ்சலறிவிப்பு எல்லாம் இருக்கிறதே!"

"உங்களுக்கு அவர் கையொப்பம் தெரியுமா? கையெழுத்துத்தான் தெரியுமா? நீங்கள் அவரைப் பார்த்ததே கிடையாது; அவர் புதிதாக வந்தவரா யிற்றே!"

நான் சிறிது நேரம் விழித்தேன். "அவரல்லாமல் வேறு யார் எழுதியிருக்க முடியும்?"

"உங்கள் பகைவர் யாராவது இப்படி எழுதி........"

குறுக்குக் கேள்வி கேட்கும் வழக்குரைஞர் படியி லிருந்து துப்பறியும் புனைகதை எழுதும் புனைகதையாசி ரியை ஆய்விட்டாள் ஆலிஸ் என்று நினைத்தேன். நினைப் புச் சிரிப்பாக வெளிவந்தது.

அவள் என்னுடன் சிரிக்கவில்லை.

"அத்துடன் யாரையும் கூட்டிக் கொண்டு வரக் கூடாது, தீர்வைத்துறையிலுள்ள எவரிடமும்கூடச் செய்தி சொல்லப்படாது,' என்ற வாசகம் தீர்வைத் துறையில் உயர்பணிக்கு வந்துள்ள, ஒருவர் அறிவு நிலைக்கும் முன் எச்சரிக்கைப் பண்புக்கும் முரணாயிருக் கிறது. எனக்கென்னவோ........!"

அவள் வழக்கமாக முடிக்கும் பல்லவி எனக்குத் தெரியும். சட்டென நான் எழுந்து, "இதையெல்லாம் பெண்களிடம் கூறியதால் வந்த தப்பு. பேசாமல் உன் காரியம் பார்த்துக் கொண்டிரு, போ. நான் வருகிறேன்', என்றேன். புறப்படும் நேரம் ஆகாவிட்டாலும் நான் புறப்பட்டேன். திரும்பிப் பார்க்கக்கூடத் துணிவின்றி விரைந்து நடந்து சென்றேன்.

பல அடி முன் சென்றபின் திரும்பி நின்று பார்த்தேன்.

பெண்ணினத்தின் பரிவு முழுதும் அவள் கண்ணில் குடிகொண்டிருந்தது. அவள் சலவைக்கல்லால் செய்த சிலைபோல அசைவற்று நின்றிருந்தாள்.

அவள் நின்ற காட்சி என் உள்ளத்திலிருந்து என்றும் அகலவேயில்லை. அன்று அவள் சொற்கள்— அவள் கலக்கம்—அவள் இறுதியில் நின்ற காட்சி—அத் தனையும் என் மனக்கண்முன் நின்று அங்குலம் அங்குல

மாக வருத்தின. என் வீர உள்ளத்தின் அறிவுத் தெளிவைவிட அவள் அன்புள்ளத்தில் அறிவுத்தெளிவு மிகுதி அகன்றிருந்தது என்பதை நான் ஒரு தடவை

* * * *



ஆல்ஃவிரட் வீட்டைவிட்டுப் புறப்படுதல்

சாகாதவண்ணம் செத்துத்தான் அறியவேண்டி வந்தது. நான் மட்டும் அன்று அவள் சொல்லுக்குச் செவி சாய்த்திருந்தால்........"

தெருக்கள் எங்கும் சாக்கடையில் குமிழியிட்டு ஓடும் நீரோட்டத்தின் அரவம் தவிர வேறு ஓசையில்லை. என்கால்கள் சேற்றில் பதிந்தபின் வெளியேறும்போது ஏற்பட்ட அரவம் அதற்குத் தாளமிட்டது. தெருவிளக்குகளில் ஒன்றிரண்டு மங்கலாய் எரிந்தன. மற்றவை குளிரினால் அவிந்து போயிருந்தன. நகர் கடந்தபின் வெள்ளைச் சுண்ண மண்ணுலான நிலமுழுவதிலும் நீர்

தோய்ந்து எங்கும் சறுக்கிற்று. சமதரப்புக் கடந்து குன்றின் சரிவில் ஏறும்போது இன்னும் கடுமுயற்சி தேவைப்பட்டது. மேடு பள்ளங்கள் மிகுதியாயிருந்தன. இறுதிக் கட்டத்தில் சாய்வான புல்பரப்பில் கால்களாலும் கைகளாலும் தவழ்ந்தே செல்ல வேண்டியதாயிற்று. கடைசியாகச் சந்திப்பிற்குக் குறிக்கப்பட்ட இடமாகிய பாறையின் உச்சியை அடைந்தேன்.

இந்த இடத்தை நான் நன்கு அறிவேன். கடலின் திசையிலுள்ள அதன் பக்கம் செங்குத்தாகக் கடலலைகள் மீது நின்றது. அதன்மேல் அடிக்கடி கடலோட்டிகளுக்கு உதவியாகத் தீப்பந்தங்கள் வளர்க்கப்படும். அவை கடலில் பல கல் தொலை ஒளி வீசிக் கரையோர அறிகுறியாக நிலவும். அதை ஒரு கவிஞன் பாடியிருந்த காரணத்தால், அதற்குக் கவிஞன் பாறை என்று பெயர் வழங்கியிருந்தது. கள்ள வாணிகக்காரருக்கு அது ஒரு முக்கியமான சரக்கிறக்கும் இடமாகவும், சந்திப்பிடமாகவும் இருந்தது.

நான் சிறிதுநேரம் முன்னும் பின்னுமாக அந்தப் பாறைமீது நடந்தேன். கடற்பக்கம் சென்று பாறை விளிம்பிலிருந்து கடலை எட்டிப்பார்த்தேன். இருட்டில் ஒன்றும் தெரியவில்லையானாலும் அலைகளின் ஓசை அருகே கேட்டது. மிகு தொலைவில் எங்கோ உள்ள ஒரு கரையோரப் பந்தம் சிறு செம்புள்ளியாய் ஒருகணம் தெரிந்தது. ஆனால், மறுகணம் அது ஒரு முகில் திரளுக்குள் மறைந்தது. வேறு ஒளிகளோ மனித நடமாட்ட அடையாளமோ எதுவுமில்லை. என்னையறியாமல் என் உள் எலும்புகளினூடாக ஒரு நடுக்கம் ஏற்பட்டது. வழக்கமான என் நெஞ்சுரம் இன்று ஏன் என்னிடம்

செயலாற்றலில்லை என்று என்னை நானே கண்டித்துத் திடப்படுத்திக்கொண்டேன்.

இரண்டொரு விநாடிகள் இவ்வாறு கழிந்தன. குன்றின் சரிவில் ஏதோ கருந்திரள்கள் தெரிந்தன. சிறிது நேரத்தில் அவை சரிவுகடந்து நான் இருந்த மேட்டு விளிம்பு தாண்டி வானவெளியின் பின்னணியை ஊடுருவி எழுந்தன.

அவை புதர்களா, மனிதர்களா என்று பின்னும் சற்றுத் தயங்கினேன். அத்திசையிலிருந்து எழுந்து அடங்கிய முணுமுணுப்புக் குரல், அவர்கள் மனிதர்களே என்பதைப் புலப்படுத்திற்று. இது என் மேற்பணி யாளரும் அவர் ஆட்களுமாகவே இருக்கவேண்டும் என்று நினைத்தேன். உருவங்கள் சற்று அருகே வந்ததும், 'வணக்கம், அன்பர்களே' என்று வரவேற்க முனைந்தேன்.

எதிர்வணக்கம் எதுவுமில்லை.

உருவங்கள் பேச்சு மூச்சில்லாமலே மெல்ல என்னை நோக்கி நகர்ந்தன.

அவர்கள் கள்ள வாணிகக்காரரா யிருப்பார்களா? மேற்பணியாளர் வரவறிந்து அவர்கள் வந்திருக்கிறார்களா? அல்லது தற்செயலாக வந்திருக்கிறார்களா?

இன்னொரு அச்சந்தரும் எண்ணமும் மின்னலென என் உள்ளத்தில் பாய்ந்தது. என்னை அழைத்தது இவர்களே ஆயிருக்கக்கூடுமா? கடிதம் என் இளமனைவி அஞ்சியபடி என்னை அகப்படுத்தவைக்க ஏற்பாடு செய்த பொறியாகக்கூட இருக்குமா?

எனக்கு உண்மையிலேயே நடுக்கம் ஏற்பட்டது. வேறு எந்த இடமானாலும் வேளையானாலும் நான் அஞ்சி

இருக்கமாட்டேன். அந்த இடத்திலும் வேளையிலும் தனியாக எதுவும் செய்யமுடியாது. மேலும் என்னைச் சூழ்ந்துகொள்வதற்காக அவர்கள் பிரிந்து பரந்தபோது, அவர்கள் இருபதுக்கு மேற்பட்டவர்கள் என்பதும் கண்டேன்.

அவர்கள் எனக்குச் சிந்திக்கவே நேரம் கொடுக்கவில்லை. இம்மெனு முன் நான் நிலத்தின்மீது வீழ்த்தப் பட்டேன். பத்துப் பன்னிரண்டு பேர்கள் என் துப்பாக்கி• கத்தி ஆகியவற்றை அகற்றி என்னை வரிந்துகட்டினர்.

'அடே! ஆள் ஒருவகையில் கடைசியாக அகப் பட்டான்!' என்றது ஒருகுரல்.

'வெட்டு!' 'கொல்லு' 'மண்டையை உடைத்து அவன் மூளையை மீன்களுக்கு இரையாக்குவோம்!' 'கடலில் தூக்கி எறியுங்கள்!' என்று பல கருத்துரைகள் வீசப்பட்டன.

'போதும், நிறுத்துங்கள்' என்றது ஒருகுரல். அது தலைவன் குரலாயிருக்கவேண்டும்! ஏனென்றால் உடன் தானே எல்லாரும் வாயடைத்துக் கையடக்கி நின்றனர்.

'இரண்டு மூன்று பேர் சேர்ந்து இவனைத் தூக்கி நிறுத்துங்கள். நான் ஒளிப்பந்தத்தை அவன் முகத்தின் முன்காட்டி ஆள் அவன்தானா என்பதை ஐயத்துக்கிட மில்லாமல் முதலில் உறுதி செய்துகொள்ள வேண்டும்.' என்றான் அவன்.

நான் எவ்வளவு திமிறியும் அவர்கள் கட்டுடன் என்னைத் தூக்கிப்பிடித்தனர். பந்தம் என் முகத்தி னருகே காட்டப்பட்டது. ஒளியும் வெப்பமும் தாங்க முடியாமல் நான் கண்களை மூடினேன்.

'ஆள் இவன்தானடா' என்று கூவின பல குரல்கள்.

நான் சற்றே கண்களைத் திறந்து பார்த்தேன். காலன் தூதுவர்போல அச்சந்தரும் பல உருவங்கள் என்னைச் சூழ்ந்து நின்றன. அவர்கள் அனைவர் இடையிலும் கொடுங் கத்திகளின் பித்தளைப்பிடிகள் பளபளத்தன. ஒன்றிரண்டுபேரிடம் கைத்துப்பாக்கிகளும், தலைவனிடம் துப்பாக்கியும் இருந்தன. ஆனால், ஒரு



ஆல்ஃபிரட்டைப் பகைவர் சூழ்ந்துகொள்ளல்

வரைக்கூட என்னால் அடையாளம் காணமுடியவில்லை. அவர்கள் அனைவரும் முகத்தைக் கருந்துணியாலான முகமூடியால் மறைத்திருந்தனர்.

'ஆம். ஆள் இவன்தான், ஆல்ஃபிரட் ஹார்வி. நம்மை எல்லாம் பலநாள் அச்சுறுத்திவந்த புலி!' என்றான் தலைவன்.

அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

"இவன் மக்கள் பகைவன். கொஞ்சமும் மூளையில்லாமல் நம்மை எதிர்த்தழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். இப்பொழுது தன் உயிருக்குத் தானே உலைதேடிக்கொண்டான்," என்றான் தலைவன்.

"ஆம். ஆம். இவனை விடப்படாது. வெட்டு, கொல்லு! வதை! நீரில் ஆழ்த்து! கொன்று உடலைத் துண்டு துண்டாக்கி மீனுக்கு இரையாகப் போடு," என்று வெஞ்சீற்றக் குரல்கள் மீட்டும் எழுந்தன.

பேச்சுமட்டுமல்ல, அவர்கள் ஆத்திரத்தை எனக்குக் காட்டியது! என்னைப் பிடித்திருந்தவர்கள் பூனை தன் கையிலகப்பட்ட எலியைக் குலுக்கி ஆட்டுவதுபோல ஆட்டினர். உடலின் பல பாகங்களிலும் குத்துக்கள், உதைகள், அடிகள் விழுந்தன.

என் இளமனைவியின் அன்பு எச்சரிக்கையை அசட்டை செய்த என் முட்டாள்தனத்தை ஒவ்வொரு அடியும் குத்தும் உதையும் எடுத்துரைப்பவைபோல இருந்தன.

'ஏன் இன்னும் தாமதம்? அவனைச் சுட்டுத்தள்ளுங்கள்,' என்றான் தலைவன்.

'சுடவேண்டாம். குத்திச் சந்து சந்தாக வெட்டுங்கள்,' என்றது ஒரு குரல்.

'அடித்துச் சாகடியுங்கள்,' என்றது மற்றோர் குரல்.

பல கருத்துரைகளுக்கிடையில் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது.

தலைவன் குரல் எல்லாக் குரலையும் அடக்கி எழுந்தது:

'நீங்கள் கூறுவதெல்லாம் எளிதான சாவுகள். இவனுக்கு அவை தகாது. தூக்கிட்டுக் கொல்வதுதான் சரி.'

'ஆம். அதுதான் சரி' என்றன பல குரல்கள்.

'கடலின்மீதே பாறையின் உச்சியில் தூக்குவோம்.'

மீண்டும் தலைவன் குரல்: 'படபடப்பு எதுவும் தேவையில்லை, தோழரே. தண்டிக்கத்தான் போகிறோம். அவன் தன்பக்கம் என்ன சொல்கிறான் என்று பார்த்துப் பின் தண்டிப்போம்.'

என் வாயடைப்புமட்டும் விலக்கப்பட்டது. மீட்டும் ஒளிப்பந்தம் என்முன்—இத்தடவை சற்றுத் தள்ளி—காட்டப்பட்டது.

'ஆல்பிரட் ஹார்வி, உன் பக்கமாக உன் குற்றங்களுக்கு ஏதாவது விளக்கம் கூறுவதாயிருந்தால் கூறலாம்,' என்றான் தலைவன்.

அவன் பேச்சின் நயநாகரிகமே அவனிடம் எனக்கு மற்றவர்களைவிட மிகுதி அச்சத்தை உண்டுபண்ணிற்று.

நான் என்ன சொன்னால் என்ன? சாவது உறுதி. ஆகவே, நான் என் ஆண்மையை முற்றிலும் வரவழைத்துக்கொண்டு, ஆனால் மனத்துயருடன், வெப்பத்துடன் பேசினேன்:

"நான் என் கடமையைச் செய்தேன். நான் யார் மீதும் பகைமை காட்டவில்லை. என் இடத்தில் எந்த நாணயமான பணியாளனும் என்னைப்போலத்தான் நடந்துகொள்வான். இப்போது நேர்மையற்றவர்கள் வென்றீர்கள். நேர்மையாளர் கைப்பட்டால் உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை நேர்மையற்றவர் கைப்பட்ட எனக்கும் கிடைத்தது. நேர்மைக்கான இந்தத் தண்டனையை நான் பெருமையுடன் ஏற்கிறேன்."

"அடே, நம்மிடம் அவர்கள் கொடுங்கோன்மைச் சட்டம் பேசுகிருன், சட்டம்! ஒழிடா இவனை, விரைவில் ஒழி!" என்றன பல குரல்கள்.

என் நெஞ்சம் பின்னும் திடுக்கிட்டது.

"ஆல்ஃவிரட் ஹார்வி, நீ மற்றவர்களைவிடக் கடமை யறிந்தவன். மற்றப் பணியாளர்களுக்குத் தரப்படும் பொது முறைத் தண்டனை உனக்குப் போதாது. உனக்குத் தனித்தண்டனை தருவேன். நீ அந்தக் கிணற்றுப் புக லிடத்தில் எங்களைச் சூறையாடவில்லை யென்றுல், உனக்குப் பிறருக்குரிய தண்டனையே தந்திருப்பேன். இப் போது உன்கையில் கழுத்தைச் சேர்த்துக்கட்டி மீனுக்கு இரையாக எறியவேண்டும் என்று தண்டனையை மாற்று கிறேன்," என்ருன் தலைவன்.

"கடல் வேலி இறங்கும் நேரமாயிருக்கிறதே!" என் ருன் ஒருவன்.

"அதுவும் நல்லதாயிற்று. நீரில் மெத்தென விழு வதற்கு மாருக, பாறையில் கணீரென விழட்டும், முதலில்! பின் அலைகளுடன் மீன் வந்து நல்ல விருந்து கொள்ளட்டும்," என்று கூறினுன் தலைவன்.

அனைவரும் இதனைக் கைகொட்டி வரவேற்றனர்.

என் உடலில் எல்லாப் பகுதியும் கட்டப்பட்டது. வாய் அடைப்பு மட்டும் எடுக்கப்பட்டது. இருவர் என்னை இருபுறம் நீரிறைக்கும் கூடையைப்போல் பிடித்துத் தூக்கி ஊசலாட்டினர். "நான் ஒன்று, இரண்டு எனக் கூறி மூன்று என்றவுடன் எறியுங்கள்," என்று தலைவன் திட்டம் வகுத்துரைத்தான்.

"ஒன்று!"

அவர்கள் என்னை முன்னும் பின்னுமாக ஊச லாட்டத் தொடங்கினார்கள். சாவின் பிடியில் நான் திணறினேன்.

"இரண்டு!"

ஊசலாட்டம் வேகமாயிற்று. அடுத்த கணம் என் உயிர் பிரிந்துவிடும் என்ற நிலையில் என் உள்ளம் வேக மாகச் சிந்தித்தது. அந்த ஒரு கணத்துக்குள் என் இள மனைவியின் முகம்—என்னை எதிர்பார்த்து அவள் அடைய இருக்கும் இன்னல்—எங்கே எப்போது என்ன வகையில் இறந்தேன் என்றுகூட அறியாமல் அவள் படக்கூடும் வேதனை—இவ்வளவும் மின்னலினும் வேக மாக ஓடின. நான் வாய்விட்டு அலறினேன்!

"ஆ, லூஸி!! உன்னையும் நம் குழந்தையையும் இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று என் இறுதி மூச்சாகக் கூறினேன்.

"மூன்று" என இன்னும் கூவப்படவில்லை. ஆனால், அதற்குத் தலைவன் வாயெடுத்தாய் விட்டது. அதற்குள் என் இறுதி வாசகம் அங்கிருந்த அனைவர் உள்ளத்திலும் மின்சாரம்போல் பாய்ந்தது. அனைவரும் 'ஆ!' என்று ஒருமிக்கக் கூவினர். என்னை ஊசலாட்டியவர்கள் கைகூடச் சட்டென நின்றுவிட்டது.

இச்சமயம் "மூன்று" என்றான் தலைவன்.

என் உடல் வீசியெறியப்பட வில்லை. நான் வியப் படைந்தேன். ஆனால், இன்னது செய்தி என்றறியாமல் மலைப்புற்றேன்.

கூட்டமுழுதும் ஒரே முணுமுணுப்பு, ஒரே பர பரப்பு. ஆனால், தலைவன் வாய் திறக்கவில்லை.

"எனக்கு இந்தப் பழி வேண்டாம்," என்ருன், என்னைத் தூக்கி விசக் காத்திருந்த இருவரில் ஒருவன்.

"அந்த லூஸியை ஜிம் பார்த்திருக்கிருனும், அண்ணே! பெரிய வீட்டுப் பெண்தான். ஆனல், எல்லா ரிடமும் பாசமுள்ளவளாம். அவளை நினைக்க வேண் டாமா?" என்றது ஒரு குரல்.

"ஆம் அண்ணே. நான் குழந்தையைக்கூட ஒரு நாள் எடுத்துக் கையில் வைத்திருக்கிறேன். அதன் சிரித்த முகம் என் கண்முன் நிற்கும்போது, அதன் அப்பனை எப்படி நான்........"

தலைவன் சீறினன்:

"உங்கள் நெஞ்சு இத்தனை கோழைத்தனம் வாய்ந்தது என்று நான் எண்ண வருந்துகிறேன்."

"என்னவோ, எங்களுக்கும் பிள்ளை குட்டிகள், பெண்டாட்டிகள் இருக்கிருர்கள். அவர்களுக்காகத் தான் நாம் எல்லாம் கொலைகூடப் பண்ணுகிருேம். அதை நினைப்பது கோழைத்தனமானல், நாங்கள் கோழை களாகவே இருக்க விரும்புகிருேம்," என்றனர் சிலர்.

"சரி, எல்லாரும் இவனை விட்டுவிட்டு அப்பால் வாருங்கள்," என்ருன் தலைவன்.

தலைவன் பிறர் மனத்தை மாற்ற எண்ணுகிருன் என்பது எனக்குத் தெரியாமலில்லை. ஒரு சாவிலிருந்து தப்பினேம். மறுசாவு என்ன வடிவில் வருமோ என்று கவலையுடன் ஒற்றுக்கேட்டேன். அவர்கள் தொலைவில் மெள்ளப் பேசினதால், எனக்கு எதுவும் தெளிவாகக் கேட்கவில்லை.

அவர்கள் திரும்பிவந்தனர்.

தலைவன் பேசினான். அதுதான் அவர்கள் தீர்ப்பின் முடிவு என்று தெரிந்துகொண்டேன்.

"ஆல்ஃபிரட் ஹார்வி, உனக்குப் பிழைக்க ஒரு வாய்ப்பு அளிப்பதென்று ஒத்துக்கொண்டிருக்கிறேன். நீ அழைத்த கடவுளிடமே உன்னைக் காப்பாற்றும் பொறுப்பை விட்டிருக்கிறோம். உன்னை நாங்களாக மீன்களுக்கு இரையாக எறியப்போவதில்லை. தூக்கிடவும் போவதில்லை. பாறையைப் பற்றிக்கொண்டு கடலின்மீது தொங்கவிட்டுப்போகிறோம். நீயாக உறுதியாகப் பிடித்துக்கொண்டு இருந்தால், காலையில் போவார் வருவார் யாரையாவது கடவுள் அனுப்பி உன்னைக் காப்பாற்றுவார். இத்துடன் எங்கள் பொறுப்பு முடிந்தது. நாங்கள் போகிறோம்," என்றான் அவன்.

என்னை இப்போது பல கைகள் தூக்கின. என் வாய் மீட்டும் அடைக்கப்பட்டது. கண்கள் இறுக்கப் பட்டன. எவ்வளவு தொலை தூக்கிச்சென்றனர் என்று எனக்குத் தெரியாது. ஆனால், சிறிதுநேரத்தில் அவர்கள் நின்றனர். பாறையின் அருகுக்கு வந்துவிட்டதாக உணர்ந்தேன்.

என்னைப் பாறையின் அருகுக்கு அப்பால் தொங்கும்படி செய்து அதன்பின் கைக்கட்டுமட்டும் அவிழ்த்தனர். சாகிறவன் அகப்பட்டதைப் பற்றுவதுபோல நான் பாறை விளிம்பைப் பற்றினேன். அவ்வளவுதான், அவர்கள் தம் பிடியை விட்டுவிட்டனர். நான் இரங்கத்தக்க நிலையில் வெட்டவெளியில் ஒரு விரல் பிடியை மட்டுமே பற்றுக்கோடாகக்கொண்டு தொங்கினேன். 'வலிவாகப் பிடித்துக்கொள், ஹார்வி' என்று தொலைவி

லிருந்து அவர்கள் பேசிய குரல்தான் அவர்கள் சொல்வதை எனக்கு அறிவித்தது.

*   *   *   *

என் வாய் மூடப்பட்டிருந்தது, நான் வாய்விட்டுக் கதறமுடியவில்லை! என் கண் மூடியிருந்தது, நான் எதுவும் பார்க்க முடியவில்லை.

வேறு உணவை நாடிச்செல்லும் பூனை அடித்த எலியை விட்டுவிட்டுப் போவதுபோல் அவர்கள் போனார்கள். இதைவிடச் சுட்டிருந்தால், தூக்கிலிட்டிருந்தால் எத்துணையோ நன்றாயிருந்திருக்கும் என்று நான் நினைத்தேன். என் கை நரம்புகளின்மீது உடலின் பளு முழுதும் தாக்கினதால் அவை 'விண்விண்' என்று தெறித்தன. பின் தோளும் தலை நரம்புகளும் விம்மி அதிர்ந்தன. காதுகள் இரண்டிலும் வண்டுகள் குடைந்தாற்போன்ற இரைச்சல் உண்டாயிற்று. குருதி தலைக் கேறுவதாலுண்டான இந்த இரைச்சல் நின்றபின் கையிரண்டும் மரத்துப்போவது போன்ற உணர்ச்சி தொடங்கிற்று. எங்கே கைநரம்புகள் முற்றிலும் செயலற்றுவிட்டால் விழுந்துவிடப்போகிறேனோ என்ற கிலி ஒவ்வொரு கணமும் என்னை வாட்டிவதைத்தது.

உடல் பாதி செத்துவிட்டது. ஆனால், சாகும் மனிதன் வேகத்தில் நாடி நரம்புகளும் மூளையும் வேலை செய்தன. என் வேதனைப்பட்ட உள்ளம் லூஸியிடமும் குழந்தையிடமும் சென்றது. 'அவர்கள் என்ன துன்பப் படுகிறார்களோ? யார் அவர்களுக்கு ஆறுதல் கூறப் போகிறார்களோ? ஆதரவு செய்பவர்கள் யாரோ?— அந்தோ லூஸி என்னை மணப்பதற்கு மாறாக வேறு யாரையேனும் மணந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்

குமே! அவள் நாள் தவருமல் இந்த வேலையை விட்டொழித்துவிடு என்ருளே! கேட்டோமா? இன்று போகவேண்டாம் என்ருளே. அவள் சொற்படி வராதிருந்திருந்தால்.........இனி இவை எல்லாம் நினைந்து யாது பயன்?' என்று எண்ணினேன்.

நகரக் கோயிலின் மணி அருகிலிருந்து அடிப்பது போல 'டாங், டாங்' என்று அடித்தது. நான் அந்த நிலையிலும் மணியை எண்ணினேன். பன்னிரண்டு அடித்திருந்தது. இன்னும் விடிய ஆறு மணி நேரம். ஆள் நடமாடப் பின்னும் இரண்டு மணி நேரம் பிடிக்கும். ஏற்கெனவே மெய் முழுதும் உணர்வற்றுக் கை நரம்புகளும் விரல்களும் எரிகின்றன. இனி நெடுநேரம் இந்த நரக வெப்பைத் தாங்க முடியாது. கைப்பிடியைவிட்டுக் கீழே விழுந்து இறந்தாலும் சாவு மூலம் அதிலிருந்து விடுதலை கிட்டுமே என்று எண்ணினேன்.

உடல் நலிவுற்ற நேரத்திலும் மூளை ஆராய்ச்சியில் இறங்கத் தவறுவதில்லை. இப்போது கடல் வேலி இறக்கமாதலால், கீழே விழுந்தால், பாறையில் விழுந்து உடல் நொறுங்கும். இதில் உடனடிச் சாவு வராவிட்டாலோ இப்போதிருக்கும் வேதனையைவிட நெடுநேரம் மிகுந்த வாதனைப் படவேண்டியிருக்கும். ஆகவே, விழுந்து சாக விரும்பினுல்கூட, கடல் வேலி பொங்கும் சமயம் பார்த்து விழுந்தால்தான் நோவற்ற சாவு கிடைக்கும். சாவு கொடியதாயினும் நோவுடன் சாவு அதனினும் கொடிது என்பதை அச்சமயம் நான் நன்ருக உணர்ந்தேன். எப்படியும் கடல் பொங்கிவரும் வரை, அதாவது நாலுமணிவரை பல்லைக் கடித்துக்கொண்டு காத்திருப்பது என்று துணிந்தேன்.

கணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஊழியாகச் சென்றது, எனக்கு! இப்படி எத்தனை ஊழிகள் பொறுத்திருந்தேன் என்று தெரியவில்லை. என் உடலின் ஆற்றல் கேடு என் துணிவை வென்றது. இருந்தாலும் சரி, பிழைத்தாலும் சரி. இனி ஒரு கணம்கூட இந்த உயிர் நோவைப் பொறுத்துத் தொங்கமுடியாது என்ற நிலையை எட்டினேன். சாவோ நரக வேதனையோ எதற்கும் துணிந்து ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு கைப்பிடியை விட்டேன்.

நான் வெட்ட வெளியில் கீழ்நோக்கி விழுந்தேன்.

விழுந்து நொறுங்கப் போவதாக எண்ணினேன்—விழுந்தேன்—விழுந்துகொண்டிருந்தேன்—அவ்வளவு தான் எனக்குத் தெரியும்: சாவின் முன்வரும் உணர்விலாத அமைதி என்னை அணைத்ததுபோல இருந்தது.

ஆனால், நான் என்ன காரணத்தாலோ சாகவில்லை. என் உடல்மேல் காற்றுப்படுவது எனக்குத் தெரிந்தது. நான் நீரிலில்லை என்பதை இது காட்டிற்று. நிலம் ஈரமாயிருந்தது. இன்னும் கடலருகிலேயே கிடக்கலாம் என்று கருதினேன். கண்மீது வெயில் எறிப்பதை உணர்ந்தேன். கண்ணைத் திறக்க முயன்றேன். முடியவில்லை. ஆனால், கண்மீது கட்டு இருந்ததாகத் தெரியவில்லை. கையை அசைத்துப் பார்த்தேன். அசைந்தது. ஆனால் தூக்கமுடியவில்லை. கட்டு எதுவும் இல்லை என்று மட்டும் உணர்ந்தேன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், நீடித்துச் சிந்திக்கவும் முடியவில்லை, நான் மீட்டும் உணர்விழந்தேன்.

மீட்டும் சற்று உணர்வு வந்தபோது என் பக்கத்தில் மனிதர் குரல் கேட்டது. ஆனால், அது தொலைவிலிருந்து

பேசுவது போலத்தான் இருந்தது. என் வாயில் ஏதோ ஊற்றப்பட்டது. கைகளிலும் உடம்பிலும் ஏதோ சூடு தட்டுப்பட்டது. நான் கண்களைத் திறந்தேன். முதலில் நான் நீலவானைக் கண்டேன். பின்பக்கத்தில் திரும்பிய போது இரண்டு மனிதர்கள் என்னருகில் இருப்பது கண்டேன்.

"இன்னும் சற்று ஓய்வாகப் படுத்துக்கொள்ளுங்கள், அன்பரே! உங்கள் கண் திறந்தது கண்டு மகிழ்ச்சியடை கிறோம். இந்த இடத்துக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள் என்பதுதான் தெரியவில்லை," என்றார் இருவரில் ஒருவர். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்; கடலும் இல்லை, பாறையும் இல்லை; நான் சுண்ணம் வெட்டியெடுக்கும் குழி ஒன்றில்தான் கிடந்தேன்.

"இங்கே எப்படி வந்தாய்? இந்தக் குழிக்குள் எப் படி விழுந்தாய்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

அப்போதுதான் இரவு முழுதும் நான் பட்ட துன் பத்தின் உண்மைவடிவம் எனக்குப் பளிரென்று விளங் கிற்று. என்னைக் கள்ள வாணிகக்காரர் தொங்கவிட்டது கடல்மீதுள்ள பாறையிலல்ல. அதன் அடிவாரத்தி லுள்ள ஒரு சுண்ணக்குழியின் அருகிலேதான். நான் தொடக்கத்திலேயே பிடியைவிட்டிருந்தாலும் செத் திருக்கமாட்டேன். ஆனால், அச்சம் என்னைக் கோழை யாக்கியிருந்தது. அவர்கள் என்னிடம் காட்டிய இரக்கத் திலும் இத்தனை கேலிக்கொடுமை இருந்தது.

நான் சாகாமல் செத்து, பிழைக்காமல் பிழைத் தேன்.

ஆனால், பழைய ஆல்ஃவிரட் ஹார்வி மீண்டும் பிழைக்கவே இல்லை. லூஸியின் சொற்களை மறுத்துக்

கடமையைப் பின்பற்றிய ஹார்வி, கள்ளவாணிகக்காரர் மீது போர்தொடுத்துப் புகழ்ஏணியின் உச்சி ஏறத் துடித்த ஹார்வி செத்துவிட்டான்.

புகழுக்கு மாருக இகழ்—பிறர் மதிப்பைப் பெறுவதற்கு மாருக என் லூஸி மதிப்பையும் என் மதிப்பையுங்கூட இழந்த நிலை—லூஸிக்குத் தக்க உயர்பதவிக்கு மாருக, அவள் வாழ்வையே மடத்துணிச்சலுக்கு இரையாக்க இருந்தநிலை இவை பழைய ஹார்வியைக் கொன்றழித்துப் புதிய ஹார்வியை உண்டுபண்ணின.

நான் என் தீர்வைப் பணியைத் துறந்துவிட்டதாகக் கடிதம் எழுதியபின்பே லூஸியிடம் சென்றேன்.

அந்த முடிவை லூஸியிடம் தெரிவித்தபின்பே அவள் கையிலுள்ள குழந்தைக்கு முத்தம் தந்தேன்.

மேற்பணியாளர்கள் வியப்படைந்தனர்—வற்புறுத்தினர்—வருந்தியழைத்தனர். நான் என் உடல்நிலைக்கு அந்தப்பணி ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறி மறுத்துவிட்டேன்.

என் முடிவின் காரணத்தை அறியாமலே, என் பழைய பணியை மதித்து எனக்கு வேறு அமைதியான பணியும் சில பரிசுகளும் தரப்பட்டன. அதைக்கூட நான் லூஸியிடம் பெருமையாகக் காட்டவில்லை.

லூஸி அடிக்கடி கேட்பாள்: "நீங்கள் அடைந்த மாற்றத்தினுல் எனக்கு வாழ்வளித்தீர்கள். அமைதி அளித்தீர்கள். ஆனுல், அந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது ஒரே நாளில்?"

"இதோ அதன் காரணத்தை நீயே கூறிவிட்டாய்! எனக்கு வாழ்வளிப்பவள் நீ. உனக்கு வாழ்வளிப்பவன்

இதோ நம் செல்வம். இருவர்க்கும் வாழ்வளிக்கத்தான் அந்தச் சனியான தொழிலை விட்டேன்!''

"சரி. எப்படிக்கிடைத்தாலும் சரி. இனிப்பு மாம் பழம் எப்படிக்கிடைத்தாலென்ன? தின்னக் கிடைத்தால் போதும்,'' என்று அவள் என் கையைக் கிள்ளினாள்.

ஏதோ அதனால் நான் காயமடைந்துவிடுவேனோ என்று, என் 'செல்வம்' லூஸியுடன் வீரமாகப் போராடத் தொடங்கினேன்.

என்னைக்காத்த செல்வத்தையும், அந்தச் செல்வத் தின் செல்வத்தையும் காப்பதில் என் புதிய கடமையைக் கட்டுப்படுத்திக்கொண்டு விட்டேன்.



ச. கிரேக்க அடிமை

என்னிடம் ஒரு கிரேக்க அடிமை இருந்தான். அவன் திடமான உடல் உடையவன். நன்ருக வேலே செய்வான். எவரிடமும் அன்பாகப் பழகுவான். யார் என்ன சீற்றம் காட்டினுலும், வாய் பேசாது இருப்பான். ஆனுலும் அவனிடம் ஒரே ஒரு குறை இருந்தது. அவன் சிரித்தோ முகமலர்ச்சியடைந்தோ நான் கண்டதில்லே.

எனக்கு இந்த அடிமையிடம் மிகவும் பரிவும் பாசமும் ஏற்பட்டது. கிரேக்கரின் இலக்கியப் பெருமைகளை நன்கு சுவைத்துத் துய்த்த நான், ஒரு கிரேக்கன் இப்படி அடிமையாயிருப்பதை விரும்பவில்லே. அத்துடன் அடிமையாக வாழும் வாழ்வில் கசப்படைந்துதான் இந்தப் பழங்குடி மரபாளன் நகையிழந்து வாடுகிருன் என்று எண்ணினேன்.

ஒருநாள் அவனேக் கூப்பிட்டு, "தம்பி, நீ எவ்வளவோ நல்லவனுக இருக்கிருய். என்னிடம் நீ எவ்வளவோ நாணயமாகவும் நடந்திருக்கிருய். ஆகவே நான் உன் அடிமைத்தனத்தை நீக்கி உன்னே நண்பனுகக் கொண்டு, நல் வாழ்வு வாழும்படி உதவி செய்யப்போகிறேன்," என்றேன்.

அப்போதாவது அவன் கட்டாயம் முகமலர்ச்சியடைவான் என்று கருதினேன். ஆனுல், அவன் முகம் தூக்குத்தண்டனே பெறுபவன் முகம்போலக் கறுத்துத் துயரடைந்தது கண்டு வியப்படைந்தேன்.

"ஐயனே! நான் அடிமையாகப் பிறக்கவில்லே. வறுமையும் வாழ்வும் கண்டுவிட்டேன். ஆனுல், அடிமையாகத்தான் நான் இருக்கத் தீர்மானித்துவிட்டேன். உங்க

ளிடம் அடிமையாகவே வாழ்ந்து இறந்தால் எனக்குப் போதும். அதற்குமேல் எனக்கு ஒன்றும் வேண்டாம். அருள்கூர்ந்து என் அடிமையை நீக்கவேண்டாம். உங்களை மன்றுடிக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் கருத்தை மாற்றிக்கொண்டாலல்லாமல் நான் அமைதி யடையமாட்டேன்," என்றான் அவன்.

அவன் விரும்பியபடியே நான் என் கருத்தை மாற்றிக்கொண்டு விட்டேன். ஆனால், அவன் மனப் பான்மை எனக்குப் பெரும் புதிராயிருந்தது. அதை அறிய ஆவல்கொண்டேன்.

"தம்பி, அடிமையாயிருக்க யாரும் விரும்பமாட் டார்கள். அடிமையாகவே பிறந்தவர்கள்கூட அதை ஒழிக்க வாய்ப்பு நேர்ந்தால் துள்ளிக்குதிப்பார்கள். நீ ஏன் அடிமையாகவே இருக்க விரும்புகிறாய்?" என்று கேட்டேன்.

"நான் செய்த பழிகள் அத்தனை, ஐயனே! அவற்றின் பயனாகத்தான் அடிமையானேன். ஆனால், அடிமையான பின் எனக்கு அமைதி கிடைத்தது. அடிமையாகப் பல தொல்லைகளுக்கு ஆளாவதனால் எனக்கு இன்னும் மன நிறைவு ஏற்படுகிறது. ஏனென்றால், நான் செய்த பழி களுக்கு இவை தக்க தண்டனை என்று நினைக்கிறேன். தண்டனை பெறுவது ஒன்றினால்தான் என் பழிகளின் வன்மை குறையக்கூடும். என் பழிகள் யாருக்கும் தெரிய வராமலும், அவற்றால் எனக்கு இகழ் இல்லாமலும் இருந்தாலும், என் உள்ளம் என்னை மதிக்கவேண்டு மானால், தண்டனைகள்மூலம் நான் அவற்றின் கோர நினைவுகளைக் கழுவியாகவேண்டும்," என்றான்.

இச்சொற்கள் அவன் வாழ்வை அறியவேண்டும் என்ற ஆவலை என்னிடம் வளர்த்தன. இதை அவன் அறிந்ததும் மகிழ்ச்சிகரமாகத் தன் வாழ்க்கை வரலாற்றைக்கூற ஏற்றுக்கொண்டான் :

"யாரிடமாவது என் பழிசார்ந்த வாழ்க்கையை எடுத்துரைத்தால், எனக்கும் ஒருவகையில் அதன் பளுக் குறையும். உங்களிடம் கூறுவதற்கு நான் இன்னும் மகிழ்ச்சியடைகிறேன். ஏற்கெனவே உங்கள் நேசத்தைப் பெற்றதனால் நான் சிறிது மனிதனானேன். என் கதை கேட்ட பின்பும் உங்கள் நேசம் நீடித்தால், எனக்கு வானகத்தில் மன்னிப்புக் கிடைக்கும் என்பதற்கு அது ஒரு நல்ல அறிகுறியா யிருக்கும்.

"நான் கிரிசில்தான் பிறந்தேன். ஆனால், என் தாய் தந்தையர் ஏழைகளாதலால், என்னை இளமையிலேயே சுமர்னு நகரத்துக்குக் கொண்டு சென்றிருந்தார்கள்.

"என் தந்தை குடிதேறலுக்கான மிடாக்கள் செய்யும் தொழிலை மேற்கொண்டிருந்தார். இதிலேயே நானும் பழகினேன். தந்தை வருவாய் மிகவும் குறைவானதால், செல்வமிக்க ஒரு யூதத் தேறல் வாணிகனிடம் நான் சம்பளத்துக்கு வேலை செய்யும்படி அனுப்பப்பட்டேன்.

"என் இருபதாம் வயதுக்குள் தாய்தந்தையர் இருவரும் தம் வறுமை வாழ்வுக்கு விடைகொடுத்து விட்டனர். எனக்குப் பணமோ வீடோ இல்லாததால், யூத வாணிகனிடம் வேலைசெய்ததுடன் அவன் வீட்டிலேயே தங்கினேன். அவனும் பெண்டு பிள்ளையற்றவன். ஆதலால் நான் கடைசியில் அவன் வேலைக்காரனாக மட்டுமன்றி, வீட்டில் வேலைசெய்பவனாகவும் அவன்

நம்பிக்கைக்குரிய பிள்ளையாகவும் இருந்து வேலை பார்த்தேன்.

"யூத வாணிகனுக்குப் பிள்ளை இருந்தால்கூட என்னை நம்பிய அளவு நம்பியிருக்கமாட்டான். அவன் இறந்தால் பிள்ளைக்கே அவன் செல்வம் சேருமாதலால், பிள்ளையாயிருப்பவன் அவன் சாவுக்கே காத்துக்கொண்டிருக்கக்கூடும். ஆனால், நானோ அவன் வாழ்வுக்குப்பின், அவன் செல்வத்தை அவன் அணுக்க உறவினரிடம் விட்டுவிட்டு, மீண்டும் துணையிலியாகத் திரியவேண்டுபவன். இந்த எண்ணம் வாணிகன் உள்ளத்தில் என் மீது மாறா நம்பிக்கையை உண்டுபண்ணிற்று.

"வாணிகனிடம் ஒரு அபிசீனிய நாட்டு அடிமை வேலை செய்தான். அவன் பாரிய உடலும் வலிமையும் உடையவன். மிகப் பெரிய மிடாக்களைக்கூட அவன் எளிதாகத் தூக்கிவிடுவான். ஆனால், அவன் சோம்பேறி. சிலசமயம் எத்தனை அடி அடித்தாலும் வேலைசெய்ய எழுந்திருக்காமல் தூங்குவான். அவன் குடிக்கத் தொடங்கினால், மிடாக்களிலுள்ள தேறலின் பெரும் பகுதிக்கு அவன் உடலே கொள்கலமாய்விடும். இத் தகையவனைக் கட்டி மேய்த்து வேலை வாங்குவது என் வேலைகளில் ஒரு தலைமையான பகுதியாகவும், அதே சமயம் நான் விரும்பாத மிகக் கடுமையான பகுதியாகவும் இருந்தது.

"என்னை அடிக்கடிச் செல்வவானாக்கியவனும் அவனே. ஆனால், மீண்டும் மீண்டும் என்னைப் பழிகாரனாக்கி, அஞ்சாத கொலைகளையும் நயவஞ்சகங்களையும் நன்றிக் கேடுகளையும் துணிந்து செய்பவனாக்கியவனும் அவனே.

"வாணிகன் தண்டனைகளைப் பொருட்படுத்தாமல் சிரித்துக் கழித்த அடிமை, நான் தண்டித்தால் சீறுவான். அப்போது அவனைக் காணவே எனக்கு அச்சமாயிருக்கும். இதனால் நான் அவனை வேலை செய்யும்படி கண்டிப்பதெல்லாம் வாணிகன் முன்னிலையில் மட்டுமே. அவர் இல்லாத சமயத்தில் அவன் திசைக்குச் செல்ல மாட்டேன். ஆனால், ஒருநாள் வாடிக்கைக்காரன் ஒருவனுக்காக அவன் எடுத்து வைக்கவேண்டிய மிடாவை எடுத்துவைக்காததுடன், அந்த மிடாவின்மீதே படுத்துக் குறட்டைவிட்டு உறங்கினான். அவனை எழுப்பாமல் வேறு வழியில்லை. நான் என்னாலானமட்டும் எழுப்ப முயன்றும் அவன் எழுந்திருக்கவில்லை. அத்துடன், 'இன்னும் ஓசை செய்தால் எழுந்து கழுத்தை நெரித்து விடுவேன்' என்று அச்சுறுத்தினான். நான் வாணிகன் வரும்வரை பேசாமலிருந்துவிட்டு, அவர் வந்தபின் மீண்டும் போய் எழுப்பினேன். உடையவர் வந்ததைத் அறியாத அவன் உடனே சீறிஎழுந்து என்மீது பாய வந்தான். அதற்குள் யூத வாணிகன் கழிகொண்டு அவனைத் தண்டிக்கப் புறப்பட்டார். அது கண்டதே அவன் வழக்கத்துக்குமீறி நல்ல பிள்ளையாக நடந்து கொண்டான்.

"ஆனால், வாணிகன் சென்றவுடன் நான் அவனைக் காட்டிக்கொடுத்ததற்காக என்மீது பழிவாங்கத்தொடங்கினான். அவர் எறிந்த கழியை எடுத்துச் சுழற்றிக் கொண்டு என்னை நோக்கி வந்தான். நான் ஒரு மிடாவின் அருகே சென்று அதைச் சுற்றிச்சுற்றி வந்தேன். அவனும் சுற்றிச்சுற்றி வருகையில் ஒரு முக்காலி தட்டி விழுந்தான். எழுந்துவிட்டால் இன்னும்

கோபத்துடன் என்னைத் தாக்குவான் என்று எண்ணி நான் தற்காப்புக்காக ஒரு கத்தியை எடுத்து வைத்துக் கொண்டேன். அவன் எழுந்திருக்குமுன் என் காலைப் பிடித்து இழுக்கவும் காலைக் கடிக்கவும் முயன்றான். நான் கையிலிருந்த கத்தியலால் அவனைத் தாக்கினேன். ஆனால், நான் சற்றும் எதிர்பாராவகையில் கத்தி நெற்றிப் பொட்டில் பட்டது. அவன் உடனே வாய் பிளந்து பேச்சு மூச்சற்று விழுந்தான்.

"செத்தவனாகப் பாவனைசெய்து அவன் என்னை ஏமாற்றப்போகிறான் என்றுதான் நான் முதலில் அஞ்சினேன். ஆனால், விரைவில் வேறுவகையான அச்சங்கள் எழுந்துவிட்டன. 'வாணிகன் வந்தால் என்ன சொல்வது? அதைவிட, காவல்துறையாட்கள் வந்து விட்டால் என்ன செய்வது? ஏழைகள் என்றால், சிறிது ஐயத்துக்கு இடமிருந்தால்கூட மறு பேச்சில்லாமல் தண்டனைக்கு ஆளாகவேண்டிவருமே!' என்று கலங்கினேன்.

"வாணிகன் வரும் நேரமாயிற்று. எப்படியாவது உடலை மறைத்துவைத்து, அன்று தப்புவோம் என்ற எண்ணத்துடன் பெருமுயற்சியின்மீது அவன் உடலை ஒரு மிடாவுக்குள் ஒளித்துவைத்தேன். மிடாவின்மீது மூடிப்பலகை பொருத்தித் தற்காலிகமாக ஆணியும் அறைந்துவைத்தேன். உடலை வேறெங்காவது ஒளித்து வைப்பதென்றும் அடிமை காணாமற் போனதற்கு ஏதேனும் பொருத்தமான கதை கட்டிவிடுவதென்றும் உறுதிசெய்தேன்.

"என் திட்டங்களுள் இரண்டாவது திட்டம் எளிதாயிற்று. வாணிகன் வந்ததும் அடிமை என்னை

அடிக்கவந்த கதையைச் சற்று மாற்றி அவன் அடித்துக் கீழே தள்ளிவிட்டு ஓடிப்போய்விட்டான் என்றேன். வாணிகன் அவ்வளவு உடல் வலுவுள்ள அடிமையை இழக்க மனமில்லாதவரா யிருந்ததனால், அவனை எப் படியும் பிடித்துவிட எண்ணி, காவல் துறைக்கு அறிவித்தார். காவல்துறையாளர் எங்கும் தேடியும் காணாதபோது, அவன் எங்கேனும் கடலில் மூழ்கி இறந் திருக்கவேண்டும் என்று முடிவு செய்தனர்.

"ஒரு திட்டம் இவ்வாறு எதிர்பாராவகையில் நிறை வேறிற்று. ஆனால், என்னுடைய முதல் திட்டம் எதிர் பாரா வகையில் தடைப்பட்டுவிட்டது. அன்று இரவு வாணிகன் தன்னுடனே என்னை இட்டுச்சென்றதால் உடலை அப்புறப்படுத்த முடியவில்லை. மறுநாள் முழுதும் இருந்தால் பிணத்தின் நாற்றத்தால் காரியம் கெட்டு விடுமே என்று நினைத்து நான் அதில் சிறு துளைசெய்து தேறலைவிட்டு நிரப்பிவைத்தேன். தேறல்சத்து உடலைக் கெடாது பாதுகாக்கும் என்பதை நான் அறிந்திருந்தேன். இம்முறையில் நான் உடனடியாக அகப்படாமல் பார்த் துக்கொண்டேன். ஆனால், உடலை அப்புறப்படுத்தும் வேலை இன்னும் கடுமையாயிற்று. ஆனால், இப்போது கடையின் வேலை முழுவதும் நானே பார்த்ததால், என் றேனும் ஒரு முழுநாள் தனி வாய்ப்புக் கிடைத்தால், என் குறைவேலையை முடித்துவிடலாம் என்றிருந்தேன். அடிமையின் உடல் இருந்த மிடாவை மட்டும் முதல் வரிசையிலிருந்து நகர்த்தி இரண்டாம் வரிசையில் நடுவில் வைத்தேன்.

"ஒருநாள் அரசியற் பணியாளர் ஒருவர் தேறல் வாங்க வந்தார். அவர் வாடிக்கைக்காரர். தேறலில்

நல்லது கெட்டது சுவையறிந்து கூறும் இயல்புடையவர். அவர் தலைசிறந்த தேறல்வகை வேண்டுமென்றார். முதல் வரிசை முழுவதையும் வாணிகன் காட்டினார். ஆனால், அதன் தேறல் எதுவும் தமக்குப் பிடிக்கவில்லை என்று கூறி அவர் இரண்டாவது வரிசையில் அடிமையின் உடல் இருந்த மிடாவைச் சுட்டிக் காட்டி, 'இதன் தேறலைப் பார்ப்போம்,' என்றார்.

"வாணிகன் கட்டளைப்படி நான் அதிலிருந்து தேறல் ஊற்றிக் கொடுக்க வேண்டியதாயிற்று. சுவையறிந்த அந்தப் பணியாளர் அதை அலக்கழித்துத் துப்பி விடுவார் என்று எதிர்பார்த்தபடியே ஊற்றிக் கொடுத்தேன். ஆனால், அவர் போக்கு நான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாயிருந்தது. அவர் அதை ஒருதடவை, இருதடவை, மூன்றுதடவை சுவை பார்த்தார். அவர் முகத்தில் வெறுப்பு இல்லை. காணாத இன்பம் கண்டவன் முகத்தில் தென்படும் களியாட்டமே இருந்தது. "ஓகோ; மிக உயர்ந்த தரத்தை இப்படி ஒளித்துவைத்து எல்லாரையும் போல ஏமாற்றலாம் என்று பார்த்தாயோ? தேவர்களுக்கும் கிட்டாத இத் தெள்ளமுதை வைத்துக் கொண்டு பத்தாம் தரத்தை எனக்குக் கொடுக்கப் பார்த்தாய். அதெல்லாம் முடியாது," என்றார்.

"உயர் குடியாளனான அந்த வாடிக்கைக்காரரின் ஐயந் தெளிவிக்க விரும்பி வாணிகன், 'அப்படி வேறுபட்ட தரங்களே என்னிடம் கிடையாதே, அண்ணா! எல்லாம் ஒருதரந்தானே?' என்றார்.

"'இதோ! நீரே இதையும் சுவைத்துப்பாரும். முதலில் தந்த தரங்களையும் சுவைத்துப்பாரும். மலைக்

கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருப்பதை உம்மால் கூட மறைக்க முடியாது,' என்றார் பணியாளர்.

"வாணிகன் சுவைத்துப் பார்த்தார். அவர் ஒத்துக் கொள்ளவே வேண்டியதாயிற்று. ஆனால், வியப்பு அவர் முகத்திலும் நிழலிட்டது. 'இந்த ஒன்றின் சுவையில் மேனி எத்தனையோ மடங்கு பெரிதாகத்தான் இருக்கிறது. ஆனால், இது எப்படி வந்தது என்று எனக்கும் தான் தெரியவில்லை' என்றார்.

"எனக்கு அந்த மிடாவின் சுவை பார்க்கச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால், வேலையின் தேவை கண்டு நானும் சுவைத்துப் பார்ப்பதுபோலப் பாசாங்கு செய்து, 'ஆகா, ஆகா' என்றேன். நான் சுவையறியாதவன் என்று யாராவது நினைத்துவிட்டால், வாணிகத் துறையில் என் மதிப்புக் கெட்டுவிடும் என்பதை நான் அறிவேன். 'இதில் முழுமேனி இருக்கிறது' என்று வாணிகன் உவமையைப் பின்பற்றிக் கூறினேன். ஆனால், உண்மையிலேயே ஒரு முழுத் திருமேனி அதில் இருந்தது என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்.

"இது போன்ற மேனிவாய்ந்த தேறல்மிடா வேறு இருக்கிறதா என்று பின்னுலிருந்த மிடாக்களையெல்லாம் சுவைத்துப்பார்த்தார் பணியாளர். வேறு இல்லை. எனவே இந்த ஒரு மிடாவின் அருமை பெரிதாயிற்று. அவர் உடனே தம் பணியாட்களை அழைத்து அதைத் தன் வீட்டிற்கே உருட்டிக்கொண்டு போகும்படி கூறினர்.

"அடிமையின் திருமேனி அடங்கியிருந்த மிடா இங்ஙனம் பணியாளர் வீடு சென்றதுகண்டு, நான் பொறி கலங்கினேன். எப்படியும் இனி அந்த மறை செய்தி

அம்பலமாவது உறுதி. அதற்குள் சுமர்ஹுநகர் விட்டே ஓடிவிடவேண்டுமென்று நான் திர்மானித்தேன். வாணிக னிடம் உடல் நலிவு, உறவினர் நோய் ஆகிய சாக்குப் போக்குகள் சொல்லிப் பார்த்தேன். பின் வேறு இடத் தில் வேலை செய்ய விரும்புவதாகக் கூறினேன். நான் வந்தபின் வளர்ந்து வரும் வாணிகத்தை எண்ணி அவர் என்னை அனுப்பிவிட மறுத்தார். அத்துடன் நான் மனமார அவருடன் இருக்க விரும்பும்படி செய்வதற் காக அவர் தம் தொழிலிலேயே எனக்குப் பாதிப் பங்கு தருவதாகக் கூறினர். அதைக்கூட நான் ஆர்வத்துடன் வரவேற்காதிருப்பது கண்டு, பாதிப்பங்கு தந்துவிட்ட தாக எழுதிக் கையொப்பமிட்ட எழுத்துப் படியையே என்னிடம் தந்து வற்புறுத்தினர்.

"எனக்கு இன்னது செய்வது என்று புரியவில்லை. எந்த நொடியிலும் பணியாளர் காவலருடன் வந்து என்னை விலங்கிட்டுச் செல்வார் என்று எதிர்பார்த்த நிலையில், பாதிப்பங்கோ முழுப்பங்கோகூட எனக்கு என்ன பயன்தரக்கூடும்? ஆனால், என் தலைவர் அன்பு விலங்கில் மாட்டப்பட்டு நான் உள்ளூரத் துடித்துப் புழுங்க வேண்டியதாயிற்று.

"வாணிகன் என்னைப் பங்காளியாக்கி ஒரு நாழிகை ஆவதற்குள் நான் எதிர்பார்த்த பேரிடி என்முன் வந்து விழுந்தது. தடதடவென்று சிலர் கதவைத் தட்டினர். திறந்தபோது பணியாளர் அனுப்பிய காவல் படைவீரர் நின்றனர்!

"நடந்த செய்தி இது; தேறல் மிகவும் தித்திப்பா யிருந்ததினாலும், மிடாவில் மூன்றில் இரண்டு பங்கு இடம் உடலும் ஒரு பங்கே தேறலுமாய் இருந்ததாலும்

பணியாளர் அதை விரைவில் காலி செய்துவிட்டார். அது இவ்வளவு விரைவில் காலியானதையும் காலியான பின்னும் கனமாயிருப்பதையும் கண்டு அதில் ஆதாயம் நாடிக் கல்லையோ கட்டையையோ வைத்திருப்பதாக அவர் எண்ணினர். வாணிகன்மீது அவர் சீற்றம் பாய்ந்தது. அவர் உடனே காவற்படை நிலையத்துக்கு விரைந்து செய்தி அனுப்பினர்.

"சூது எதுவும் அறியாத வாணிகன் அச்சமில்லாமலேயே நடந்தார்; ஆனல், நான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சென்றேன்."

"வாணிகனை நோக்கிப் பணியாளர், 'தேறல் மிடாவுக்குள் என்ன அடைத்துவைத்து எங்களை ஏமாற்றுகிருய்? நீ நல்ல தேறல் வேறு, அல்லாத தேறல் வேறு விற்பது போதாதா? இப்படிக் கொடுத்த பணத்திற்கும் வஞ்சகம் செய்யவேண்டுமா?' என்று இரைந்தார்.

"'நான் அப்படி ஒன்றும் செய்வதில்லையே?' என்ருர் அவர்.

"நானும் 'அப்படி எதுவும் எங்கள் நிலையத்தில் கிடையாதே' என்றேன்.

" அவர் இரண்டு காவலரை அனுப்பி என் கடையிலிருந்தே திறப்பதற்கான கருவிகளைக் கொண்டுவரும்படி செய்தார். மிடாவைத் திறக்கும்படி என்னைப் பணித்தார். நடுங்கும் கைகளுடன் திறந்து அப்போது தான் கண்டு திகிலடைபவன்போல் நடித்தேன்.

"என் நடிப்புப் பயன் தந்தது. செய்தியறிந்த ஒவ்வொருவரும் என் தலைவர்மீதே பழி சுமத்தினர்.

"அடிமை கறுப்பு நிறமாயிருந்தான். இப்போது அவன் உடல் தேறலில் தோய்ந்து வெண்ணிறமாயிருந்தது. அது அடிமையின் உடல் என்று எவரும் அறியவில்லை. ஆகவே உடலுக்கும் எனக்கும் எத்தகைய தொடர்பும் இருந்ததாக யாரும் எண்ணவில்லை. என் தலைவர்தான் தமக்கு வேண்டாத எவரையேனும் மிடாவில் தள்ளி இருப்பார்; அல்லது கொன்று அதில் போட்டிருப்பார் என்று யாவரும் எண்ணினர்.

"'கொலைகாரப் பயலே! இப்போது தெரிகிறது, நீ உயர்தரத் தேறல் எப்படிச் செய்கிறாய் என்று' என்று சீறி எழுந்தார் பணியாளர்.

"வாணிகன் உடல் முதல் தடவையாக நடுங்கிற்று. மறுத்து வாதாடுவதைவிடச் சமாளிப்பது எப்போதும் நல்லது என்பது அவர் பாடறிந்து கண்டமுடிபு. ஆகவே பணிவுடன் 'எப்படியோ தெரியாமல் செய்த பிழையை மன்னியுங்கள். உங்களுக்கு மிடாவுக்கு மிடா புதிய தேறலை தருகிறேன். என்னை மன்னியுங்கள்' என்றார்.

"'சரி, என் பணியாளையேவிட்டு வரவழைக்கிறேன்' என்று கூறியவண்ணம் பணியாளை அனுப்பினார். அவன் புதிய தேறல் மிடாவுடன் வந்துசேர்ந்தான்.

"என் தலைவர் மிடாவை ஒப்படைத்துவிட்டுப் பணியாளிடம் விடைபெற்றுச்செல்ல முனைந்தார். நானும் அவருடன் புறப்பட இருந்தேன். அதற்குள் பணியாளர் 'சற்றுப் பொறுங்கள். உங்கள் தேறலை வீணாக இழக்க வேண்டாம். அதற்கு வழி செய்கிறேன்' என்றார்.

"பணியாளர் தேறலுக்கு விலைதான் தரப்போகிறார் என்ற எண்ணத்தினால் வாணிகன், 'ஐயா, நீங்கள் மனி

தப் பாசம் உடையவர்கள் என்பதை நான் அறிவேன். நீங்கள் நீடூழி வாழவேண்டும்' என்று முகமெல்லாம் மகிழ்ச்சி ஒளிபொங்கக் கூறினார்.

"பணியாளர் ஒன்றும் பேசவில்லை. மெல்ல நகைத்துக்கொண்டு மிடாவிலுள்ள தேறலை வேறு கலங்களில் மாற்றும்படி ஏவலாளர்களை ஏவினார். அது முடிந்ததும் அவர் வாணிகன்பக்கம் திரும்பினார். அவர் முகம் திடுமெனக் கடுமை மேற்கொண்டது.

"'நானும் மனிதப்பாசம் உடையவன்தான். நீரும் மனிதப்பாசம் உடையவர்தான். உம்மைத்தான் நான் எல்லாவகையிலும் பின்பற்ற இருக்கிறேன்.' என்றார்.

"அதன்பொருள் புரியாமல் வாணிகன் விழித்தார். நானும் விழித்தேன். ஆனால், விரைவில் அதன் கோரப் பொருள் விளங்கிற்று. பணியாளர் மறைவான கட்டளை பெற்று ஏவலாளர்கள் என் தலைவரைச் செந்தூக்காகத் தூக்கி வெற்றுமிடாவுக்குள் திணித்தனர். முன்பே ஒழித்து ஊற்றிவைக்கப்பட்ட தேறலில் மிடாக் கொள்ளுமட்டும் ஊற்றினார்கள். என் தலைவர் கூக்குரலிட முடியாமல் துணியைத் தேறலில் தோய்த்து வாயில் திணித்தனர். விரைவில் தேறல் அவர் நெற்றிவரையும் வந்து அவரைத் திக்குமுக்காட வைத்தது.

"என்னை என்ன செய்வார்களோ என்று நான் நடுங்கி நின்றேன்.

"பணியாளர் என்னைப்பார்த்து, 'மிடாவை வழக்கம் போல் மூடு. இல்லாவிட்டால், உனக்கும் இதே தேறல் விருந்து கிடைக்கும்' என்றார்.

" தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும்வகையில் நான் என் தலைவர்மீதுள்ள பாசத்தைத் தூர எறிந்து விட்டு மூடியால் மூடி ஆணிகளைப் பதித்தேன்.

" அச்சம் இன்னும் என்னை விடவில்லை. பணியாளரின் திடீர்க் கோர உருவம்கண்டு அவர் இன்னும் என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறாரோ என்று எண்ணி நடுங்கினேன்.

" 'என்ன துணிகரக் கொலைகாரன் இவன். எத்தனை பேரை இந்தமாதிரி ஒழித்து ஆதாயமும்வேறு அடைந்திருக்கிறானோ சண்டாளன்' என்றான்.

" அவருக்கு இசைய எப்படியாவது பேசிச் சமாளிக்க எண்ணினேன் நான். 'ஆம். பல ஆள்கள் திடுமென மறைந்ததுகண்டு நான் வியப்படைந்ததுண்டு. ஆனால், செய்தி விளங்கவே இல்லை. இப்போதல்லவா தெரிகிறது,' என்றேன்.

" இந்த விடை அவருக்குப் பிடித்தமாயிருந்தது. 'நீயும் நானும்கூட இவன் தேறல்பட்டியலில் ஒரு நாள் போயிருப்போம். நல்லகாலமாகப் பிழைத்தோம். அத்துடன் சுமர்னு நகரில் எத்தனையோ பேர் உயிரையும் காப்பாற்றினோம்,' என்றார்.

" உயிர்பற்றிய என் அச்சம் தணிந்தது. இனிமேல் ஆகவேண்டிய காரியத்துக்கு அடிகோலத் துணிந்தேன்.

" ஆம். உடனடியாக அடுத்த பலியாக அவ்ர் என்னைத் திட்டமிட்டிருந்தார் என்று இப்போது நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், என்னுடன் இருந்த அபிசினிய அடிமை திடுமென மறைந்துவிட்டான். நானும் முழுதும் அறியாவிட்டாலும் சிறிது முன்னெச்

சரிக்கையுடன் வெளியேறிவிட எண்ணினேன். ஆனால், என்ன காரணஞ்சொல்லியும் மறுத்ததுடன், எப்படியாவது என்னை ஆவல்காட்டித் தங்கவைக்கும்படி கடையிலேயே எனக்குப் பங்கு எழுதித்தந்தார். என்னை அவர் பலியிடத் தீர்மானிக்கவில்லையானால், பணப் பேராவல் பிடித்த அவர் இதைச்செய்ய முன்வந்திருக்க மாட்டார் என்பது இப்போது விளங்குகிறது. இதோ பாருங்கள் அந்தப் பங்குப் பத்திரத்தை!' என்று தலைவர் எனக்குத்தந்த பத்திரத்தைக் காட்டினேன்.

"இதைப் பார்த்தபின் வாணிகன்பற்றிய தம் கருத்தில் அவருக்கு முழு உறுதி ஏற்பட்டுவிட்டது.

"'நீ நற்பேறுடையவன்தான், ஐயமில்லை. ஏனென்றால் நீ உயிர் தப்பியதுடன், இதனால் அவர் செல்வத்துக்கு முழு உரிமையாளனாகவும் வழி இருக்கிறது. ஆனால், இதில் உனக்கு என் ஒத்துழைப்பு இல்லாமல் முடியாது. நீ என் கட்டுப்பாட்டுக்கு இணங்கினால், நான் ஒத்துழைக்கவும், உன்னிடமே இந்த வாணிகத்தை ஒப்படைக்கவும் வழி செய்யமுடியும்,'' என்றார்,

"பருத்தி புடவையாய்க் காய்த்தது போன்ற மகிழ்ச்சியுடன் நான், 'தங்கள் விருப்பப்படியே நடக்கிறேன்' என்றேன்.

"'கடையையும் அதன் சரக்குகளையும் நீ எடுத்துக்கொண்டு வாணிகம் நடத்தலாம். இரண்டு 'முழுமேனி' மிடாக்களையும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். நீ அவற்றை வைத்து இந்தப் புதிய தேறல் வாணிக முறையை நடத்தலாம். ஆனால், எப்போதும் நான் என் தேவைக்கு எவ்வளவு தேறல் கேட்டாலும் அனுப்பித் தரவேண்டும். அத்துடன் உன் தலைவர் திருமேனி

அடங்கிய மிடாவின் அருகில் நான் வேண்டும்போது இருந்து அதைத் திட்டிக்கொண்டே குடிக்க இணக்க மளிக்க வேண்டும்,' என்ருர்.

"நான் இரண்டு கட்டுப்பாடுகளையும் ஒத்துக்கொண்டேன். வெளியாருக்கு நான் நடந்த செய்திகளில் எதையும் வெளியிடவில்லை. என் தலைவர் சிறைப்படுத்தப் பட்டார் என்றும், அவர் கடையை அவர் பங்காளி என்ற முறையிலேயே நான் நடத்துகிறேன் என்றும் சிலநாள் கூறினேன்.

"இரண்டு திருமேனிகளடங்கிய மிடாக்களும் மற்றவற்றைவிட உயர்ந்த இரண்டு மேடைகளில் பணியாளர் விருப்பப்படி வைக்கப்பட்டன. பணியாளர் வேண்டும்போது நான் கேட்ட கேட்ட அளவு தேறல் அனுப்பித் தந்தேன். அத்துடன் சிலநாள் இரவு நேரங் களில் அவர் கடையிலேயே தங்கி, என் தலைவர் திருமேனி இருந்த மிடாவினருகில், அவரைத் திட்டிக்கொண்டே, அவர் திருமேனித் தேறலைக் குடித்துக் கொண்டிருப்பார்.

இத்தகைய சமயங்களில் அவர் அடிக்கடி தன் னுணர்வில்லாமல் கிடப்பதும் உண்டு.

"பணியாளர் வகையில் எனக்கு எவ்வளவு தேறல் செலவானாலும், அதை நான் சட்டை செய்யவில்லை. தற் செயலாக நான் கண்ட தேறல் வாணிக மறைமுறையை நான் என் தன்னறிவு கொண்டு இன்னும் வளர்த்தேன். திருமேனித் தேறலை நான் மற்ற மிடாக்களில் கலந்து அவற்றுக்கும் அதன் சுவையை ஊட்டினேன். இவ் வகையில் எல்லா மிடாவின் தேறல்களுமே பலதரப் பட்ட திருமேனித் தேறல்களாயின. கலப்பின் அளவு கண்டு அவற்றை நான் பல தரங்களாகப் பிரித்தேன்.

பொதுவாகத் தேறல் விற்கும் விலையைவிட அவற்றின் விலையைப் பல தரங்களாக ஏற்றினேன். என் தேறலின் புகழும் அதனால் எனக்குக் கிடைத்த பெருஞ் செல்வத்தின் புகழும் சுமர்னு நகரம் கடந்து, தேறல் மாந்தும் உலகெங்கும் பரந்தது. தேறலின் இந் நறுஞ்சுவைக்குரிய காரணம் தெரியாமலே எல்லாரும் குடித்து மகிழ்ந்தனர். நான்மட்டும் அதன் நச்சுச் சுவைக்கு ஆளாகாமல், அதன் ஆதாயத்துக்குமட்டும் உரியவனானேன்.

"மூன்று ஆண்டுகள் என் வாணிகம் தங்கு தடையற்றுப் பெருகிற்று. பணியாளரும் அடிக்கடி வந்து அதன் ஆதாயத்தில் ஒரு விழுக்காடு பெறுபவர்போலக் குடித்து மகிழ்வார்; அல்லது வாணிகன் திருமேனி இருந்த மிடாவருகில் இருந்து குடித்து அவரைத் திட்டுவதில் தன்னை மறந்திருப்பார். இச்சமயங்களில் அவர் என்னை எவ்வளவுதான் குடிக்கும்படி வற்புறுத்தினாலும், நான் திருமேனி கலவாத தேறலாக எடுத்து ஒரு சிறிதே அருந்திப் போக்குக் காட்டுவேன்.

"இங்ஙனம் நான் எத்தனை பழிகளோ செய்ய நேர்ந்தாலும், பெருங்குடிக்கு ஆளாகாத ஒரு நற்பழக்கத்தால் தான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். அதுமட்டுமன்றி உங்களைப் போன்றவர் நற்பழக்கத்துக்கும் உரியவனாயிருக்கிறேன்.

"மூன்றாவது ஆண்டில் பணியாளருக்கு வேறு இடத்துக்கு மாற்றமாயிற்று. அவர் தம் படைவகுப்பை அனுப்பிவிட்டுப் போகுமுன் இறுதியாக என் தேறலை மாந்தவும், வாணிகன் திருமேனியைப் பழிக்கவும் என் நிலையத்துக்கு வந்தார்.

"அவர் அன்று மட்டுமீறிக் குடித்தார். மட்டுமீறி என் தலைவரைப் பழித்தார்.

"பணியாளர்தொல்லை இனி இராது என்று நினைத்த வுடன் எனக்கு அவர்மீதிருந்த அச்சம் குறைந்தது. அஃ துடன் சிறிது தேறலும் என்னுள் சென்று என் நாவின் நரம்புகளைத் தளர்த்தியிருந்தது. நான் அவரிடம், 'என் தலைவரை நீர் கொன்றதுதான் உண்மை; தலைவர் எந்தக் கொலையையும் செய்யவில்லை' என்றேன்.

"அவர் சீறி 'உனக்கு எப்படித் தெரியும்? நீதானே அவர் உன்னையும் கொல்ல முயன்றதாகக் கூறினாய்' என்றார்.

"நான் அடிமையின் உடல் மிடாவில் அடங்கியிருந் ததுபற்றிய கதை முழுவதையும் அவரிடம் கூறினேன்.

"அன்று அவரிடம் அதைக் கூறியிருக்கக் கூடாது என்பதைக் கூறியபின்தான் அறிந்தேன். அவர் உடனே என்மீது பாயத் தொடங்கினார். 'அவர் கொலையாளி அல்ல என்றால், நீதான் கொலையாளி. இப்போது என்ன செய்கிறேன் பார். உனக்கும் உன் தலைவன் முடிவை அளித்துவிட்டுப் போகிறேன்' என்று கூறிக்கொண்டு என்னைப் பிடிக்க வந்தார்.

"நானே இப்போது என் உயிருக்கு மீட்டும் இடரை உண்டுபண்ணிக் கொண்டேன். ஆனால், என்னைவிட அவர் மிகுதி குடிவெறி யுடையவராயிருந்ததால், சறுக்கி விழுந்தார். அவர் எழுந்தால் என் உயிர் அவர் கையில் இருந்திருக்கும். அதற்கு இடங்கொடாமல் நான் அவ ரைக் காலைப்பிடித்துப் பரபரவென்று இழுத்து, கால் பங்கு தேறல் நிறைந்த ஒரு மிடாவில் திணித்துவைத்து அவர் இன்னதென்றறியுமுன் மூடியால் அழுத்தி ஆணி யடித்து மிடாவை உருட்டிவிட்டேன். அவர் திருமேனி

அடங்கிய மிடாவும் இங்ஙனம் அடிமை மிடாவுடனும் என் தலைவர் மிடாவுடனும் இடம் பெற்றது.

"என் உயிர் தப்பிற்று. ஆனால், பணியாளர் மறைவுக்கு மக்கள் உள்ளத்தில் இயற்கையான ஒரு விளக்கம் இல்லாவிட்டால், என்மீது ஐயம் எழும். ஆகவே நான் அவர் வாளை எடுத்துக்கொண்டு சென்று, வெளியே நின்ற அவர் குதிரையின் கட்டவிழ்த்து, அதன் உடலைப் பலவிடங்களில் வாளால் குத்திக் காயப்படுத்தினேன். அது குற்றுயிருடன் ஓடிக் கீழே விழுந்தது. பின் கத்தியைக் கழுவித் துப்புரவாக்கி வைத்துக்கொண்டேன்.

"நள்ளிரவில் குதிரை ஓசை கேட்டுப் பல மக்கள் எழுந்துவந்து பார்த்தனர். நானும் அப்போதுதான் வருபவன்போல 'ஐயோ! விளக்கு வைத்து ஒரு நாழிகைக்குமேல்தானே போனார்! அதற்குள் எந்தப் பாவி குத்திவிட்டானோ' என்று கூவி வருந்தினேன். அவர் போகும்போது வைத்துவிட்டுப் போனதாகக் கூறி, அவர் வாளையும் எடுத்துவந்து காட்டினேன். எல்லாரும் 'வழியில் பணியாளர் தாக்கிக் கொல்லப்பட்டிருக்க வேண்டும். குதிரையும் காயப்பட்டே ஓடிவந்திருக்க வேண்டும்' என்று எண்ணினர்.

"என் வாணிகம் முன்னிலும் தழைத்தது. தேறலுக்குச் சுவையூட்ட இப்போது ஒன்று, இரண்டு, மூன்று திருமேனிகளாயின.

"ஆயின், அந்தோ, பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற பழமொழியை நான் மறந்து இறுமாப்படைந்தேன்.

"என் தேறல் நிலையத்துக்கு ஒரு நாள் சுமர்னாவின் முறைநாயகர் வந்திருந்தார். என் தேறலின் புகழே

அவரை அங்கே கொண்டுவந்தது. இது எனக்கு ஒரு பெரிய நன்மதிப்புக்குரிய செய்தியாதலால், நான் அவருக்கு முகமன்கூறி வரவேற்றேன். என் தேறலின் பெருமைகளைக் கூறுகையில் 'காலஞ்சென்ற பணியாளருக்கு நான் மிடாமிடாவாக அனுப்பிவைப்பது வழக்கம்' என்றேன்.

"'ஆம். கலங்களில் பணியாட்களை விட்டு வாங்க விடுவது அவ்வளவு நல்லதல்லதான். நானும் அவ்வாறே மிடாமிடாவாக வரவழைத்துக் கொள்கிறேன். முதலில் உன்னிடமுள்ள மிடாக்களை யெல்லாம் நான் சுவைத்துப் பார்க்கட்டுமா?' என்றார்.

"அவர் மிடாக்களை ஒவ்வொன்றாகச் சுவைத்துப் பார்த்தார். கடைசியில் உயர்மேடை மீதிருந்த மூன்று மிடாக்களையும் சுட்டிக்காட்டி 'இவற்றில் என்ன தரம் வைத்திருக்கிறாய்?' என்று கேட்டார். நான் 'அவை வெற்று மிடாக்கள்' என்றேன். அவர் கோலால் தட்டிப் பார்த்து 'அவை வெற்று மிடாக்கள் என்று ஏன் பொய் கூறி ஏமாற்றுகிறாய். அவற்றிலிருந்து தேறல் ஊற்றிக் கொடு' என்றார். வேறு வழியின்றி மூன்றிலிருந்தும் மூன்று கலங்கள் ஊற்றிக் கொடுத்தேன்.

"மூன்றும் முதல்தரமாயிருக்கக் கண்டதும் என் மீது அவர் சீற்றங்கொண்டு 'இந்த மிடாக்கள் மூன்றையும் நான் எடுத்துக்கொள்கிறேன்,' என்றார்.

"'அம்மூன்றுமே நான் பிறவற்றுக்குச் சுவையூட்டப் பயன்படுத்துபவை. ஆகவே, அவற்றின் விலை மிக உயர்வு' என்றேன்.

"'அப்படி என்ன விலை இருக்கும்?' என்று கேட்டார்.

"அவர் வாங்க விரும்பாதிருக்கத்தக்க முறையில் ஐந்து அல்லது ஆறு மடங்கு விலை கூறினேன்.

"'அந்த விலையே கொடுக்கிறேன். என் வீட்டுக்கு அனுப்பு' என்றார்.

"'போங்கள்; அனுப்புகிறேன்,' என்றேன். அவர் 'என் கண்முன்னாலேயே அவற்றை அனுப்பி வைத்து விட்டு மறுவேலைபார்' என்றார்.


"வேறு வழியில்லாமல் மூன்று திருமேனி மிடாக்களையும் இழந்தேன். அத்துடன் எப்படியும் அவற்றால் என் மறைசெய்தி வெளிப்பட்டுவிடுமாதலால், நான் சுமர்னாவை விட்டே ஓடிவிட எண்ணினேன். முறை நாயகரிடமே இதைத் தெரிவிக்கவும் எனக்கு ஒரு சாக்குப்போக்கு ஏற்பட்டது. வாணிகத்துக்கு உயிர்நிலையான மிடாக்கள் போனபடியால், நான் அதை மூடி விட்டுப் போகவேண்டியவனானேன் என்று தெரிவித்தேன்.

"காலமும் இடமும் வாய்ப்புக்களும் இதுவரை எனக்கு மலைபோல வந்த இடர்களைப் பனிபோல் அகலச் செய்திருந்தன. ஆனால், இப்போது அவை எனக்கு எதிராகச் செயலாற்றத் தொடங்கின. புயல்காற்று எழுந்து நான் சென்ற கப்பலை மீட்டும் சுமர்னாவுக்கே கொண்டுவந்து சேர்த்தது. மீண்டும் வேறொரு கப்பலில் என் சரக்குகளை ஏற்றிக்கொண்டு காரஃவு என்ற இடத்துக்குப் புறப்பட்டேன். ஆனால், புறப்படும் நேரத்துக்கு முன்பே வேறொரு படகில் முறைநாயகன் கப்பலைநோக்கி வருவது கண்டேன்.

"நான் கப்பல் மீகாமனிடம் சென்று என் உயிருக்குத் தப்பி நான் ஓடுவதால் முறைநாயகனிடமிருந்து என்னைக்

காக்கவேண்டுமென்றும், காத்தால் நிறையப் பொருள் தருவதாகவும் கூறினேன். ‘உன்னைக் காக்க எப்படி நான் உதவமுடியும்?’ என்று கேட்டான், மீகாமன்.

“எனக்கு மிடாவின் நினைவு வந்தது. முன் இரு உடல்களைக் கொண்ட அவை நான் ஒளித்து இருக்கவும்



கிரேக்க பணியாளனை மிடாவில் புகுத்தி மறைத்தல்

உதவும் என்று கண்டேன். மீகான் இக்கருத்தை ஏற்றான்.

மிடாவில் என்னை வைத்து மூடியிட்டு ஆணி அறைந்தனர்.

“முறைநாயகர் மீகானிடம் என்னைப்பற்றி உசாவினார். நான் கடலில் விழுந்து விட்டதாகக் கூறியதை அவர் கேட்கவில்லை. எங்கு தேடியும் காணாததால்

கடைசியில் அவன் சொற்களை நம்பி வெளியேறினர். கப்பல் புறப்பட்டது.


"ஆனால் முறைநாயகர் மீகானிடம் என் தேறல் மிடாக்களையும் என் செயல்களையும் அம்பலப்படுத்தி விட்டார்.

"கப்பல் புறப்பட்டபின் நான் வெளிவர விரும்பி னேன். மிடாவில் உள்ள புழுக்கமும் தேறலின் வாடை யும் என்னை வதைத்தன. ஆனால், எவரும் வந்து மிடாவைத் திறந்து விடவில்லை. கப்பலோட்டிகள் பேச்சிலிருந்து அவர்கள் எண்ணம் எனக்குத் தெரிந்தது. என்னைக் கடலில் மிடாவோடு எறிந்துவிட்டு என் சரக்கு களையும் செல்வத்தையும் கைக்கொள்ளவே அவர்கள் திட்டமிட்டிருந்தனர் என்று அறிந்தேன்.

"நான் மிடாவுக்குள்ளிருந்தே என்னை வெளியே விட்டுவிட்டுச் சரக்குகளை எடுத்துக்கொள்ளும்படிக் கெஞ்சினேன். எதுவும் பயனில்லை. உள்ளே புழுக்கம் தாங்காமல், 'கடலில் எறிவதானால் இப்போதே எறிந்து விடுகள்' என்று மன்றாடினேன். அவர்கள் என் துயர் கண்டு களித்தனரேயன்றி எவ்வகையிலும் இரங்க வில்லை. நான் கொலைகாரன் என்ற எண்ணம் அவர் கள் உள்ளத்தைக்!கல்லாக்கியிருந்தது.

"ஆனால், கப்பல் திடுமெனப் புயலில் சிக்கிற்று. பழிகாரனாகிய என்னால்தான் கடல் சீறுகிறது என்று ஒருவன் சொல்ல, மற்றவர்கள் அதை ஏற்று என்னை மிடாவுடன் உருட்டிக் கடலில் எறிந்தனர். புயலும் அலையும் மிடாவை உருட்டி உருட்டிக் கவிழ்த்தன. நான் மிகவும் அலைக்கழிக்கப்பட்டேன். அத்துடன் மிடா வின் சிறு துளை கடலுக்குள் அமிழும்போதெல்லாம்

நீர் உள்ளே வந்து மிடா அமிழாமல் நான் அதைத் துணியால் அடைக்க வேண்டியவனானேன். அது மேலே எழுந்தபோதெல்லாம் சிறிது நேரமாவது நல்ல காற்று உட்கொள்ளும் படி அதைத் திறந்துவிட வேண்டியவனா னேன். இறுதியில் கொஞ்சங் கொஞ்சமாகத் தண்ணீர் உள்ளேறி மிடா அமிழத் தொடங்கியது. இனி உயிர்



கிரேக்க பணியாளனை மிடாவிலடைத்துக் கடலில் தள்ளுதல்

போனது போலத்தான் என்று நான் சாவுக்கு ஒருங்கி கினேன். ஆனால், அது ஆழமற்ற இடமாதலால், மிடா மணலில் செருகிற்று. அலை தாழ்ந்ததும் மிடாவுடன் நான் அலைவாயருகே மணலில் கிடந்தேன்.

"அது ஒரு தீவின் கரையோரம். தீவிலுள்ள மக்கள் குரல் என்னைச் சுற்றிக் கேட்டது. அவர்கள் மிடாவை உருட்டிச் சென்றனர். நான் சிறிது நேரம் அரவம் காட்டவில்லை. காட்டினால் அவர்கள் அச்சத்

தால் மிடாவை அலைவாயருகிலேயே விட்டுவிட்டுப்போய் விடக்கூடும் என்று கருதினேன். சிறிது தொலை சென்ற பின் நான் மிடாவைத் திறந்து என்னை வெளியேற்றும் படி வேண்டினேன்.

"நான் நினைத்ததுபோல முதலில் அவர்கள் மிடாவுக்குள்ளிருந்து மனிதக் குரல் கேட்டு அஞ்சினார்கள். நான் அவர்கள் அச்சந் தெளிவித்தேன். 'நான் ஒரு கப்பலின் தலைவன். கப்பலோட்டிகள் எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்து என்னை மிடாவில் அடைத்துக் கடலில் உருட்டிவிட்டு, என் கப்பலையும் செல்வத்தையும் எடுக்கச் சூழ்ச்சி செய்தார்கள். அவ்வளவே என் கதை. என்னை வெளியேற்றி உதவுங்கள்' என்றேன்.

"நான் வெளியே வந்தேன். களைதீர அவர்கள் எனக்குத் தேறல் அளித்தனர். ஆனால், என் அவப்போது இங்கும் தொடர்ந்தது. நான் வந்த கப்பல் கடலருகே வந்து உடைந்தது. அதிலுள்ள பொருள்கள் பலவும் அலையில் மிதந்து கரையருகேவந்தன. மக்கள் அவற்றை எடுத்ததுடன் கப்பலோட்டிகளிலும் சிலரை மீட்டனர். கப்பலோட்டிகள் மூலம் என்னைப்பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டார்கள். ஆகவே, என் கதையிலுள்ள நம்பிக்கை தளர்ந்தது.

"தீவின் மக்கள் நடுநிலக் கடலிலேயே பேர்போன கடற்கொள்ளைக்காரர்கள். நான் அவர்கள் தலைவன்முன் கொண்டு நிறுத்தப்பட்டேன். அவர்கள் கொள்ளைக் காரர்களாதலால், என் வியத்தகு இடர்களின் கதை கேட்டு என்மீது இரக்கங்கொள்ளக்கூடும் என்று நான் நினைத்தேன். ஆகவே, தலைவன் கேள்விக்கு மறுமொழி

யாக நான் என் கதை முழுவதையும் எதுவும் விடாமல் கூறினேன்.

"தலைவன் என்னை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முகத்தில் கருணையும் இல்லை; கடுமையும் இல்லை. கேலி, நகைச் சுவை, மகிழ்ச்சி தாண்டவமாடின.

"'நீ கூறுகிறபடி பார்த்தாலும் நீ ஓர் அடிமையைக் கொன்றிருக்கிறாய். ஒரு யூதனைக் கொல்ல உதவியிருக்கிறாய். ஒரு பணியாளரைக் கொன்றிருக்கிறாய். அதே சமயம் உன் மூலமும் மற்றக் கப்பலோட்டிகள் மூலமுமே எங்களுக்கு இவ்வளவு தேறலும் செல்வமும் கிட்டியிருக்கிறது. ஆகவே, உங்கள் அனைவரின் உயிரையும் காப்பாற்றுகிறோம். ஆனால், உங்களைக் கெய்ரோ நகரில் விற்பதன் மூலம் அவற்றின் விலையை நாங்கள் பெறுவோம். நாங்கள் உங்கள் தேறலை அருந்தி மகிழ்ச்சியாயிருக்கிறோம். நீங்களும் பிழைத்துப் போங்கள்.'

"கடற்கொள்ளைக்காரர்களின் தலைவன் பேச்சிலுள்ள கேலியின் பொருள் இப்போது தெற்றென விளங்கிற்று. எல்லாருக்கும் எல்லாவகையிலும் ஆதாயந்தந்த அவன் தீர்ப்புக் கேட்டுக் கொள்ளைக்கார மக்கள் அனைவரும் களித்துக் கூத்தாடினர்.

"கெய்ரோவில் கப்பலோட்டிகளும் நானும் விற்கப் பட்டோம். கப்பலோட்டிகள் தம் நிலைமைக்கு வருந்தி நின்றனர். அவர்களைக் கொள்ளைக்காரரும் நன்கு நடத்தவில்லை. வாங்குபவர்களும் குறைந்த விலையே கொடுத்தார்கள். என் வாழ்க்கை முழுதுமே இன்பதுன்ப வேறுபாடாயிருந்ததனால், நான் என் நிலைமையை இயல் பென்று வாளா அமைதியுடன் இருந்தேன். கொள்ளைக் காரர் நன்றாக நடத்தினார்கள். கெய்ரோவில் அடிமைச்

சந்தையில் நீங்களும் நல்ல விலைகொடுத்து வாங்கி இது வரை மதிப்புடனும் அன்பாகவுமே நடத்திவருகிறீர்கள்.

"என் அடிமை வாழ்வில் அடிமைகள் நடத்தப் படுவதுபோன்று நான் கொடுமையாக நடத்தப்படவு மில்லை. அடிமைகளைப்போல நான் நடந்துகொள்ளவு மில்லை. உண்மையில் தங்களிடம் அடிமையாயிருக்கும் போது நான் காணும் அமைதி, இதுவரை எங்கும் எனக்கு இருந்ததில்லை.

"நான் மீட்டும் விடுதலை பெற்றால் முன்போன்ற சூழல்களில் சிக்கி இன்னும் பழிகள் செய்ய நேருமோ என்று அஞ்சுகிறேன். ஆகவேதான் உங்கள் அடிமை யாகவே இருந்து என் குறைநாளையும் இன்றுபோல எவ ருக்கும் தீங்கு செய்யாத நல்வாழ்வாகக் கழிக்க அவாவு கிறேன்."

என் நல்அடிமையின் கதை கேட்டு நான் பெருமூச்சு விட்டேன். அவன் இயற்கையில் கெட்டவன் அல்ல. ஆயினும் அறிவுடையவன் அவன். சூழல் அவன் தன் அறிவைக் கெட்டவழியிலேயே பயன்படுத்தச் செய்தது. என்னிடம் அடிமையாயிருப்பதுகூட அவனுக்கு நற்சூழ லைத் தருகிறது என்றெண்ணி நான் மகிழ்ந்தேன். பெய ருக்கு அடிமையாக, ஆனால் நண்பனாகவே அவனை நடத்தி வருகிறேன்.

மாணவர்க்கேற்ற

கதை நூல்கள்

		ரூ.
கிரேக்கக் கதைகள்	—முதற் புத்தகம்	0
,,	—இரண்டாம் புத்தகம்	0
இன்சுவைக் கதைகள்	—முதற் புத்தகம்	0
,,	—இரண்டாம் புத்தகம்	0
திருக்குறள் விளக்கக் கதைகள்	—முதற் புத்தகம்	1
,,	—இரண்டாம் புத்தகம்	1
பழமொழி விளக்கக் கதைகள்	—முதற் புத்தகம்	0
,,	—இரண்டாம் புத்தகம்	0
ஜேன் அயர்		1
புறநானூற்றுக் கதைகள்		0
ஆண்டியின் புதையல்		0
பௌத்தக் கதைகள்		1
கதாமஞ்சரி		1
பஞ்ச தந்திரம்		1